VISIT…

ரமணிசந்திரன்
கிழக்கு
வெளுத்ததம்மா
முழுநாவல்

அன்றைய மீட்டிங் தன்னை இவ்வளவு தூரம் பாதித்து விடக்கூடும் என்று எட்டாத கற்பனையில் கூட மீரா எண்ணியிருக்கவில்லை. பாதிப்பை உணர்ந்த பிறகும் கூட அவளால் அதை நம்ப இயலவில்லை.

ஆறு ஆண்டுகள்!

நீண்ட நெடிய ஆறு ஆண்டுகளாகப் பயின்று வைத்திருந்த அமைதி அப்படிப் பறந்துவிடுமா?

எதையோ இழந்துவிட்டாற்போல என்னவோ கிட்டாமல் போனதுபோல நெஞ்சுக் கூட்டினுள் ஏன் இந்தத் தவிப்பு?

அன்றைய நிகழ்ச்சிகளை அசைபோடக்கூட உள்ளூர அவளுக்கு அச்சமாக இருந்தது.

அச்சமென்ன? அதற்கு அவசியமே இல்லையே என்று வெகு சிரமப்பட்டு ஓர் அலட்சியத்தை வருவித்துக் கொண்டு அவள் நிமிர்ந்தபோது அவளது காண்டஸா, கேட்டின் வழியே வழுக்கியபடி சென்று அவளது வீடு என்று சொல்லப்படும் மாளிகையின் முன்னே சென்று நின்றது.

சூழ்நிலையை உணர்ந்து சுதாகரித்து அவள் திரும்புமுன் பணியாளர் ஒருவன் ஓடி வந்து கார்க் கதவைத் திறந்து விட்டுப் பணிவுடன் ஒருபுறம் ஒதுங்கி நின்றான்.

தன் உடைக்குப் பொருத்தமாக எடுத்துச் சென்றிருந்த வெள்ளை நிறக் கைப்பையைக்கூட மறந்து, இயந்திரமாய் இறங்கி வீட்டுப் படியேறினாள் மீனா.

நேராக அவளது அறைக்குள் சென்றுவிட்டால், குளிரக் குளிர ஷவரில் குளித்துவிட்டால் இந்தக் கொதிப்பு அடங்கி விடுமோ!

ஆனால், கொதிப்பா இது?... கொஞ்...சம் கூடக் கோபமே இல்லையே!

முகத்துக்கு நேராகப் 'பொய்க் கணக்குச் சொல்லி ஏமாற்றப் பார்க்கிறீர்கள்' என்று அவன் குற்றம் சாட்டும்போது கூட ஆத்திரம் வரவில்லையே.

ஆனால், உடம்பெல்லாம் எரிகிற மாதிரி இந்த அனலைக் குளிர்ப்பதே நினைவாக மாடிப்பக்கம் திரும்பியவளுக்குத் தன் அறையில் இருந்த ஆள் உயரப் படங்கள் நினைவு வந்தன.

அவைகளைப் பார்த்தால் அமைதி திரும்பக் கூடுமோ என்று எண்ணி ஓர் எட்டு எடுத்து வைத்தவள் தயங்கி பக்கவாட்டில் இருந்த 'ஃப்ரெஞ்ச்லின்டோ'வைத்

திறந்து கொண்டு இறங்கித் தோட்டத்திற்குச் சென்று மரத்தடிகளில் ஆங்காங்கே போடப்பட்டிருந்த ஆசனங்களுள் ஒன்றில் அமர்ந்தாள்.

சீராக வெட்டப்பட்டிருக்கும் பாந்த புல் தரையும், இடை இடையே வட்டப் பாத்திகளில் பூத்துக் குலுங்கும் மலர்ச் செடிகளும் ஆங்காங்கே மரங்களுமாக அந்தப் பரந்த தோட்டம் எப்போதுமே அவளுக்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் தருவது வழக்கம்.

இன்று அதுவும் தோற்றது.

இத்தனைக்கும் வானம் கொஞ்சம் அதிக நீலமாக, இலைகள் கொஞ்சம் அதிகப் பசுமையாகத் தான் தெரிகிறது. மலர்கள் கூடக் கொஞ்சம் அதிக அழகாகத்தான் விரிந்திட்டன... ஆனாலும்...

''என்ன நடந்தது மருமகளே!''

சற்றுத் திகைத்து ''ஒ... ஒன்றுமில்லை மாமா'' என்று பணிவுடன் எழுந்தாள் மீரா.

''பரவாயில்லை. உட்காரம்மா.'' என்று தானும் அமர்ந்து கொண்டார் சேதுபதி.

அவள் மீண்டும் அமரும் வரையில் பொறுத்திருந்து விட்டுப் பின் ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்?'' என்று விசாரித்தார். ''வந்து ஒரு காபி கூடக் குடிக்கவில்லை? இங்கேயே கொண்டு வரச் சொல்லிவிட்டு வந்தேன்'' என்றார் கரிசனத்துடன்.

பாசத்தைப் பொழியும் இவரிடம் என்னவென்று சொல்வது?

மனதில் ஏதோ குறை தெரிகிறது. அறிமுகத்தின்போது அவன் கை குலுக்கிய போது ஏதோ மின்சாரம் பாய்ந்ததுபோல இருந்தது! அதிலிருந்து மனம் அலை பாய்கிறது... என்றா?

ஆறு ஆண்டுகளாக மீரா அவரிடம் உண்மைதான் பேசி வந்திருக்கிறாள்.

ஆனால், இன்று உண்மை சொன்னால் அந்த அன்புருவம் எப்படித் துடித்துப் போகும்!

யோசித்தவாறே, ''அ... அதில்லை மாமா. நம் பினாஸ்டிக் தொழிற்சாலையின் சொத்து பற்றி சொன்னால் வந்திருக்கும் ஆள் ஒத்துக் கொள்ள மாட்டேன் என்கிறார். 'அஸெட்சை' அதிகப்படுத்திச் சொல்கிறோமாம்...'' என்றாள்.

''எவ்வளவாம்'' என்று சுருக்கமாக வந்தது கேள்வி.

அவள் பதில் கூற வாயெடுக்கவும் கைகாட்டி அடக்கினார். காபி ட்ரேயுடன் வந்த பணியாளிடம் ட்ரேயைத் தனக்கும் மருமகளுக்கும் இடையே வைக்குமாறு ஜாடை காட்டினார்.

அவன் அகன்றதும் தனக்கு ஒரு கப்பை எடுத்துக் கொண்டு, ''இப்போது சொல்? எவ்வளவு கூட்டிச் சொல்கிறோம் என்கிறார்கள்!'' என்று வினவினார்.

''ப... பதினைந்து லட்சம்...''

அவன் வெகு திருத்தமாய் ஒவ்வொரு அயிட்டமாக அலசியது நினைவு வந்தது.

அவன் சொனன பணக் கணக்கு அல்ல.

நேரான நாசியின் கீழ் செதுக்கினாற் போல உதடுகள். அனாவசியமான அலட்டல்கள் எதுவும் இன்றி, பிசிறற்ற ஆழ்ந்த குரலில்... அது என்ன குரல்!

''பதினைந்து என்றால் ஏழு அதிகம்தான் என்கிறான். கில்லாடிதான். அவ்வளவாகக் கண்டுவிட மாட்டார்கள் என்று நம் மானேஜர் சொன்னது தப்பாகி விட்டதே'' என்ற மாமனாரின் குரல் அவளைத் திடுக்கிட வைத்தது.

சற்று நிதானித்த பிறகே அவரது வார்த்தைகளின் பொருள் உறைக்க, ''மாமா!'' என்றாள் அதிர்ச்சியுறு ''பொ... பொய்க் கணக்கா கொடுத்தோம்?'' என்று இந்தக் கள்ளத்தனத்தில் தனக்கு சம்பந்தமே இல்லை என்ற போதும் தன்னையும் உள்ளிட்டே கேட்டாள்.

''பிசினஸ் என்றால் கொஞ்சம் திரிசமன் இல்லாவிட்டால் கையில் ஒன்றும் தங்காதம்மா. பார், இதை அவர்கள் ஒத்துக் கொண்டிருந்தால் ஏழு லட்சம் அதிகமாக நம் பங்குக்கு வரும் இல்லையா? ஆனால், பதினைந்து என்றால், அவன் எட்டு அதிகம் பெறப் பார்க்கிறான். அதற்கு விடக்கூடாது. அடுத்த மீட்டிங்கில் அதுவரை விட்டுக்கொடு. அதற்குமேல் வேண்டாம். நஷ்டமாகி விடும்'' என்றார் சேதுபதி.

''ஆனால், ஏற்கனவே நஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கும் தொழில்தானே மாமா. அவர் முடியாது என்று விட்டுவிட்டால் நமக்கு மேலும் மேலும் நஷ்டந்தானே. மூடவோ, ஆள் குறைப்பு செய்யவோ, கூட வழியில்லாமல் யூனியன் தகராறு வேறு...''

ஆறு ஆண்டுகளாக சேதுபதி அவளுக்குப் புகட்டி வந்த பொருளாதாரம் பேசியது.

''அதுவும் சரிதான். புது வழியால் முயற்சிக்கலாம் என்று பழக்கம் இல்லாத தொழிலில் இறங்கியது பிழையென்று தோன்றுகிறது... ஆனால், மீரா, அவர்களைப் பொறுத்தவரை இது ஒரு விஸ்தரிப்புதான்... வேறு வழியில்லாவிட்டால் இன்னும் இரண்டு லட்சம் விட்டுக்கொடு. அதற்கு மேல் வேண்டாம்... ஒன்று இரண்டிலெல்லாம் சிதம்பரம் இவ்வளவு கஞ்சத்தனம் பார்க்க மாட்டார் என்று கேள்வி. கொஞ்சம் பெரும் போக்கான மனிதர் என்பார்கள்?''

ஒரு சின்ன அமைதிக்குப் பின் மனமின்றியே ''அவர் வரவில்லை, மாமா'' என்றாள் மீரா மெல்லிய குரலில்.

''பின்னே?''

''அவருடைய மகன்.''

''யார்...?... எங்கேயோ ஆந்திரா பக்கம் தொழிலைப் பார்த்துக் கொண்டு இருந்தான் என்று கேள்வி... அவன் வந்திருக்கிறானா? தகப்பனைவிட இவன் கெட்டிக்காரன் போலத் தெரிகிறது. உடனே கண்டுபிடித்து விட்டான் பார்.''

ரொம்பக் கெட்டிக்காரர் என்று ஏனோ அனாவசியமாகப் பெருமிதப்பட்டது அவள் மனது.

உடனே தப்பு செய்த உணர்வோடு சற்றே குன்றினாள். எதிராளியைப் போய்ப் பாராட்டுவார்களா?

''சுருசுருவென்று கறாராய்ப் பேசினானாக்கும்! அதுதான் டல்லாகி விட்டாயா? நானானால் பெரியவர் சாது; அதிலும் பெண் என்றால் இன்னம் கொஞ்சம் பெரும் போக்காய் இருப்பார் என்று நினைத்து உன்னை அனுப்பினேன்... போகட்டும். நாளைக்கு நானே போகிறேன்'' என்றார சேதுபதி.

மாமனார் சென்றால் மறுநாள் அவளால் அவனைப் பார்க்க முடியாதே என்ற ஒன்று மட்டும் அந்த வினாடியில் மனதில் பட மீரா ''இல்லையில்லை. நானே போகிறேன்'' என்றாள் அவசரமாக.

உடனே மாமனார் ஏதும் தவறாக எடுத்துக் கொள்வாரா என்று அஞ்சியவளாக, ''உங்களுக்கு உடம்பு சரியில்லையே என்று சொன்னேன்'' என்று சேர்த்துக் கொண்டாள்.

''லேசான காய்ச்சல்தான். இன்று மதியத்துக்கு மேல் அதுவும் இல்லை. நாளை நன்றாகிவிடும். நானே பார்த்துக் கொள்கிறேன்'' என்று அவர் முடித்துவிட உள்ளூரச் சோர்ந்தாள்.

சற்றுப் பொறுத்து, ''இன்னும் ஏன் இப்படிச் சோர்ந்து கிடக்கிறாய்?'' என்று கேட்டார் அவர்.

குரலில் இருந்த எரிச்சல் புரிய, ''தலைவலி'' என்று சமாளித்தாள். ''குளித்துவிட்டுக் கொஞ்சம் ஓய்வு எடுத்தால் சரியாகிவிடும்'' என்று கூறிவிட்டு அதைச் செயல்படுத்துபவள் போல எழுந்து தன் அறைக்குள் சென்றாள்.

நிமிர்ந்து பாராமல் குளியல் அறைக்குள் புகுந்தாள்.

நன்றாகக் குளிரக் குளிர ஷவரை முகத்திலேயே அடித்துக் குளித்துவிட்டு 'டிரஸ்ஸிங்' ரூமுக்கு வந்தாள்.

அன்றிரவு அவள் அணிய வேண்டிய உடை அணி மணிகள் எல்லாம் ஒழுங்குற எடுத்து வைக்கப்பட்டிருந்தன.

இயந்திரமாய் அந்த இளம் பச்சை நிற கார்டனை உடுத்தியவளின் பார்வை அருகில் இருந்த நகைகளின் மேல் விழுந்தது.

விசித்திர வேலைப்பாடு அமைந்த பச்சை நிறக் காதணிகளின் கீழே சின்னதாய் ஒரோரு மரகதங்கள் ஒளியைச் சிந்தின.

அருகிலிருந்த மெல்லிய சங்கிலியில் டாலராய்க் கோக்கப்பட்டிருந்த அந்தப் பெரிய எமரால்ட், அதன் மதிப்பு தெரியாத அந்த வயதிலும் பிரமிப்பைத் தந்தது

நினைவு வந்தது.

'இதெல்...லாம் எனக்கே எனக்கா!' என்று வியந்தது கூடத்தான்.

'உலகில் விலையில்லாமல் கிடைப்பது எதுவுமே கிடையாது' என்று எப்போதோ படித்தது ஏனோ நினைவு வந்தது.

இதன் விலை என்ன?

அந்த நகைகளை மெல்ல ஒதுக்கி விட்டுப் பொட்டு டப்பாவை எடுத்துத் திறந்தாள்.

பச்சை நிற ஸ்டிக்கர் பொட்டு!

எப்போதுமே அப்படித்தான். அந்தந்த சேலைகளின் நிறங்களுக்கு ஏற்ப ஸ்டிக்கர் பொட்டுதான்.

'ஹோ'வென்று நெஞ்சை அடைத்துக் கொண்டு வர, டப்பாவை அப்படியே போட்டு விட்டு 'டிரஸ்ஸிங் டேபிள்' முழுவதும் தேடினாள்; அவள் தேடியது அதன் ஒரு டிராயரிலும் இல்லை.

கண்களில் நீர்முட்ட மற்ற இடங்களிலும், அடுத்த அறையிலும் கூடத் தேடினாள்.

திடுமென ஒரு நினைவு வர, வார்ட்ரோபினுள் இருந்த ஒரு கைப் பையைத் திறந்து துழாவினாள்.

கைகள் நடுங்க அதிலிருந்த சிறு காகித பொட்டலத்தை எடுத்தாள்.

ஒரு தரம் கோயிலுக்குச் சென்றபோது தந்த பிரசாத பாக்கெட்.

முதல் மடிப்பைப் பிரித்தாள்.

திருநீறு. மெல்ல அடுத்த மடிப்பைப் பிரித்தால் அதில் கொஞ்சமாய்க் குங்குமம் இருந்தது. விரலால் தொட்டு நெற்றியில் இடமுயன்றால் கை வெகுவாக நடுங்கியது.

டிரஸ்ஸிங் டேபிள் பரப்பில் முழங்கையை ஊன்றி இடது கையால் பொட்டிடும் விரலைப் பற்றி, முகத்தை அருகில் கொணர்ந்து ஒருவாறு குங்குமத்தால் திலகம் வைத்துக் கொண்டாள்.

வேறு எந்தவித ஆபரணங்களும் இல்லாமல், மாசுமறுவற்ற முகத்தில் அந்தத் திலகம் ரத்தினமாய் ஒளிர்ந்தது.

பல ஆண்டுகளாகப் பார்த்தறியாத விதமாய் அந்த முகம் அன்னியமாய் அவளை மருட்டியது.

கண்ணாடிப் பிரதிமையை வெறித்தபடி அமர்ந்திருந்தவளைப் படுக்கை அறையில் இருந்த 'இன்டர்காம்' அழைத்தது.

கனவில் நடப்பவள் போல மெல்ல எழுந்து சென்று ரிசீவரைக் கையில் எடுத்தாள்.

''அம்மா, நீங்க இன்னும் வரலீங்களேம்மா. அய்யா சாப்பாடு எடுத்து வைக்கச் சொன்னாருங்கம்மா'' என்று பவ்வியமாய் ஒலித்தது பணியாளனின் குரல்.

''இதோ வருகிறேன்'' என்று அவசரத்துடன் எழுந்த பதில் தொண்டைக்குள்ளேயே அடங்கிப் போயிற்று.

கீழே சென்றால் எத்தனையோ கேள்விகள் வரக்கூடும்.

ஆனால், அதற்காக... சற்று யோசித்துவிட்டு, ''கொஞ்சம் வயிறு சரியாக இல்லை. காசி. ஒரு வேளை பட்டினி போட்டால் சரியாகிவிடும். பால்கூட வேண்டாம். எனக்கு... நான் தூங்கப் போகிறேன்... என்று மாமாவிடம் சொல்லிவிடு'' என்று சொல்லி அவன் மேலே பேசுமுன் ரிசீவரைக் கீழே வைத்துவிட்டாள்.

பழக்கமற்ற பொய்யால் நெஞ்சுகள் குறுகுறுத்தது. பொய்யை மெய்யாக்குவது போல,

லேசாகத் தலையில் கூட வலி முணுமுணுவென்றது. படுத்துத் தூங்கினால் எல்லாம் சரியாகிப் போகும் என்று எண்ணிப் படுத்தாள்.

நான்கு சுவர்களிலும் ஆள் உயரத்தில் நின்று கேசவன் சிரித்தான்.

'எனக்கா துரோகம்? முடியுமா உன்னால்?' என்ற எக்காளமா?

அல்லது, 'எனக்கேதுரோகமா? ஆனாலும் என்னால் என்ன செய்ய முடியும்?' என்று வருத்தத்தை உள்ளடக்கிய முறுவலா?

கண்களை மூடிக் கொண்டாலும் கூடப் படங்களின் மேல் ப்ளோகஸ் செய்திருந்த விளக்குகள் இமைக்குள் குத்தின.

அந்த விளக்குகளை உள்ளிருந்து அணைக்கவும் முடியாது.

'பவர்கட்' என்றாலும், கூட ஜெனரேடர் உடனே அந்த விளக்குகளுக்கு உயிர் கொடுத்து விடும்.

''உன் புருஷன் கேசவனுக்கு இருட்டு என்றாலே பிடிக்காதம்மா. அதனால்தான் அவனுடைய சமாதிக்குள் கூட இருபத்திநாலு மணி நேரமும் விளக்கு எரியும்படி ஏற்பாடு பண்ணியிருக்கிறேன். அதே 'கனெக்ஷன்'தான் இதற்கும்... உனக்கும் எப்போதும் அவன் துணையிருக்கும். தனிமையே தோன்றாது...''

அந்த 'வயர்' வழியே கேசவனே அங்கே வந்து அவளை உறுத்து விழிப்பது போல ஓர் உணர்வில் அவளது உடல் சிலிர்த்தது.

அவசரமாக எழுந்தவள் பால்கனிக்கு ஓடிச் சென்று கதவைச் சாத்தினாள். அங்கேயே வெறும் தரையில் சரிந்தவள் கடும் குளிரைக் கூட உணராமல் அப்படியே உறங்கிப் போனாள்.

மறுநாள் காலையில் விழிப்பு வந்தபோது சற்று நேரம் என்ன ஏது என்று ஒன்றுமே புரியவில்லை மீராவுக்கு.

குளிருக்கு அடக்கமாகத் தன்னியல்பாய்ச் சுருட்டி மடக்கிக் கொண்டு கிடந்த கைகால்கள் வலியால் அசைய மறுத்தன. முனகியபடியே முயன்று கண்ணைத் திறந்தாள் வெட்ட வெளியாய் வானம் விரிந்து பரந்து தெரிந்தது.

தூக்கிவாரிப் போட அவசரமாக எழுகையிலேயே எல்லாம் நினைவு வந்தது.

சேச் சே! என்ன மடத்தனம்! மாமா மட்டும் பார்த்திருந்தால்...!

விரைவாகப் பார்வையைச் சுழற்றி சுற்று முற்றும் அலசினாள்.

தோட்டத்தில் கூட யாரும் கண்ணில் படவில்லை.

கீழ்த்திசையில் சிவந்து வந்த வானம் அப்படி ஒன்றும் நேரமாகி விடவில்லை என்பதை உணர்த்தியது.

ஓர் ஆசுவாசப் பெருமூச்சுடன் உள்ளே சென்றாள்.

கேசவனின் முகம் வழக்கம் போல முறுவலித்தது.

உதட்டைக் கடித்துக் கொண்டு ஒரு கணம் நின்றவள் மெல்லக் குளியல் அறைக்குள் புகுந்தாள். காலை வேலைகள் முடிந்து வழக்கமான தூய வெண்மையில் கீழிறங்கிச் சென்றாள்.

காலை உணவு வேளை முழுவதும், 'நீயே போயேன்' என்ற மாமனாரின் வார்த்தைகளுக்காகக் காதைத் தீட்டிக் கொண்டு காத்திருந்தாள்.

ஆனால், அவரோ, அன்றைய பத்திரிகையில் வந்திருந்த இரண்டு 'பப்ளிக் இஷ்யூ'வைப் பற்றிப் பேசினாரே தவிர அன்றைய மீட்டிங் பற்றி அவருக்கு நினைவு இருந்ததாகவே தெரியவில்லை.

தானாகவே அந்தப் பேச்சை எடுக்கவும் அவளுக்கு ஒரு மாதிரியிருந்தது.

கடைசியாக எழ முன், அவளைச் சற்றுக் கூர்ந்து நோக்கிவிட்டு, ''என் சுரம் உனக்கு வந்துவிட்டதுபோல் தெரிகிறதே. முகம் எல்லாம் கணகணவென்று இருக்கிறது. ஒரு 'மெட்டாசின்' போட்டுக் கொள். குணமாகவில்லை என்றால் எனக்கு டாக்டர் கொடுத்த பிரிஸ்கிரிப்ஷன், என் மேசையில் இருக்கிறது. ஒரு 'கோர்ஸ்' வாங்கிவரச் சொல்லிச் சாப்பிடு. பாண்டியன் மருந்துக்கு எப்படியும் குணமாகிவிடும்'' என்றார்.

பாண்டியன், நகரில் பெரிய டாக்டர்களில் ஒருவர். வைத்தியமும் விலை உயர்ந்ததாகத்தான் இருக்கும். சேதுபதிக்குத் தலைவலி என்றாலும், அவர்தான். மீராவுக்கு சேதுபதியே வைத்தியம் சொல்வார்.

ஆனால், பெரிதாக நோயென்று மீராவுக்கு எதுவும் வந்ததும் இல்லை.

அவள் தலையாட்டியதும் எழுந்தவர், ''இன்று நீ அலுவலகத்துக்குக்கூட வரவேண்டாம். நானே பார்த்துக் கொள்கிறேன்'' என்று கூறிச் சென்று விட்டார்.

'முட்டாள்!' என்று தன்னையே திட்டிக் கொண்டாள் மீரா.

ஆரோக்கியமாக இருப்பது போலக் காட்டுவதற்காக முகத்தில் ஏதாவது 'மேக்கப்'பாவது போட்டுக் கொண்டு வந்திருக்கலாம்?' இந்தப் பேச்சுவார்த்தைக்கு என்றிரா விட்டாலும்கூட ஏதோ அலுவலகத்துக்காவது சென்றிருக்கலாம்; அங்கே... அங்கே அவனை - அந்த சசி காந்தனைத் தற்செயலாகக் குறைந்தபட்சம் தூரத்திலேனும் பார்த்தும் இருக்கலாம்.

இப்போது அவனைக் கண்ணால் பார்க்கக் கூட வழியில்லையே என்று அவளது மனம் பரிதவித்தது.

இந்தத் தவிப்பு அவளை அதிரவும் வைத்தது;

அவனைப் பாராதது பெரிய நஷ்டம் போல அவள் ஏன் மனம் சோர வேண்டும்?

முந்தைய நாளின் குங்குமத் திலகம் அசந்தர்ப்பமாக நினைவு வந்து அவளைக் கலங்க செய்தது.

அதைவிடவும் அவளுடைய மாமாவிடம் அதை மறைக்கத் தோன்றியது மேலும் திகைக்க வைத்தது.

இந்த ஆறு ஆண்டுகளாக எந்த ஒரு நிகழ்ச்சியையும் மீரா சேதுபதியிடம் மறைத்தது இல்லை.

இன்று... நேற்றிலிருந்து அவளுக்கு என்ன நேர்ந்து விட்டது.

தவமிருந்து பெற்ற மகன் இறந்த பிறகு மருமகளுக்காக அவர் எத்தனை எத்தனை விதமாய் உதவி செய்திருக்கிறார்!

அவரிடம் ஒளிப்பதும் மறைப்பதும் எவ்வளவு பெரிய துரோகம்!

தான் மிகவும் இழிந்து விட்டாற்போல உணர்ந்தாள் மீரா.

கதவுப் புறம் அசைவு தெரிந்தது.

சாப்பாட்டு மேசையைச் சுத்தம் செய்யும் பணியாள்.

இன்னமும் தட்டில் இருப்பதை அளைந்து கொண்டிருப்பதை உணர்ந்து சட்டென எழுந்தாள்..

கைகழுவி விட்டு தன் அறைக்கு விரைந்தவள் அங்கே முகத்தை - முக்கியமாக நெற்றியை, அங்கே ஒன்றும் இல்லா விட்டாலும்கூட அழுந்தத் தேய்த்துக்

கழுவித் துடைத்தாள்.

முந்தைய நாள் இட்ட திலகத்தைதான் மனதால் அழித்தாளோ!

அலமாரியில் அடுக்கி இருந்த புத்தகங்களை ஆராய்ந்து, அங்கிருந்த இராமாயணப் புத்தகத்தை எடுத்துச் சென்று அமர்ந்து அதில் கருத்தைச் செலுத்த முயன்றாள்.

கம்பருடைய கைவண்ணம் எப்போதுமே அதைப் படிக்கும்போது அவளுக்குச் சுற்றுப்புறம் மறந்து போகும்.

அன்று சற்று நேரம் அது முடியவில்லை. ஆயினும் சின்னச் சின்ன சலனங்களின் பின்னர் மெல்ல மெல்ல மனம் ராம காவியத்தில் ஆழ்ந்தது.

விசுவாமித்திர முனிவரின் யாகம் காத்து, அகலிகையைப் பெண்ணாக்கி மிதிலை நகர் செல்லும் வரை - மிதிலையில் ராமனும் சீதையும் சந்திக்கும் கட்டம் வரை கதை தடங்கல் இன்றி ஓடியது.

கடைசியாக 'அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாளில்' தயங்கி நின்றது.

ஒரு பார்வையால் அப்படி 'மாறிப் புக்கு இதயம் எய்த' முடியுமா?

முன்தினம்...

அந்த சசிகாந்தனும்கூட வரிசிலை அண்ணல் ராமனைப் போல ஆஜானுபாகுதான். நல்ல உயரமும் கூட.

சாதாரணப் பெண்களுள் அவள் சற்று அதிக உயரம்தான். அவளே அவனை அண்ணாந்து பார்க்க வேண்டியிருந்ததே.

அதுவும் காலில் 'ஹீல்ஸ்' உள்ள செருப்பு வேறு!

பொதுவாக அவளுக்குக் குதிகால் உயர்ந்த செருப்புகளை அணியப் பிடிப்பது இல்லை. ஒரே நெட்டைக் கொக்காகத் தோன்றும் என்ற எண்ணம்.

ஆனால், சேதுபதிதான், இந்த 'ஹீல்'சுடன் சேர்ந்து அவள் உயர்ந்து நிற்கையில் சூழ இருப்போரின் மரியாதை கிட்டும் என்று அணிய வைத்திருந்தார். 'இந்த வெள்ளாடையும், உயரமும் எல்லோரையுமே உன்னிடம் பணிய வைக்கும்' என்பார்.

இத்தனை காலமும் அது நடப்பாகவும் இருந்தது.

ஆனால்... முன்தினம் சசிகாந்தன் பணிவைக் காட்டவே இல்லை. ஆயினும் குற்றம் சாட்டும்போது கூட அவன் கோபத்தையும்தான் காட்டவில்லை.

ஒருவேளை அவனுக்கும் பாதிப்பு நேர்ந்திருக்குமா?

ஒரு பார்வையிலா?... சேச்சே!

அவசரமாகக் கேசவனை மனதில் கொணர முயன்றாள். அது ஒன்றும் அவ்வளவு கடினமாகவும் இல்லை. வீட்டில் எப்போதும் கண்ணில் பட்டுக்

கொண்டு இருப்பவன்தானே.

ஆனால், விலை உயர்ந்த வேலைப்பாடுடன் கூடிய தங்க நிறமான நாலு சட்டங்களின் நடுவே நின்று ஒரே மாதிரிப் புன்னகை செய்ய மட்டுமே அவனால் முடிந்தது.

சிறுகேலி இழையோடே ஒற்றைப் புருவத்தை ஏற்றி இறக்கவோ, 'எங்களிடமும் மதிப்பிட்டு முறை தெரிந்தவர்கள் இருக்கிறார்கள், தெரியுமோ?' என்று கிண்டலாகக் கூறி வெளேரென்ற பற்கள் தெரிய முறுவலிக்கவோ அவனால் இயலவில்லையே!

அறிமுகத்தின்போது மற்றவர்களைப் போல மரியாதையாகக் கைகுவித்து வணங்காமல், கை குலுக்குவதற்காக சசிகாந்தன் கைநீட்டினானே. மறுப்பது அநாகரீகம் என்று மீரா கொடுத்ததும், அவனது நீண்ட வலிய விரல்களுக்குள் அவளது மெல்லிய கை மறைந்தது அப்போதுதான் முன்னே நடப்பதுபோல நினைவு வந்தது. ஒரே சீராய் வெட்டப்பட்டிருந்த அவனது நகங்கள்கூடத் துல்லியமாய் மனதில் தோன்றின.

பிடிவாதமாகக் கேசவமூர்த்தியின் விரல்களை நினைவில் கொண்டுவர முயன்றாள் - நிச்சயத்தின்போது வைரமோதிரத்தை அவனது விரலில் சற்று நடுங்கியபடி போட்டுவிட்ட ஒல்லியான விரல்களை ஓரளவு கற்பனா சக்தியுடன் நினைவுபடுத்திக் கொள்ள அவளால் முடிந்தது.

"அளவு சிறிசப்பா..." என்ற மூக்குக் குரலைக் கூடவும்தான்.

சசிகாந்தனின் ஆழ்ந்த தெளிவான குரலின் முன்னே... அந்தக் கம்பீரமான குரலை மாமா இப்போது கேட்டுக் கொண்டு இருப்பாரே.

அந்த நேர் நாசியையும், கூர்ப்பார்வையையும் கூட அவளுடைய மாமா பார்த்துக் கொண்டு இருப்பார்; அவளால் முடியவில்லையே.

மீண்டும் மனம் அலைபாயத் தொடங்கியது.

புத்தகத்தை மூடி வைத்து விட்டுச் சற்று நேரம் குறுக்கும் நெடுக்குமாக நடந்தாள்.

தனிமையும் ஒய்வும் மேலும் துன்புறுத்தின.

ஒரு முடிவுக்கு வந்தவளாகக் கைப் பையை ஆராய்ந்து விட்டு வெளியே கிளம்பினாள்.

வீட்டோடு இருக்கும் பொறுப்பாளரை அழைத்து மாமா கேட்டால் ஆசிரமத்துக்குச் சென்றிருப்பதாகக் கூறும்படி பணித்தாள். இரு நூறு ரூபாயைக் கையெழுத்திட்டு வாங்கிக் கொண்டு வெளியே வந்தாள்.

வராந்தாவில் அவளைக் கண்டதும் காண்டசாவைக் கிளப்பிய சூசையை மறுத்துவிட்டு, வெள்ளை ஃபியட்டின் டிரைவரிடம் காரை எடுக்கச் சொல்லி ஏறிக் கொண்டாள்.

எப்போதுமே பிசினஸ் தொடர்பாகச் சற்று பந்தாவாகச் செல்ல வேண்டிய இடங்களைத் தவிர மற்ற இடங்களுக்கு காண்டசாவில் செல்ல அவளுக்குப் பிடிப்பதில்லை. அதிலும் ஆசிரமத்துக்கு என்றால் அறவே மறுத்து விடுவாள்.

வழியில் ஒரு கூடைப் பழங்களை வாங்கிக் காரில் போட்டுக் கொண்டு சென்றவளுக்கு அங்கே, நல்ல வரவேற்பு.

சேதுபதி. அந்த ஆசிரமத்தின் புரவலர்களில் ஒருவர். ஆனால், அதற்காக மட்டுமின்றி அடிக்கடி அங்கே செல்வதும், மற்றவர்களோடு சேர்ந்து பழகுவதும், வேலை செய்வதும் அவளுக்கு வழக்கம்தான். அதிலும் மிகவும் சிறிய குழந்தைகள் வேலை என்றால், மிகவும் பிடிக்கும்.

பச்சைக் குழந்தைகளைக் கவனிப்பதற்கு எத்தனை உதவிக் கரங்கள் கிடைத்தாலும் நல்லதுதானே; ஆகவே அங்கேயும் எதிர்ப்பு கிடையாது.

வெகு நேரம் சந்தோஷமாகக் கழிந்தது.

இனித் திரும்ப வேண்டியதுதான் என்று எண்ணி அவளது கையிலிருந்த குழந்தையை உள்ளே ஒப்புவித்து விட்டு வரவென்று அவள் எழுந்தபோது, ''ஹல்லோ மீரா!'' என்று ஒரு குரல் அழைத்தது.

அவன் குரல்.

நெஞ்சு படபடக்க, இனிதாய் அதிர்ந்து, திரும்பாமலே உணர்ந்து, மெல்லத் திரும்பி, சன்னமாய் புன்னகைத்து, ''ஹல்லோ, மிஸ்டர் சசிகாந்தன்!'' என்றாள் மீரா பதிலாக.

''பெரிதாக மிஸ்டர் போட்டு என்னை அந்நியம் ஆக்குகிறீர்களே, மீரா. நான் என்ன, உங்களை மிஸ் மீரா என்றா அழைத்தேன்? ஆனால், மிஸ் தான் இல்லையா? ச்ச. என்ன ஆச்சரியம்!'' என்று வியப்பு காட்டினான் சசிகாந்தன்.

பதில் சொல்லத் தோன்றாமல் மலங்க விழித்தாள் மீரா.

மற்றவர்களைப் போல அவளது கோலத்தை ஒத்துக் கொண்டு, அதை அனுசரித்துப் பேசாமல் சசிகாந்தன் அதைப் பற்றி வெளிப்படையாகப் பேசியது மீராவுக்குப் புது அனுபவம்.

இந்தப் பேச்சில் ஏற்கனவே இருந்த நெஞ்சுப் படபடப்பு இன்னும் சற்று அதிகம் ஆயிற்று.

எதையாவது சொல்லி அவன் வாயை அடைக்கலாம் என்றால் மொழியே

மறந்தாற்போல வாயில் பேச்சு வர மறுத்தது. கையில் இருந்த ஆறுமாதக் குழந்தையின் பிஞ்சு விரல்களில் பார்வையைப் பதித்தபடி பேசாமல் நின்றாள்.

அவளது முகத்தையே பார்த்தபடி ஒரு சிகரட்டைப் பற்ற வைத்த அவனோ விடுவதாக இல்லை. ''ஆனால்... அனாவசியமாய், அனியாயமாய் இந்தக் கோலம் ஏன் மிஸ் மீரா?'' என்று தொடர்ந்து விசாரித்தான்.

அந்த 'மிஸ்'சில் அவன் கொடுத்த அழுத்தத்தில் மீராவின் வாய்ப்பூட்டு கழன்றது. ''அவர் ஒரு வாரம் அதிகமாக வாழ்ந்திருந்ததால் இதே கோலம்தான்'' என்றாள் தலையை நிமிர்த்தி.

''ஆனால், அந்த ஒருவாரம் மிஸ்டர் கேசவமூர்த்தி வாழவில்லையே. அப்படியிருக்க இது எப்படி நியாயமாகும்?''

நியாயப்படுத்தி மாமனார் சொன்ன மேற்கோள்களும் எடுத்துக்காட்டுகளும் அடியோடு மறந்துபோய், தன் மனமும் அவனோடு கூடச் சேர்ந்து கொண்டு நியாயம் இல்லைதான் என்று ஒத்துப் பாடவும் மீரா அரண்டு போனாள். இது என்ன மடத்தனம்! என்ன முட்டாள்தனம்!

அவள் தன்னைக் கடிந்து முடிக்குமுன், ஒரு பொறுமையிழந்த மூச்சுடன், ''நிஜத்தில் வாருங்கள் மீரா. கண்ணில் படாத ஒன்று கருத்தில் நிலைப்பதில்லை என்பார்கள். நீங்களானால், கண்ணிலோ கருத்திலோ என்றுமே பட்டிராத ஒன்றுக்காக இந்த விரதம் காப்பானேன்?'' என்று படபடத்தான்.

முடிந்த அளவு மிடுக்கைக் குரலில் கொணர முயன்று, ''எப்படித் தெரியும்? அன்றே என் கருத்தில் பட்டிருக்கலாம்'' என்று தன் மனதையும் கூடச் சேர்த்து அடக்கும் முயற்சியாகப் பதில் கூறினாள் மீரா.

''பதினேழு வயதிலா?!'' என்று தன் நம்பிக்கையின்மையை வெளிப்படையாகவே காட்டினான். உடனேயே, ''அத்த வயதில் உங்களுக்குத் திருமணம் நிச்சயித்ததற்காக உங்கள் பெற்றோரைச் சிறைக்குள் தள்ளியிருக்க வேண்டும்'' என்றான் கோபமாக.

''ரொம்பவும் சின்னப் பெண்ணாயிற்றே...'' என்று தாயார் தயங்கியதும், சேதுபதி வீட்டிற்கு வந்து ஏதேதோ பேசியதும் தந்தை சந்தோஷமாகத் தலையாட்டியதும், அவர் குரலை உயர்த்தியதும் பிறகு தாயார் ஒருவாறு ஒப்பியதும் நினைவு வந்தது.

ஆனால், இந்தப் பதினேழு வயது சமாச்சாரம் எல்லாம் இவனுக்கு எப்படித் தெரியும்.

அவளது முகத்திலேயே மனதைப் படித்தவன் போல அவன் பதிலிறுத்தான். ''விசாரித்துத் தெரிந்து கொண்டேன். தெரிந்துக் கொள்ளும் ஆர்வம் வந்த பிறகு தெரிந்து கொள்ளாமல் ஏன் இருக்க வேண்டும்'' என்றான் முறுவல் மலர.

அப்படியானால் அவனுக்கும் பாதிப்பு நேர்ந்ததா?

இதயம் மீண்டும் குறுகுறுக்கத் தொடங்கியபோதே பயமும் வந்தது.

ஊகூம் அதெல்லாம் நல்லதற்கு இல்லை. தெளிந்த தடாகத்தில் கல்விழுந்தாற்போல இன்றுவரை உள்ள அமைதி பறந்து போய்விடும்..பிறகு...

பிறகு என்னென்ன துன்பங்கள் நேரக் கூடுமோ. எதற்கு இந்தக் கஷ்டம் எல்லாம்.

''எல்லாம் ரொம்பப் பழைய கதை. இப்போது எதற்கு?''

''ஆமாமாம். பழைய கதைதான். நீங்கள் பாட்டிக் கிழவியாவதற்கும் முன்னே நடந்ததல்லவா? அறுதப்பழசாகத்தான் இருக்கும். அதெல்லாம் இப்போது எதற்கு?'' என்று சிரியாமல் ஒத்துப் பாடினான் அவன்.

''பா... பாட்டியா!'' என்று அவள் திகைக்கவும் அவன் சட்டெனச் சிரித்து, ''வெறும் இருபத்து மூன்றில் 'பழைய்ய கதை' என்று பேசுகிறீர்களே!'' என்றவன் சட்டென சீரியசாகி, ''உங்கள் இருபத்தி மூன்று வயதுக்குத் தகுந்தபடி பேசுங்கள் மீரா. நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள். இதோ உங்கள் கையில் இருக்கிற மாதிரிக் குழந்தை ஒன்று உங்களுக்கே சொந்தமாக வேண்டும் என்று உங்களுக்குத் தோன்றியது இல்லையா'' என்று வினவினான்.

''இல்லை'' என்று தயக்கமின்றிப் பதிலிறுத்தவள் உடனே திகைத்தாள்.

அவள் சொன்ன பதில் உண்மைதான்.

இந்த ஆசிரம குழந்தையாகட்டும், அவளுடைய உடன் பிறந்த தங்கை ராதாவின் குழந்தையாகட்டும், தூக்கிக் கொஞ்சும்போது மனதுக்கு இதமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்குமே தவிர தனக்கென்று ஒரு குழந்தை வேண்டும் என்ற ஆசை அவளுக்கு உண்டானதே இல்லை.

பிறப்பிலேயே மறுக்கப்பட்டுவிட்ட ஒன்று என்ற எண்ணத்தில் ஊறியிருந்த மனது அந்த மாதிரிக் கற்பனை செய்து பார்த்ததுகூட இல்லைதான்.

ஏன், இன்றுகூட இந்தக் குழந்தையோடு விளையாடிய போதெல்லாம் உருவாகாத எண்ணம் வினாடிக்குள் தோன்றி விசுவரூபமாய் வளருவதை உணர்ந்த மீரா பிரமித்துப் போனாள்.

திகைப்புடன் கையிலிருந்த குழந்தையின் முகத்தைப் பார்த்தாள். ஏதோ விளையாட்டுக் காட்டப் போகிறாள் என்று எண்ணிக் குழந்தை பொக்கை வாய் மலரச் சிரித்தது.

இந்தக் குழந்தை ஏன் அவளுடையதாக இல்லை?

துக்கம் நெஞ்சை அடைக்கக் குழந்தையை மார்போடு இறுக அணைத்தவளின் பார்வையில் அவனது விலை உயர்ந்த ஷூ பட்டது.

நீளக்கால்களும், அணுவளவும் அதிகச் சதையற்ற நெடிய உடலும், அசுன்ற தோளும் அவளையே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த முகமும் கூட.

யார் இவன்? ஒரு பேச்சில் அவளை எட்டாத தற்கெல்லாம் ஏங்க வைக்கிறானே!

எண்ணி எண்ணிப் பார்த்தாலும் இரண்டே நாள் பழக்கம்! நேற்றும் இன்றும் மட்...டும்.

சட்டென ஒன்று தோன்ற, ''நீங்கள் 'மீட்டிங்' போகவில்லை?'' என்று வினவினாள்.

''போனேனே'' என்றான் அவன் இலகுவாக. ''வேறெ முக்கிய வேலை இருந்ததால் ஒரு மணி நேரம் முன்னதாக முடிக்க சொல்லி விட்டேன்.''

''ஓ!''

அங்கே முடித்துவிட்டு நேராக இங்கே வந்திருக்கிறான்! அப்படியானால், முக்கிய வேலை அவளாமா? ஆனால்...

உருக முயன்ற மனதை அடக்கி, ''நீங்கள்... இங்கே எதற்காக வந்தீர்கள்?'' என்று கேட்டாள் மீரா.

''உங்களைச் சந்திக்க'' என்று தயக்கமின்றி பதில் வரவும், ''நான் இங்கிருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று மடக்கினாள்.

அவன் முகத்தில் ஒரு ரகசியப் புன்னகை படர்ந்தது. ''அதைப் பிறகு ஒரு நாள் சொல்கிறேன்'' என்றான் இலகுவாக.

அவன் எதையோ மறைப்பது அவளுக்குப் புரிந்தது. ஒருவேளை வேறு காரியமாக அங்கே வந்து விட்டு அவளைக் கண்டதும் அவளுக்காக வந்ததாகக் கூறி ஐஸ் வைக்கிறானா!

அல்லது மெய்தான் சொல்கிறானா?

இளைஞன் என்று சொல்லக்கூடிய ஆண்களை யாருடனும் சமநிலையில் நின்று சகஜமாகப் பேசிப் பழக அவளுக்கு வாய்ப்பு இருந்தது இல்லை.

உடன் பிறந்தவர்களுடன் கூட, எப்போதாவது மீரா தாய்வீட்டுக்குச் செல்லும்போது வீட்டில் இருந்தால் பொதுப்படையாகச் சில பேச்சு பேசுவதோடு சரி.

கொடுப்பது ஒரு வழிப்பாதையாக இருந்ததால் மனம் விட்டுப் பேசும் பாதை அடைபட்டுப் போயிற்றோ என்னவோ?

பலன் இன்று சசிகாந்தனின் பேச்சை ஊடுருவி உணர மாட்டாமல் திகைக்க நேர்ந்தது.

உண்மை பொய் பற்றிய குழப்பம் ஒருபுறம் இருக்க, அவன் சொன்ன 'பிறகு ஒரு நாளில்' மனம் ஜிவ்வென்று சிறகடித்துப் பறக்கத் தொடங்கியது.

பிறகு ஒருநாள் என்றால் தொடர்ந்து அவளை அவன் சந்திக்கப் போகிறான். சந்திக்க விரும்புகிறான் என்றுதானே அர்த்தம்? அடுத்து அவளை பார்க்கும்போது இப்படி வெற்று வண்ணத்தில் நில்லாமல் நல்ல மாம்பழ மஞ்சளில், பச்சையும் கறுப்புமாகப் பூப்போட்ட ஷிபானில் சென்றால் என்ன செய்வான்?

''...ஆயிரம் விதமாக உன்னை அலங்கரித்துப் பார்க்க ஆசைப்பட்டானம்மா. அவன் ஆசைப்பட்டு சேர்த்த அத்தனையும் உனக்காகக் காத்திருக்கின்றன. இன்னும் நீ விரும்புவுதையும் வாங்கிக் கொள்ளலாம். ஆசை தீர அணிந்து கொள். ஆனால், எல்லாவற்றையும் இந்த அறைக்குள் மட்டும் வைத்துக் கொள். பார்க்கும் உரிமை அவனுக்கு மட்டும்தான் உண்டில்லையா? மற்றபடி இந்த அலங்காரங்களோடு நீ மற்றவர் கண்ணில் பட்டால் உன்னைத் தப்பாக நினைப்பார்கள், தங்கம். ஏதோ! அவனும் உன் கூட வரும்படி இருந்திருந்தால் ஒரு கழுதைக்கும் உன்னிடம் அத்து மீறும் தைரியம் வராது. அதற்குக் கொடுத்து வைக்காதபோது நீதானே ஜாக்கிரதையாக இருந்து உன் கவுரவத்தையும் உன் புருஷன் கவுரவத்தையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் மருமகளே?''

இன்றுவரை அந்த கவுரவத்துக்கு குந்தகம் ஏற்பட்டதே இல்லை.

இன்று இவன் முன்னே வண்ணச் சேலை கட்ட நிற்கும் எண்ணம் ஏன் வந்தது? எப்படி வரலாம்?

பெரிய பிழை புரிந்து விட்டாற்போல மீராவின் மனம் கலங்கிப் போயிற்று.

இவன் முன்னிலையிலிருந்து விலகிச் சென்றுவிட்டால், இன்றுவரை தோன்றிராத இந்த எண்ணங்கள் இனியும் தோன்றாமல் இருந்து விடலாம் இல்லையா?

திரும்பி ஓர் எட்டு எடுத்து வைத்தாள்.

''விடை பெறாமலே கிளம்புகிறீர்களே, மீரா?''

மெல்லத் திரும்பியவள் அவனது நீட்டிய கரத்தைப் பார்த்து உள்ளூர தயங்கும்போதே அவளது கரம் தானாக நீண்டு அவன் கரத்தைச் சந்திக்கக் கண்டாள்.

மருண்ட மனதுக்கு, வெறும் மரியாதைக்காக என்று சமாதானமும் சொன்னாள்.

ஆனால், அவளது கையைப் பற்றி லேசாகக் குலுக்கிய வலிய கை மரியாதையின் எல்லைக்குள் அவளை விடுவிப்பதாகத் தெரியவில்லை.

எல்லை மீறலைக் குறிப்பால் உணர்த்த எண்ணி, லேசான முகச் சுளிப்புடன் இணைந்திருந்த கைகளை உறுத்து விழித்தவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

எப்படி அவனது நீண்ட விரல்கள் அவளது கையை அழுந்தப் பிடித்திருந்தனவோ அதேபோல மீராவின் மெல்லிய விரல்களும்கூட சசிகாந்தனின் பெரிய கையைத் தம்முள் சிறைப்படுத்தவே முயன்று இறுகப் பற்றியிருந்தன.

மீராவின் முகம் கன்றிச் சிவந்து போயிற்று.

அவனை நிமிர்ந்து பார்க்கக் கூட முடியவில்லை.

தீச் சுட்டாற்போலக் கையை உதறியவன் திரும்பி ஓட்டமும் நடையுமாக ஆசிரமத்தை அடைந்து குழந்தையை ஒப்புவித்து விட்டுக் காருக்குள் ஓடினாள்.

எப்படி வீடு வந்து சேர்ந்தாள் என்பதே அவளுக்குத் தெரியாது.

அவன் என்ன நினைத்திருப்பான்!

பெரிய விரதம் காக்கிறவள் போல எடுப்பாக ஏதேதோ பேசிவிட்டு அவன் மரியாதைக்காகக் கைகுலுக்கினால் விடாமல் பிடித்துக் கொண்டு... சீச்சி! மீரா வெகுவாகக் குன்றிப் போனாள்.

இந்த அவமானம் ஒருபுறம் என்றால், அவளுக்கே தெரியாமல் அவளும் இருந்துகொண்டு இப்போது அவளையே மீறிப் பட்மெடுக்கும் புரியாத உணர்வுகளைப் பற்றிய அச்சம் ஒருபுறமாய் அவளைத் துன்புறுத்தின.

இதே கலக்கமாய்ச் சென்றவள் சோபாவில் புதைந்து கிடந்த சேதுபதியைக்கூடக் கண்டாளில்லை.

''என்னம்மா, ஏதாவது குழந்தைக்கு ரொம்பவும் உடம்பு முடியவில்லை யா?'' என்ற அவரது குரலில் சற்றுநேரம் ஒன்றும் புரியாமல் விழித்தாள்.

''ச்சு உலகத்தில் எத்தனையோ கோடிப்பேர் ஒருத்தர் இல்லாவிட்டால் ஒருத்தருக்கு நோய், நொடி, சாவு என்று வந்து கொண்டேதான் இருக்கும். ஏதோ, நம்மாலானது 'டொனேஷன்' கொடுக்கிறோம். விதி இருந்தால் பிழைக்கும் என்று விட்டுவிடாமல் இதற்கெல்லாம் முகம் வாடலாமா?''

ஓ! ஒருவழியாய் அவர் பேச்சில் மீராவுக்குத் தலைகால் புரிந்தது. ஆசிரமத்துக்குச் சென்று வந்தவளின் முகம் சரியில்லை என்றால் அங்கே யாருக்கோ உடம்பு சரியில்லை என்று அவள் வேதனைப்படுவதாக எண்ணுகிறார்!

விஷயத்தை ஒருவாறு உணர்ந்து, அவள பதிலை யோசிக்குமுன் அவரே தொடர்ந்தார். ''ஏதோ நம் வட்டத்துக்குள் என்றால் வருத்தப்பட வேண்டியதுதான். அப்படி உயிருக்கு உயிரான புருஷனை இழந்தும்கூட எப்படியோ சமாளித்துத் தேறிவிடவில்லையா?''

சிரமப்பட்டு முகபாவத்தை மாற்றிக் கொண்டு புன்னகை புரிய முயன்றாள் மீரா.

''ஆ இது சரி.'' என்றார் மீண்டும் சோபாவில் சாய்ந்து கொண்டு. ''எதுவானாலும் சரி மனதில் இருப்பதை - அது சந்தோஷமோ துக்கமோ வெளியே காட்டுகிறது சரியில்லை, மீரா. எதிராளி நம் முகத்தைப் பார்த்தே அதற்குச் சரியாகத் தாக்குதலை அமைத்துக் கொள்ளுவான், பார்.'' என்று கற்றுக் கொடுத்தார்.

''இனிக் கவனமாக நடந்து கொள்கிறேன், மாமா'' என்று பணிவுடன் கூறியவள், 'முக்கியமாக உங்கள் முன்னே' என்று உள்ளுரச் சேர்த்துக் கொண்டாள்.

ஆனால், இவர் எதிராளி இல்லை.

அண்ணனைப் படிக்க வைத்து, வேலைக்கு டெப்பாசிட் கட்டி, தங்கைக்குத் திருமணம் செய்து வைத்து, தங்கை கணவருக்கு வேலை தந்து... இவர் நிச்சயமாய் எதிராளி இல்லை. அவர் மனம் கஷ்டப்படக்கூடாது என்றுதான் இந்த ஒளிவு மறைவு.

மேலும், அவள் மேல் அவர் கொஞ்சமும் சந்தேகப்படவில்லையே! இவ்வளவு நம்புகிற வரை அவள் வஞ்சிப்பதா!

அந்த சகிகாந்தனைப் பாராமல் ஒதுங்கி விட்டால் இந்த சஞ்சலத்துக்கும் இடமில்லை; தந்தைக்கும் மேலான இந்தப் பெரியவரிடம் எதையும் மறைப்பதும் அவசியமில்லை.

மறுநாள் நல்ல வேளையாக ஞாயிற்றுக் கிழமையாக இருந்தது.

ஞாயிற்றுக் கிழமைகளில் சேதுபதியின் மேல் மட்ட செட்டின் பெரும்பான்மையினர் தங்களுள் யாராவது ஒருவர் வீட்டில் கூடுவார்கள். பக்தி பெருக்கெடுத்து ஓடும் பஜனை, பூஜை பிரசங்கம் என்று.

பத்துவிதப் பதார்த்தங்களோடு விருந்து நடக்கும். யாருடைய விருந்து உயர்வு என்று போட்டிகூட இருக்கும். ஆனால், 'பிரஷர்', 'ஷுகர்' என்று அனேகமாக அவ்வளவுமே குப்பைக்குத்தான் போகும். நாவை அடக்க முடியாமல் உண்டு விட்டு அவதிப் படுவோரும் உண்டு.

பெண்கள் பஜனையிலும் பூஜையிலும் ஈடுபட்டு இருக்கையில் ஆண்கள் பிசினஸ் பேசுவார்கள். போரடித்தால் 'பிரிட்ஜ்' விளையாடுவார்கள். ஊர் வம்பும் உண்டு.

கற்பூர ஆரத்தி சமயம் தவறாமல் வந்து கன்னத்தில் போட்டுக் கொள்வார்கள்.

சேதுபதியைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஞாயிறும் இதில் தவறவே மாட்டார்.

அன்றையப் பஜனையில் மீரா முதல் முதலாக ஒரு வித்தியாசத்தை உணர்ந்தாள். மூப்பினால் தழதழத்த குரலில் மூச்சு வாங்கியபடியே மற்றவர் பாடுகையில் இளமையும் இனிமையுமாகத் தன் குரல் தனித்து ஒலிக்கக் கேட்டாள். சிறு வியப்புடன் விழிகளைச் சுழற்றுகையில் சுற்றியிருந்த அத்தனை பேரும் அவளுடைய தாயாரை விடவும் அதிக வயதினராய் இருப்பதை உணர்ந்து

நெஞ்சு துணுக்குற்றாள்.

மூப்பு ஒரு குற்றமில்லைதான்; அவளுக்கும் ஒருநாள் வயதாகி விடத்தான் போகிறது. ஆனால், அதற்காக...

உங்கள் இருபத்தி மூன்று வயதுக்குச் சரியாகப் பேசுங்கள், மீரா...

''என்ன மீரா, பாட்டு மறந்து விட்டதா?'' என்று அருகில் இருந்த பெண்மணி கேட்டதும் தான், தான் பாட்டை நிறுத்தி விட்டிருப்பது புரிந்தது.

அவசரமாக யோசித்து, தொண்டையைத் தொட்டு தண்ணீர் குடித்து வருவதுபோல ஜாடை செய்துவிட்டு எழுந்து உள்ளே சென்றாள்.

இந்த வீட்டிலும் அவளோடு ஒத்த வயதுப் பெண்கள் உண்டு. ஒரு மருமகளும், இரண்டு மகள்களும்.

மூத்த மகள் திருமணமாகி வெளியூரில் இருக்கிறாள். அடுத்தவள் தோழி வீட்டுக்குச் சென்றிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், பிரவீணா வீட்டில்தான் இருப்பாள். நன்றாகப் பழகுகிறவளும்கூட.

மடமடவென்று பிரவீணாவை நாடிச் சென்றாள்.

பூட்டியிருந்த கதவைத் தட்டக் கையைத் தூக்கியவளை உள்ளிருந்து கேட்ட சிணுங்கல் ஒலி தடுத்தது.

''ம்க்கும், போங்கள். திடீரென்று பஜனையை முடித்துவிட்டு, கற்பூர ஆரத்திக்கு என்று அழைப்பார்கள். நீங்கள் செய்கிற வேலை, குளிக்காமல் போய் நிற்கவும் முடியாது; கூப்பிடுகிற நேரம் குளித்துக் கொண்டு இருந்தாலும் வம்பு. ப்ளீஸ்...'' என்று கொஞ்சலாகக் கெஞ்சிற்று பிரவீணாவின் குரல்.

''என்ன செய்வது? இருந்திருந்து வாரத்தில் ஒரு ஞாயிறு தானே இப்படி ஃப்ரீயாக இருக்க முடிகிறது. அன்றும் பாட்டு பஜனை என்றால் எப்படி? அப்பா, அம்மா வயதுக்குச் சரிதான் செய்யட்டும். இருந்திருந்து எனக்கே முப்பது வயதுதான் ஆகிறது. இந்த வயதில் போய் ஒரு ஞாயிற்றுக் கிழமையை வீணாக்கு என்றால், பிரவீணா அது உலகமகா அநியாயம். எனக்கு அநியாயம் செய்து பழக்கமில்லை.''

ஓசையற்று மெல்லத் திரும்பி நடந்தாள் மீரா ஒரே யோசனை.

வயதுக்குச் சரியாய்... என்றானே. வயதில் மறுக்கப்பட்டு விட்டால் என்ன செய்ய முடியும்?

ஆனால், அப்படியும் இல்லை என்றானே. அந்த சசிகாந்தன்... மீராவின் உள்ளம் மேலும் குழம்பிப் போயிற்று.

ஆயினும் முந்தைய நாள் பெற்ற அறிவுரை நினைவிருக்கவே மனம் முகத்தில் வெளிப்பட்டு விடாமல் கவனத்துடன் நடந்து கொண்டாள்.

சனிக்கிழமையன்று செய்த தீர்மானத்தின்படி திங்களன்று, ''இன்றும் லேசாகத் தலைவலி இருந்து கொண்டே இருக்கிறது, மாமா. அத்தோடு

ராதாவைப் பார்த்தும் நாளாயிற்று. காலை முழுவதும் படுத்திருந்துவிட்டு அப்புறமாய் ராதாவையும் பார்த்துவிட்டு வரலாம் என்று இருக்கிறேன். நான் கையெழுத்திட வேண்டிய ஃபைல்களை வீட்டுக்கு அனுப்பிவிடச் சொல்கிறீர்களா?'' என்று சேதுபதியிடம் கேட்டாள்.

மிகவும் நீண்டதாகத் தோன்றிய பத்து வினாடிக் காலம் சேதுபதி மருமகளின் முகத்தைக் கூர்ந்து கவனித்தார்.

விரலில் பளபளத்த ஒற்றை வைரத்தை நாசூக்காகக் கைக்குட்டையால் துடைத்தபடி, ''யாரம்மா அது? ஓ...! நாம் நகை போட்டுக் கல்யாணம் செய்து வைத்தோம். அந்தப் பெண்ணா? அவள் புருஷனுக்குக் கூட ஒரு வேலை போட்டுக் கொடுத்தோம் இல்லையா?'' என்றார் யோசனையாக.

''ஆமாம் மாமா அவளுக்கு ஒரு நல்ல வாழ்வு அமைந்ததே உங்கள் கருணையினால்தான்'' என்றாள் மீரா குரலில் நன்றி ததும்ப.

''என்ன பெரிய கருணை? உன் கூடப் பிறந்த பெண்ணுக்கு இதுகூடச் செய்ய மாட்டேனா! இதைப் போய்ப் பெரிதாகப் பேசுகிறாயே! வயதாகிவிட்டதால் நிறைய மறந்து போகிறது. அதனால்தான் அதைப்பற்றி நான் கேட்டதே. கேட்டது, தப்பாகிப் போய்விட்டது. கருணை கிருணை என்று பெரிய வார்த்தையெல்லாம் பேசி என்னை வெட்கப்பட வைக்கிறாய். என் பெரிய மருமகளுக்கு உறவு என்றால் பிறகு நான் செய்வதற்கு அளவு, கணக்கு என்று ஒன்று உண்டா?''

பன்னிப் பன்னி அவர் பேசப் பேச எவ்வளவு பிரியமானவர் என்று உருகிப் போனாள் மீரா.

ஒருவாறு பேசி முடித்துக் கிளம்பிய சேதுபதி மீண்டும் திரும்பி, ''காண்டசாவில் போம்மா. முந்தா நாள் ஃபியட்டில் சென்றாயாமே கேசவனுடைய மனைவிக்கு இல்லாமல் வேறு யாருக்காக அந்த ஏ.சி. வண்டி இங்கே நிற்கிறது? ம்?'' என்று கூறி வெளியேறினார்.

கேசவனுடைய மனைவி!

மற்றவர்களைக் கையெட்டும் தூரத்துக்கு அப்பால் நிறுத்தி வைக்க வேண்டியவள். அந்த சசிகாந்தனையும் கூடத்தான்.

தங்கை வீட்டில் அதிசயமாய் அவளுடைய கணவன் கிருஷ்ணன் வீட்டில் இருந்தான்.

மீராவைக் கண்டதும் முறுவலித்து வர வேற்றவன், ஒரு ஷர்ட்டை மாட்டிக் கொண்டு ''இருவருமாகப் பேசிக் கொண்டு இருங்கள்'' என்று வெளியே சென்றான்.

அதே முறுவலுடனேயே தன் குழந்தையைத் தமக்கையிடம் தந்துவிட்டு உள்ளே சென்ற ராதை அங்கேயே ஏதேதோ வேலை செய்து கொண்டு இருந்தாளே தவிர மீராவிடம் வந்து அமர்ந்து பேசிக் கொண்டு இருக்கவில்லை.

குழந்தையோடு விளையாடிக் கொண்டு இருந்த மீராவுக்கு அது குறையாகவும்

தோன்றவில்லை.

ஆனால், குழந்தையின் பொக்கைவாய்ச் சிரிப்பைக் காணுகையில் 'இது போலக் குழந்தை வேண்டுமென்று தோன்றவில்லையா' என்று அவன் கேட்டது நினைவு வந்தது.

இப்படி ஒரு குழந்தை மட்டும் அவளுக்கு இருந்தால் கணம் கூட விட்டுப் பிரியவே மாட்டாளே!

அவளையும் மீறிக் கற்பனையில் ஆழ்ந்த மனம் கதவருகில் நிழலாடுவதை உணர்ந்து சற்றுக் கலைந்தது.

டிரைவர்தான்.

கேள்வியாய் அவளது புருவங்கள் உயரவும், ''கூப்பிட்டாற்போல இருந்தது. கூப்பிட்டீர்களா, அம்மா?'' என்று பரிவுடன் வினவினான்.

இவனோடு இது எப்போதுமே தொல்லை. எஜமானி அழைத்தும் காதில் விழாமல் கவனியாமல் இருந்து விடுவோமோ என்ற பயத்தில் அவ்வப்போது இப்படி வந்து நின்றுவிடுவான்.

இல்லையென்று அவனை அனுப்பி வைத்தாள்.

அதற்குள் குழந்தை உறங்கத் தொடங்கியிருந்தது.

குழந்தை குப்புற விழத் தொடங்கியதிலிருந்து கட்டிலில் படுக்கவைப்பது இல்லை என்று தங்கை சொன்னது நினைவு இருந்தது.

ஒரு பாயை விரித்துக் குழந்தையைக் கிடத்தி அணைப்பாகத் தலையணையை வைத்தாள்.

ஒரு புறமாகச் சரிந்து உறங்கிய குழந்தையைச் சற்று நேரம் அழகு பார்த்துவிட்டுத் தங்கையை நாடிச் சென்றாள்.

''உன் கணவர் இன்று அலுவலகம் செல்லவில்லையா, ராது?'' என்று அவளிடம் பேச்சுக் கொடுத்தாள்.

''ஆமாம்.'' என்று ஒற்றை வார்த்தையில் பதில் வந்தது.

கணவர் அலுவலகம் செல்லாத காரணத்தைத் தன் 'வள வளா' தங்கை அபிநயங்களுடன் விளக்குவதற்காகக் காத்திருந்த மீரா, அப்படி ஏதும் வராமல் போகவே தானே மீண்டும் மவுனத்தைக் கலைத்தாள்.

''உன் அத்தையிடமிருந்து கடிதம் வந்ததா? திருச்சிக்கு மகள் வீட்டுக்குப் போயிருப்பதாகச் சொன்னாயே.''

அதற்கும் வெகு சுருக்கமாகவே பதில் வரவும் மேலும் ஓரிருமுறை பேச்செடுத்துப் பார்த்தாள், மூத்தவள். பயனே இல்லை.

தன் மனக் கலக்கத்தை இந்தத் தங்கையின் ஓயாத பேச்சிலும் பாவனையிலும் சிரிப்பிலுமாக மறக்கலாம் என்று வந்த மீராவுக்கு ஒரு மாதிரியாகிப் போயிற்று.

''என்ன ராது, பேசவே மாட்டேன் என்கிறாயே?'' என்று உள்ளூர வருத்தத்துடன், மேலாக அதை மறைத்த சிறுமுறுவலுடன் வினவினாள்.

கையில் இருந்ததைப் பட்டென்று அலமாரியில் வைத்துவிட்டு சகோதரியைத் திரும்பிப் பார்த்தாள் ராதை. பிறகு, ''பேச வேண்டும் அக்கா நிறைய...யப் பேச வேண்டும். ஆனால், ஒரு வாரம் பொறுத்துப் பேசலாம் என்று இருக்கிறேன்'' என்றாள் ஒரு தீவிரத்துடன்.

''அதென்னடி ஒருவாரக் கணக்கு? அது வரை உன் வாய்க்குக் கண்ணுக்குத் தெரியாத பூட்டு எதுவும் போட்டிருக்கிறாயா? இவ்வளவுண்டு அந்தப் பூட்டைத் திறந்து கொஞ்சம் சொல்லேன்'' என்றாள் மீரா வேடிக்கையாக.

தமக்கையின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த ராதையின் உதடுகள் துடித்தன. ''உனக்கு வேடிக்கையாக வேறு இருக்கிறதா? கொஞ்சம் தானே கேட்கிறாய். சொல்லுகிறேன், கேட்டுக் கொள். நம் அப்பா வெறும் உடலால் தவிர மற்றபடி ஒரு தகப்பனாக இருப்பதற்குக் கொஞ்சமும் தகுதி உள்ளவர் அல்ல. தெரியுமா?'' என்றாள் முன்னைக்குரலிலேயே.

இதேதடா புதுப் பூதம் என்று திகைத்தாள் மீரா.

''ராதை!''

தமக்கையின் முகத்திலும் குரலிலும் அதிர்ச்சியைக் காணவும். ராதையின் சீற்றம் மேலும் கூடியது. ''அப்பா போகட்டும். பத்து மாதம் சுமந்து பெற்ற அம்மா! சே. என்ன அநியாயம்!'' என்றாள் கோபத்துடன்.

''என்ன ராதும்மா, அப்பாவும் அம்மாவும் உன் கணவரிடம் ஏதும் மரியாதைக் குறைவாக நடந்து கொண்டார்களா?'' என்று மிகுந்த கவலையுடன் வினவினாள் மீரா.

''என்... கணவரிடமா?'' என்ற ராதை ஒரு தரம் கண்களை இறுக மூடித் திறந்தாள். ''ச்சு.'' என்று தலையசைத்து விட்டு ''இப்போது விடு அக்கா. ஒரே ஒருவாரம். ஏழு நாட்கள் பொறுத்துக்கொள்ளேன். அப்புறம் எல்லாம் வெட்ட வெளிச்சம் ஆகிவிடப் போகிறது... அக்கா, அது வரை எல்லாம் மனதோடு வைத்துக்கொள்.'' என்று எச்சரித்தாள்.

''மனதோடு வைத்துக் கொள்ளவோ, வெளியே சொல்லவோ அப்படி நீ என்ன பெரிய சேதி சொல்லிவிட்டாயாம்?'' என்று இலகுவாகப் பேசி விட்டுக் கிளம்பினாள் மீரா.

ராதா என்ன சொல்லத் தொடங்கினாள்? ஒருவாரம் கழித்து என்ன சொல்லப் போகிறாள்?

ஒன்று தோன்றவும் காரைத் தன் பெற்றோர் வீட்டுக்கு ஓட்டச் சொன்னாள் மீரா.

''வா, வா, உட்கார். ஆப்பிள் ஜூஸ் குடி.'' என்று உபசாரம் செய்தார் தாயார் மரகதம்.

தாயாரிடம் பார்வையைப் பதித்து, ''ராதை வீட்டுக்குப் போயிருந்தேன் அம்மா'' என்று மீரா தொடங்கவும் அந்த அம்மாளின் முகமெல்லாம் பல்லாகிப் போயிற்று.

''குட்டி ராஜா எப்படியிருக்கிறான்? நாலாம் நாள் நானும் அப்பாவும் போய்ப் பார்த்தபோது தவழத் தொடங்கியிருந்தான். என்னைப் பார்த்ததும் தாவிக் கொண்டு வந்தான் பார். உன் அப்பாவின் மீசையைப் பிடித்து அப்படியே இழுத்து விட்டான். வலியால் கண்ணில் நீர் வந்த போதும்கூட உன் அப்பா பேரனைப் பார்த்து இளித்துக் கொண்டு நின்றார்'' என்று சிரித்தார் மரகதம்.

கற்பனை செய்து பார்த்த மீராவுக்கும் சிரிப்பு வந்தது. ஆனால், ''மாப்பிள்ளை இருந்தாரா அம்மா'' என்று மெதுவாகக் கேட்டாள்.

''ம். இருந்தாரே. அவருக்குப் பிடிக்கும் என்று நிறைய முந்திரிப் பருப்பும் காய்ந்த திராட்சையும் போட்டு தனி நெய்யாலேயே பயத்தம் பருப்பு லட்டு பிடித்துக் கொண்டு போனோமா...''

ஆக இங்கே ஒன்றும் தகராறு இல்லை. பின்னே ராதா ஏன் பெற்றோரைப் பற்றி அப்படிச் சொல்ல வேண்டும்?

குழப்பம் திராவிட்டாலும், வீட்டுப் பிரச்சினையில் தன் பிரச்சனை அமுங்கிவிடச் சற்றே அமைதியானாள் மீரா.

சசிகாந்தனைத் திரும்பவும் பாராமல் ஒதுங்கி விட்டால் இந்த அமைதி நிலைத்தவிடக் கூடும் என்று எண்ணினாள். உடம்பு கொஞ்சம் 'டல்'லாக இருப்பதால் இன்னும் சில நாட்கள் வீட்டில் ஓய்வாக இருக்கப் போவதாகக் கூறியபோது ஏனோ சேதுபதியும் மாறு கூறவில்லை.

ஆனால், மறுநாள் முழுமையும் மீண்டும் மீண்டும் சசிகாந்தனைப் பற்றியே நினைத்த மனதை அவள் பெரும் சிரமப்பட்டு வேறு விஷயங்களில் செலுத்த வேண்டியிருந்தது.

ஆலோசிக்க நிறைய விஷயங்கள். முக்கியமாகத் தங்கையின் மர்மமான பேச்சு. பெற்றோரைப் பற்றி அவள் கூறிய குற்றச்சாட்டு, அண்ணனைப் பற்றி அம்மா கூறியது, தம்பி தங்கை எதிர்காலம், சேதுபதியின் ஆரோக்கியம் என்று தீவிரமாய்ச் சிந்திக்க எத்தனையோ விஷயங்கள் இருக்கையில் எல்லாவற்றையும் ஒதுக்கித் தள்ளிக் கொண்டு அவனது நினைவு முன்னே வருவதை அவளால் புரிந்து கொள்ளக்கூட முடியவில்லை.

மாலையில் திரும்பி வந்த மாமனாருக்கு மூயுடன் த்ரெப்டின்

பிஸ்கட்டுகளையும் ட்ரேயில் எடுத்துச் சென்று கொடுத்தாள்.

மரத்தடி ஆசனத்தில் வாகாகச் சாய்ந்து கொண்டு, அவள் கலந்து கொடுத்த முதல் கப் டீயைச் சூடாகப் பருகினார். அடுத்த கப் டீயில் பிஸ்கட்டுகளை நனைத்து ருசித்து உண்டபடி, ''என்னதான் லட்ச லட்சமாய்ப் பணத்தைக் கொட்டி, பார்த்துப் பார்த்து வீட்டைக் கட்டினாலும் இப்படித் தோட்டத்தில் ஆகாசமே கூரையாக அமர்ந்திருப்பதின் சுகமே தனிதான்'' என்றார் ரசனையோடு.

உண்மை. இங்கு சுவரோ, அதில் தொங்கும் படங்களோ நம்மை விரட்டுவது இல்லையே! என்று உள்ளூர எண்ணியபடி அவருக்கு ஒப்புதலாகத் தலையசைத்தாள் மீரா.

இன்று மீட்டிங் நடந்ததா? சசிகாந்தன் மேலும் ஏதும் தகராறு செய்தானா...? அல்லது மாமாவிடம் அவனும் ஏமாந்திருப்பானா? அவளைப் பற்றி... அவள் ஏன் வரவில்லை என்று யோசித்திருப்பானா? விசாரித்திருப்பானா?

''இவன் இங்கே எங்கே வந்தான்?'' எரிச்சலுடன் சேதுபதி முணுமுணுக்க மீராவும் திரும்பிப் பார்த்தாள். அவன்! அவளது சிந்தனையின் நாயகனான சசிகாந்தனேதான். ஓர் இலகு நடையுடன் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

மாமனைப் போலவே இவன் இங்கே எங்கே வந்தான் என்றே மீராவும் திகைத்தாள்.

ஆசிரமத்தல் அவனைச் சந்தித்தது பற்றி மாமாவிடம் அவள் சொல்லவில்லையே. அதைப் பற்றி அவன் பேச்செடுத்தால்? அங்கே பேசியது போலப் பேசினால்?

தன் நெஞ்சுக்குள் வேகமாக ஓடிய ரயிலின் தடதடப்பு அருகில் இருந்த மாமனாருக்குக் கேட்டு விடப் போகிறதே என்று நடுங்கிப் போனாள் மீரா.

சசிகாந்தன் அருகில் வரவும் சேதுபதி முகபாவனையை மாற்றிக் கொண்டார். ''யாரு? மிஸ்டர் சசிகாந்தனா? அங்கேயே உட்கார்ந்திருக்கலாமே. யாரும் உபசரிக்கவில்லையா? எங்கே இந்தப் பையன்? இன்னமும் எனக்குச் சேதி கூற வரவில்லை...''

பையனுக்குச் சரியான மண்டகப்படி காத்திருப்பதை அவர் குரல் காட்டியது.

அவரது உபசாரத்துக்குக் காத்திராமல் தானே அமர்ந்து கொண்டு, ''விருந்தோம்பலுக்குக் குறைவே இல்லை, மிஸ்டர் சேதுபதி. பையனைக் கூட நான்தான் நிறுத்திவிட்டு வந்தேன், என்ன இருந்தாலும் வீட்டை விடவும் தோட்டம் கண்ணுக்குக் குளிர்ச்சி பாருங்கள்'' என்றான் சசிகாந்தன்.

மீராவின் மீது படிந்து மீண்ட அவனது பார்வையில் சேதுபதி என்ன கண்டாரோ, ''என்ன மருமகளே, சும்மா உட்கார்ந்திருக்கிறாய். இந்த வீட்டுப் பெண், போய் இவருக்குக் காபி, டீ ஏதாவது பையனிடம் கொடுத்து அனுப்பு'' என்று அவளை அனுப்ப முயன்றார்.

''ஊகூம்' என்று கையை நீட்டித் தடுத்தான் சசிகாந்தன். 'எனக்கு மாலைக்

காபி ஆகிவிட்டது. போகிற இடத்தில் எல்லாம் வயிற்றுக்குக் கொட்டிக் கொள்கிற பழக்கம் எனக்கு இல்லை.''

அதனால்தான் உடம்பு கச்சிதமாய் இருக்கிறது என்று எண்ணிவிட்டு உதட்டைக் கடித்துக் கொண்டாள் மீரா.

''நீங்கள் பிசினஸ் பேச வந்திருப்பீர்கள். நீ வேண்டுமானால், உள்ளே போம்மா. அவளுக்கு வேறு இரண்டு நாளாக உடம்பே சரியில்லை. போய்ப் படுத்துக் கொள்ளம்மா'' என்றார் சேதுபதி கரிசனமாக.

''அப்படியா?'' என்றவன் அவளிடம் திரும்பி ''உடம்புக்கு என்ன செய்கிறது?'' என்று நேராகவே கேட்டு விட்டான்.

ஒரு வினாடி திகைத்து விட்டு, ''ந... தலைவலி.'' என்று ஒருவாறு கூறி முடித்தாள் மீரா.

''வெறும் தலைவலிதானே, இந்த வயதில் இதற்குப் போய் படுக்கை எதற்கு? இதுவே உங்கள் வயது என்றால் கட்டாயம் ஓய்வு தேவைதான். அத்தோடு ஒப்பந்தத்தில் இருவரும்தானே கையெழுத்திட வேண்டும். விவரம் இவருக்கும் தெரிவதுதான் நல்லது.''

பேச்சில் கலந்து கொள்ளவில்லையென்றாலும் மீரா அங்கிருந்து சென்றுவிடவும் இல்லை.

ஆண்கள் இருவருமாகச் சற்று நேரம் பேசினர். வெள்ளைத் தாளில் கறுப்பு மை எழுத்தில் கொண்டுவர முடியாத சில விஷயங்கள்தான். ஆனால், பெரும்பான்மையில் சேதுபதிக்குச் சசிகாந்தன் விட்டுக் கொடுப்பதாகவே மீராவுக்குத் தோன்றியது. அன்றைக்குக் கண்டிப்பும் கறாருமாகப் பேசியவன் இன்று கைநழுவ விடுவானோன்? எப்படியோ, மாமாவுக்கு உச்சி குளிர்ந்து போகும் என்று மீரா நினைத்தாள்.

''ஆக வந்த வேலை ஒருவாறு நல்லபடியாகவே முடிந்தது. இனி இதற்கென்று தனியாகவா வரப்போகிறேன். உங்கள் தோட்டத்தைப் பற்றி எல்லோரும பிரமதமாகச் சொல்லுகிறார்களே'' என்றவன் திடுமென மீராவின் புறம் திரும்பி, ''கொஞ்சம் சுற்றிக் காட்டுகிறீர்களா, மேடம்?!'' என்று கேட்டு விட்டான்.

மீராவின் திகைத்த விழிகள் சேதுபதியை நாடின.

அதற்குள், ''அவளுக்கு உடம்பு சரியில்லை என்றேனே'' என்றார் அவர் அவசரமாக.

''வெறும் தலைவலிதானே. தோட்டத்தில் காற்றாட நடந்தாலே சரியாகிவிடும். எழுந்திருங்கள், மேடம். ஊகூம். நீங்கள் உட்காருங்கள் சார். இந்த வயதில் ஆபீஸ் வேலையோடு நான் வேறு வந்து தொல்லை செய்துவிட்டேன். இப்போதே களைத்துத் தெரிகிறீர்கள். இதற்கு மேல நடைவேறு வேண்டாம். என்ன மேடம், கிளம்புவோமா?'' என்று சேதுபதி செயலற்றுப் பார்த்திருக்க, மீராவைப் பிடிவாதமாக அழைத்துச் சென்றான் சசிகாந்தன்.

சேதுபதி உள்ளூரக் கொதித்துக் கொண்டிருக்கிறார் என்பது மீராவுக்குத்

தெரியும். இவன் என்னதான் தொழிலில் விட்டுக் கொடுத்து உச்சி குளிர வைத்தாலும் அதில் அவர் மயங்குகிறவர் இல்லை. தன் மருமகளை ஒருவன் தனியே உலாவ அழைத்துச் செல்வது அவருக்குப் பிடிக்கவில்லை என்பதை அவர் குறிப்பாகக் காட்டியும்தான் சசிகாந்தனோடு செல்வது குறித்துத் தன் மீதும் அவருக்குக் கோபம் வரும் என்பதும் மீராவுக்குத் தெரியும்தான். ஆனால், அவளுக்கு அவனை எச்சரிக்க வேண்டியிருந்தது.

சனிக்கிழமைச் சந்திப்பை வெளியிட்டு விடாதே என்று ஓர் எச்சரிக்கை; இனி அவளிடம் பேச்சு வார்த்தை வேண்டாம் என்று ஓர் எச்சரிக்கை; அவளால் அவனுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அவளை மறந்துவிட வேண்டும் என்று ஓர் எச்சரிக்கை; பாதிப்பு ஏற்படவில்லை என்றாலும் சாதாரணக் கேலிப் பேச்சுக்கும் சிரிப்புக்கும் அவள் ஆளல்ல என்று ஓர் எச்சரிக்கை.

சேதுபதியின் காது எட்டாத தூரம் சென்றதும் அவசரமாக, ''மிஸ்டர் சசிகாந்தன்'' என்று அவள் தொடங்கியபோது அவன் குறுக்கிட்டான்.

''என் நண்பர்கள் என்னைச் 'சசி' என்று அழைப்பார்கள். மாறாக நீ என்னைக் காந்தன் என்று அழைத்தால் மிகவும் சந்தோஷப்படுவேன்.''

''ஓ!''

கீழ்க்கண்ணால் அவளது குனிந்த தலையைப் பார்த்துவிட்டு, ''வெறும் 'ஓ' தானா? தேவுடா, உள்ளதும் போச்சே'' என்று வருத்தம் காட்டினான் சசிகாந்தன்.

தன்னை மீறிச் சிரிப்பு வந்தது மீராவுக்கு.

சட்டென அவனது கண்கள் கனிந்த விதத்தில் சிரிப்பு நின்று முகம் சிவந்தாள்.

உடனே திகைத்தாள்.

எதையும் கவனியாதது போல, ''உன் தனி டெலிஃபோன் நம்பர் என்ன மீரா?'' என்று வினவினான் அவன்.

மாமா தெரிய 'மேடம்' போட்டவன் பெயர் சொல்லி ஒருமையில் பேசுவதை உள்ளூர ஒரு இனிமையுடன் உணர்ந்தாள் மீரா.

கூடவே ஒரு பயமும் வந்தது. மாமாவிடம் போடுகிற இரட்டை வேடத்தை அவளிடம் மட்டும் அவன் போடவில்லை என்று என்ன நிச்சயம்?

இந்த ஒருமை பன்மையைக் கண்டு கொள்ளாதது போலக் காட்டி, ''மாமாவுக்கு மட்டும்தான் இங்கே தனி லைன். மற்றது போர்டுக்குப் போய்விடும்'' என்று அவனது கேள்விக்குரிய பதிலை மட்டும் சொன்னாள்.

''ஓகோ! அதனால்தான் மதியம் டெலிபோனில் ஒரு கட்டைக் குரல் யார் வேண்டும் என்றதா?''

''லோகு நீங்கள் பேசியதாகச் சொல்லவே இல்லையே'' என்று மீரா ஆச்சரியப்பட்டாள்.

''லோகுவா அவன் பெயர்? அந்த லோகு சொல்லியிருக்க மாட்டானே.

நான்தான் அவன் நம்பர் சொல்லி யார் வேண்டும் என்றதும் வைத்து விட்டேனே.''

ஏன் என்ற கேள்வி மீராவின் தொண்டை வரை வந்து அடங்கிப் போயிற்று.

இதுவரை அறிந்து கொண்ட அளவில், அவன் பதில் சொல்லத் தயங்க மாட்டான். ஏதாவது ஆவல் காட்டிப் பேசினான் என்றால் மனம் ஒரேயடியாக அலை பாயத் தொடங்கி விடும். அதை விட விலகிப் போய்விடுவது மேல்.

''தி...திரும்பலாமா?'' என்றாள் மெதுவாக.

''வாட்! நீ இன்னும் தோட்டமே காட்டவில்லையே. அதற்குள் திரும்புவதற்கு என்ன அவசரம்?''

''மா...மாமா ஏதாவது தவறாக எண்ணிக் கொள்வார்'' என்றாள், தரையைப் பார்த்தபடி மீரா.

''ஏன்? அவர் சரியாகவே எண்ணிக் கொள்ளக் கூடுமே!''

அவனது பூடகப் பேச்சில் அவள் மருண்டு நோக்கவும், ஒரு பொறுமையிழந்த வேக மூச்சுடன், ''உன்னிடம் நிறையப் பேச வேண்டும் மீரா. நீயானால்... சொல்லு மீரா நீ ஷாப்பிங் போவது உண்டா?'' என்று கேட்டான் அவன்.

''ஏன்?''

''நாளை மாலை மூன்று மணிக்கு ஃபவுண்டன் பிளாசா வருகிறாயா?''

வருகிறாயா என்றால்? மீராவின் உள்ளத்தில் மீண்டும் ரயில் ஓடியது.

ஓர் இடத்துக்கு நீ வருகிறாயா என்று கேட்டால என்ன அர்த்தம்? கேட்பவரும் அங்கே போவதாகத்தானே.

அதாவது மறுநாள் சசிகாந்தன் மீராவைச் சந்திக்க விரும்புகிறான். அதுவும் மாமாவுக்குத் தெரியாமல்.

உள்ளம் படபடத்த போதும் 'ஊகூம் வர மாட்டேன்' என்று சொல்லவோ அவளுக்குக் கொஞ்சமும் மனம் வரமாட்டேன் என்றது.

அவளது தயக்கமான மவுனத்தை ஒப்புதலாக ஏற்று, ''ஆனால், டிரைவர் நாகேந்திரனைக் காரை ஓட்டச் சொல்லு'' என்றான் அவள் கண்களையே பார்த்து.

புரிந்தாற்போல அவளது விழிகள் அகன்றன.

விஷயத்தை இலகுவாகக்க எண்ணியவன் போல, ''ஏதோ, கண்ணாலேயே விழுங்கவிடத் திட்டமா? இரையாக எனக்குச் சம்மதம் தான் தேவி'' என்றான் கேலிக் குரலில்.

ஆனால், அவள் விஷயத்திலிருந்து விலக மறுத்து, ''அன்று ஆசிரமத்துக்கு வந்தது அவன் தகவல் கொடுத்ததால்தானா?'' என்று வினவினாள். ஆக இதைத்தான் அன்று மறைத்துப் பேசினானா? என்ற ஆறுதலும் உண்டாயிற்று.

கூடவே இங்கே சம்பளம் வாங்கிக் கொண்டு இது என்ன ஐந்தாம் படை வேலை என்ற ஆத்திரமும் துளிர்த்தது.

அவளது முகத்திலிருந்தே மீராவின் மனதைப் படித்தவன்போல, ''பின்னே நீங்கள் மட்டும்தான் உளவு பார்க்க ஆள் வைப்பீர்களாக்கும். அப்பாவின் ஆபீஸ் பையன் சீனி உங்களிடமும் சம்பளம் வாங்குவது எனக்குத் தெரியாது என்றா நினைத்தாய்? பதிலுக்குப் பதில்...'' என்றான் சசிகாந்தன்.

மீரா மேலும் அதிர்ந்தாள்.

அவர்களுடைய ஆபீஸ் பையன் இங்கே சம்பளம் வாங்குகிறானா? உளவா? இது என்ன மட்ட ரகமான வேலை? நிர்வாகமும் பொருளாதாரமும் கற்றுக் கொடுத்த மாமா இந்தத் திரிசமன் பற்றிக் கோடி கூடக் காட்டவில்லையே. மறுப்பாள் என்பதாலா? ஓச்சி.

அருவருப்பினால் நெளிந்த உதடுகளில் இருந்து மீண்டும் அவளது எண்ணங்களை உணர்ந்து, ''இது ஒன்றும் இழிதரப்பட்டது அல்ல மீரா. ஒற்றிதல் என்று வள்ளுவர் ஓர் அதிகாரமே எழுதி வைத்திருக்கிறார்'' என்று முறுவல் செய்தான் அவன்.

''அது அரசர்களுக்கு'' என்று பதில் கொடுத்தாள் அவள்.

புன்னகை மாறாமலே, ''விவேகானந்தருடைய சொற்பொழிவுகள் படித்திருக்கிறாயா? அன்னியர் ஆட்சிக்குப் பிறகு இந்தியாவில் வியாபாரிகள் ஆட்சியும் அதன் பின்னர் தொழிலாளிகளின் ஆட்சியும் என்று சொல்லியிருக்கிறார். இன்று நடப்பது வியாபாரிகள் ஆட்சிதான் மீரா.

''கடையில் அமர்ந்து விற்பனை செய்கிறவர்கள் தான் வியாபாரி என்று இல்லை. நம்மை போலத் தொழிற்சாலைகளில் பொருட்களை உற்பத்தி செய்து விற்கிற தொழில் அதிபர்களும் வியாபாரிகள்தான். இந்த வியாபாரிகளின் ஆதரவில் வெல்லும் அரசியல்வாதிகளை அவர்கள் பின்னிருந்து ஆட்டி வைத்து ஆட்சி செய்கிறவர்களும் இவர்களேதான், வியாபாரிகள் ஆட்சி செய்கிறபோது ஒற்று அறிவதை மட்டும் விட்டுவிட முடியுமா?'' என்று அவன் கேட்டபோது மீராவுக்கு முறுவல் அரும்பியது.

அவன் பாயின்டை ஆணித்தரமாக நிரூபித்து விட்டானே!

''ஆனாலும் ஒரு டிரைவரும், ஆபீஸ் பையனும் அப்படி என்ன தெரிந்து கொள்ள முடியும்?'' என்றாள் சந்தேகமாக.

''ஏன்? ஒரு டிரைவரை யாராவது ஒரு மனிதனாக மதித்து நீ

பார்த்திருக்கிறாயா? காரில் உள்ள மிஷினோடு அவனையும் ஒரு எந்திரமாகத்தான் நடத்துவார்கள்.

''ரொம்ப ஃப்ரியாகப் பேசுகிற இடம், ஓடுகிற கார்தான். அதேபோல ஆஃபீஸ் பையன், அலுவலகத்தில் இஷ்டம் போலச் சுற்றி வேண்டியதை அறிந்து கொள்வானே. சீனியைக் கண்டு கொண்டதாக அங்கே யாரும் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால், அதற்கு ஒப்பப் பேச்சு நடக்கும். பெரும்பான்மைத் தவறான தகவல்கள், என் அப்பா வரப் போவதாக நம்ப வைத்ததிலிருந்து...''

''ஓ!''

ஒருகணம் அவன் பார்வை மாறியது. ''பிறகு ஒருநாள் இந்த 'ஓ' பற்றி நினைவுபடுத்து, சொல்கிறேன்'' என்றான்.

பளிச்சிட்ட விழிகளை இமைகளை தாழ்த்தி மறைத்து, ''என்ன சொல்லப் போகிறீர்கள்?'' என்று சாதுவாய்க் கேட்டாள் மீரா.

''அதை அந்தப் பிறகு ஒருநாள் வந்ததும், அன்று நீ நினைவுபடுத்தியதும் கட்டாயம் சொல்கிறேன்'' என்று அவளுடைய பாணியிலேயே சொல்லிவிட்டுப் பிறகு சிரித்தான் சசிகாந்தன்.

அசடு வழிந்தபோதும் அவளுக்கும் சிரிப்புத்தான் வந்தது.

இவனோடு குறும்பும் கிண்டலுமாகப் பேசுவதும் சிரிப்பதும் எவ்வளவு இயல்பாகவும் சுகமாகவும் இருக்கிறது.

ஆனால், இதில் தன்னை இழப்பது அவளுக்கு நல்லதல்லவே!

அவசரமாகப் பேச்சை மாற்றினாள். ''இந்தத் தோட்டம் சுமார் பத்து கிரவுண்டு பரப்பளவு இருக்கிறது. பின்புறம் முழுவதும் பல அபூர்வ ரகப் பழ மரங்கள். பெரிய ரோஜாத் தோட்டம் ஒன்றும் இருக்கிறது. அதில் எழுபத்தைந்து வகை ரோஜாக்கள் இருக்கின்றன. பச்சை நிறத்தில் கூட...''

''நீ என்னதான் வர்ணித்தாலும் நான் இந்த இடத்தை வாங்கப் போவது இல்லை. எனவே இந்த விவரம் எதுவும் எனக்குத் தேவையில்லை.''

''நீங்கள்தானே தோட்டம் பார்க்க வேண்டும் என்கிறீர்கள்?''

கையை விரித்தான் அவன். ''எனக்குத் தெரிந்தவரையில் உன்னிடம் தனியே பேச ஒரு வழி தேடினேன்'' என்று கண்களில் சிரிப்புடன் இயம்பினான்.

மீண்டும் பேச்சு அபாயகரமான பாதையில் செல்வதை மீரா உணர்ந்தாள்.

ஊகூம். இந்தப் பரபரப்பு நல்லதற்கில்லை.

''மாமா காத்துக் கொண்டு இருப்பார்'' என்றவள் உறுதியோடு திரும்பி நடக்கத் தொடங்கினாள்.

மறுப்பின்றிக் கூட நடந்தபடி ''நாளை மாலை மூன்று மணிக்கு ஃபவுண்டன் பிளாசாவில் காத்திருப்பேன்'' என்றான் சசிகாந்தன்.

அவனுக்குப் பதில் கூறும் சிரமத்தை எதிரே வேகமாக வந்த பணியாள் தவிர்த்தான்.

''ரோஸ் வகையெல்லாம் நல்லாக் காட்டும்படி பெரிய அய்யா அனுப்பினாங்கம்மா. ஆனாக்க அதுக்குள்ளே திரும்பிட்டீங்களே'' என்றான் அவன்!

இது உதவியா, உளவா?

சஞ்சலத்தை மறைத்து, ''நிறைய இருப்பதால் இன்னொரு தரம் வந்து பார்க்கிறாராம்'' என்றாள் மீரா.

''ஆமாம். பிறகு ஒருதரம்'' என்றான் சசிகாந்தன் நிதானமாக.

சேதுபதியின் பார்வை தன்மேல் கூராகப் படிவதை நேராகப் பாராவிட்டாலும் மீரா உணர்வினால் அறிந்தாள்.

அவர்கள் இருவரும் திரும்பி வருவதற்காகவே காத்திருந்தது போல, மெல்ல முனகியபடி எழுந்து, ''நேரமாகிறது, நானும் வயதானவன். அவளும் உடம்பு சரியில்லாதவள்'' என்றார் சேதுபதி, சசிகாந்தனின் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக.

அவனும் மேலே நிற்கவில்லை. அவரது பேச்சை உண்மை போலவே ஏற்று; ''போய் ஓய்வெடுங்கள் சார், நான் பிறகு பார்க்கிறேன்'' என்று உடனே கிளம்பி விட்டான்.

சசிகாந்தனின் கார் கண்ணுக்கு மறையும் வரை ஏதோ யோசனையாக நின்றார் சேதுபதி. பிறகு, ''வாம்மா உள்ளே போகலாம். இங்கேயும் இன்று இறுக்கமாய்த்தான் இருக்கிறது. உள்ளே போனால் ஏசியாவது கொஞ்சம் நன்றாய் இருக்கும்'' என்று அழைக்க இருவருமாக வீட்டினுள் சென்றார்கள்.

இடையிடையே ஓரக்கண்ணால் அவர் தன்னைப் பார்ப்பதை மீரா உணர்ந்தாள்.

ஆனால், அவர் என்ன எண்ணுகிறார் என்று தெளிவாகும்வரை தானாக எதையேனும் சொல்லி நுணலும் தன் வாயால் கெடுகிற மாதிரி ஆகிவிடக் கூடாது என்று எண்ணினாள்.

அதுவும் அவர் கற்றுக் கொடுத்த பாடம்தான்.

எதிராளியைப் பேசவிட்டு அந்தப் பேச்சிலிருந்தே உனக்கு வேண்டிய பாயின்டுகளைச் சேகரித்துக் கொள்ள வேண்டும் என்று எத்தனை தடவைகள் கூறியிருப்பார்!

...முன்பு போல இவர் எதிராளியில்லை என்று சேதுபதிக்கு வக்காலத்து வாங்க இப்போது அவளால் முடியவில்லை. சசிகாந்தனை விரட்டியடிப்பது போல நடத்தியது அவளுக்குள் கோபத்தை மூட்டியிருந்தது.

எனவே, பழக்கம் காரணமாக அவர் சொன்னதைச் செய்தபோதும் தானாக எதையும் பேசினாள் இல்லை.

ஆனால், சேதுபதி பழம் தின்று கொட்டை போட்டவர் ஆயிற்றே.

அவரது முனகல் சற்றே அதிகம் ஆயிற்று, படியில் ஏறும்போது லேசாகத் தள்ளாடினார். அவள் கையைப் பிடித்துக் கொண்டு மெல்ல உள்ளே வந்து சோபாவில் தொப்பென விழுந்தார்.

வழக்கமாக மாமாவுக்கு என்னவோ என்று துடித்துப் போகிறவள், இதில் எத்தனை சதவீதம் நிஜம் என்று யோசித்தபடி உள்ளே சென்று தம்ளரில் குளிர்நீர் கொணர்ந்து கொடுத்தாள்.

இரண்டு மடக்கு குடித்து, அப்பாடா என்றவர், ''நீயும் உட்காரம்மா, இந்தக் கிழவனோடு சற்று நேரம் பேசிக் கொண்டு இருக்கிறாயா?'' என்றார். கெஞ்சுவது போல அவர் கேட்டதும் மீராவுக்கு மனம் இளகி விட்டது.

அறுபத்தைந்து வயதில் அவர் கிழவராகிவிடவில்லை என்றாலும், அந்த வயதுக் கேற்றபடி கூட இருந்து கருத்துப் பரிமாறிக் கொள்ள மனைவி இல்லை. ஏங்கித்தவம் இருந்து பெற்ற மகனையும் இடையிலே இழந்து விட்டார்; பாவம்.

அடுத்த சோபாவில் அமர்ந்து, ''நேற்று ராதை வீட்டுக்குப் போயிருந்தேன் மாமா. அவள் மகன் அதற்குள் தவழத் தொடங்கி விட்டான்'' என்றாள்.

அவளை ஒரு தரம் பார்த்துவிட்டு, ''மற்றபடி அதாவது அந்த ராதைப் பெண்ணுக்கு குறை ஏதும் இல்லையே?'' என்று வினவினார் சேதுபதி.

எப்போதும் போல ஒளிவுமறைவின்றிப் பேச வாய் எடுத்தவளுக்குத் தங்கை, மனதோடு வைத்துக் கொள் என்றது நினைவு வந்தது. இல்லை என்று தலையை மட்டும் அசைத்தாள்.

''அப்போசரி.'' என்றுஇருமுறை தலையை ஆட்டினார் அவர். பிறகு லேசாகத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, ''ராஜஸ்தானிலிருந்து நம்ம சக்தி சிங் வந்திருந்தானம்மா'' என்று தொடங்கினார்.

''நம்ம சக்தி சிங்!'' அவசரமாக மூளையைக் கசக்கி யோசித்தபோதும் அந்த நம் சக்தி சிங்கை மீராவால் இனம் காண முடியவில்லை.

மறதி என்பது வெற்றிக்கு முதல் எதிரி என்று ஒரு சொற்பொழிவை எதிர்பார்த்தவளுக்கு அவர் சாதாரணமாக மேலே பேசியது ஆச்சரியமாக இருந்தது.

''நினைவு வரவில்லையா மீராம்மா? அதாம்மா, மில்லுக்கு 'சிந்தடிக்' நூல் தருவானே பிரதாப், அவனுடைய ஒன்றுவிட்ட தம்பி. அவனோடு பேசிக் கொண்டு இருந்தேனா, அப்படியே மனம் உருகிப் போய்விட்டது... சக்தியின் மைத்துனன் மகனுக்குத் திருமணம் நிச்சயமாகி இருந்ததாம். திருமணத்துக்கு முந்திய நாள், பாவம் பையன் போய் விட்டானாம்... அதிர்ச்சியாக இருக்கிறதா? எனக்கும் அப்படித்தான் இருந்ததம்மா. தரதிருஷ்டம் எல்லார் வீட்டிலும் தான் விளையாடுகிறது... பாம்பு - கருநாகமாம். அவசரமாக டாக்டரை அழைத்து வருமுன் உயிர் பறந்து விட்டதாம். அதிலே பாரம்மா, மறுநாள் சிதைக்குத் தீமூட்டினால் அந்தப் பெண், நிச்சயித்திருந்தவாறே ஓடிவந்து யாரும் தடுக்குமுன்

கிதையிலே விழுந்து செத்து விட்டாளாம். சொல்லிச் சொல்லி வாய் ஓயவில்லை அவனுக்கு, ராஜபுத்திரப் பெண்களுக்கு ஈடே இல்லை என்று புகழோ புகழ் என்று புகழ்ந்தான். எனக்குக் கொஞ்சம் கோபம் வந்து விட்டது. உயிரை விட்டால்தான் சதி தேவியா? 'என் மருமகளை வந்து பார். தன் பிறந்த வீட்டைக்கூட விட்டு விட்டு இங்கே வந்து விரதம் காக்கிறாள். இந்தக் கிழவனுக்காக உயிரைச் சுமந்து கொண்டு புடம் போட்ட பொன்னாக, பரிசுத்தமே உருவாக வாழ்கிறாள் என்றேன்.

''எப்படியம்மா உங்களுக்கெல்லாம் இப்படி ஒரு மனத்திண்மை வருகிறது? அந்தக் காலத்தில் கலிப்பகையார் இறந்தார் என்று மணமாகு முன்பே இன்றைய நீவரை இந்தப் பாரத நாட்டு மண்தான் இந்த உறுதியை உங்களுக்கு ஊட்டி வளர்க்கிறதோ? இதுவே ஓர் ஆண் பிள்ளை என்றால், அடுத்த மாதமே புது மாப்பிள்ளை ஆகிவிடுவான். ஆனால், உன் கேசவன் விதிவிலக்கு. மனதால் கூட வேறு ஒருத்தியைத் தொட்டிருக்க மாட்டான். சொன்னானே, எத்தனைப் பிறவி எடுத்தாலும் என் மனைவி மீராதான் என்று. எங்கே பிறந்து உனக்காகக் காத்திருக்கிறானோ?'' என்று பெருமூச்செறிந்தார் பெரியவர்.

மீரா குன்றிப் போனாள்.

இந்தப் பிறவியிலேயே அவள் என்னென்னமோ நினைக்கிறாள்!

சட்டென எழுந்தாள். ''ஒரேவியர்வை மாமா கசகசப்பு தீரக் குளித்துவிட்டு வருகிறேன்'' என்று கூறி நடந்தாள்.

நன்றாக குளிரக் குளிரக் குளித்தால் மனம் கூட அமைதி ஆகிவிடலாம்...

மாடிப்படி வளைவில் திரும்பும்போது அவள் பார்வை மீண்டும் மாமனாரின் மேல் விழுந்தது.

ஒரு விசித்திரமான முறுவலோடு அவர் தனது பெரிய மீசையைத் தடவி விட்டுக் கொண்டிருந்தார்.

பெரிய பெரிய பிசினஸ் வெற்றிகளின் பின்னே இதே முறுவலை அவர் முகத்தில் மீரா கண்டிருக்கிறாள்.

இன்று அவர் அப்படி எதில் வென்றார்?

சுரீலென உறைத்தது. வென்றது அவளைத் தானோ?

நடை தளராமல் தன் அறைக்குள் சென்றவள் குளிக்கப் போகாமல் பால்கனியில் சென்று அமர்ந்து யோசித்தாள்.

அவர் இந்த மாதிரி விரதம், கைம்மை என்று பேசி வெகுகாலம் ஆயிற்று. திலகவதி சரித்திரம் கூடத்தான்.

அவள் இங்கே வந்த புதிதில் அடிக்கடி பேசியவர், அடுத்த ஆண்டில் அவ்வப்போது கூறியவர். இந்த நாலு ஆண்டுகளில் அடியோடு விட்டிருந்தவர் இன்று ஏன் தொடங்கினார்?

'சக்திசிங்' கூட இன்று அவளிடம் சலனத்தை உணர்ந்து அதைக் களைய வந்த

கற்பனைதானோ?

இருபத்து மூன்று வயதில் இதையெல்லாம் அவளுக்கு யோசிக்கத் தெரியாதா? வழி நடத்த இன்னொருவர் வேண்டுமா?

உள்ளூரச் சுருசுரு என்று ஒரு முரட்டுத்தனம் தோன்றி, இரவிலும் அவர் மீண்டும் திலகவதி யாரைக் குறித்துப் பாராட்டிப் பேசவும், மேலும் வளர்ந்து, மறுநாள் சசியோடான சந்திப்பை உறுதி செய்தது.

ஆனால், காரை விட்டிறங்கிச் சிறிது நேரத்திலேயே சசிகாந்தன் தன்னைத் தனியே அழைத்ததின் நோக்கமும் அவளுக்குப் புரிபட்டுப் போயிற்று.

கார் டிரைவருடன் ஏற்கனவே பேசி வைத்திருந்தானே என்னவோ, கார் நின்ற இடத்தில் சசிகாந்தன் தயாராகக் காத்திருந்தான். கார் சரியாக நிற்கும் முன்பே கதவைத் திறந்து விட்டு, 'ஹல்லோ' என்று சிரித்தான்.

அவன் முகத்தில் இருந்த மகிழ்ச்சியைக் கண்டபோது, இங்கே வரத் தயங்கியதே பெரும் தவறாகத் தோன்றியது மீராவுக்கு. அத்தோடு அவன் என்ன தனியிடத்துக்கா அழைத்தான்? ஆயிரம் பேர் நடமாடும் 'ஷாப்பிங் சென்டர்!'

''காரை எதிர்ப்புறமாய்ப் 'பார்க்' செய் நாகு.'' என்று டிரைவரிடம் பணித்துவிட்டு, ''வா கடைகளைப் பார்க்கலாம்'' என்று மீராவை உள்ளே அழைத்துச் சென்றான்.

கடைகளில் தொங்கவிட்டிருந்த வண்ண வண்ணப் பராந்தியங்களைக் காட்டி, ''உன் நீளக் கூந்தலுக்கு வெகு அழகாய் இருக்கும்'' என்றான்.

கல்லும், முத்தும், ஜிகினாவுமாகக் கலர் கலரான ஸ்டிக்கர் பொட்டுகளைக் காட்டி, ''உன் நெற்றி அமைப்புக்குச் சின்னது பெரிது எல்லாம் பளிச்சென்று இருக்கும்'' என்றான்.

அப்போதே மீராவுக்கு ஓரளவு விஷயம் புரிந்து விட்டது.

அடுத்து ஒரு ரெடிமேட் ஆடைக் கடைக்குள் சென்று விதம் விதமான வேலைப்பாட்டுடன் கூடிய சுடிதார் செட்டுக்களைக் காட்டி, ''உன் நிறத்துக்கும் மெல்லிய உடல் அமைப்புக்கும் தூக்கி அடிக்கும்'' என்று கூறியபோது, ''எனக்குச் சேலைதான் பிடிக்கும்'' என்று சாதுவாய் உரைத்தாள்.

ஒரு பொறுமையிழந்த மூச்சுடன், ''ஓ.கே. சேலையை பார்க்கலாம். வா'' என்று சாலையைக் கடந்து 'தில்லையாடி' வள்ளியமைக்கு அழைத்துச் சென்றான்.

தளம் தளமாக அவளை அழைத்துச் சென்று, அங்கங்கே தாங்கிகளில் தொங்கவிடப்பட்டிருந்த அழகழகான சேலைகளைக் காட்டி, ''இது போல் எல்லாம் வேண்டும் என்று உனக்கு ஏக்கமாக இல்லையா, மீரா?'' என்று வினவினான்.

''இல்லையே.'' என்று உதட்டைப் பிதுக்கிக் கை விரித்தாள் அவள்.

''மீரா?''

அவனது அதட்டலைக் கவனியாதவள்போல, ''என்னிடம் தான் இதுபோல் நிறைய இருக்கிறதே'' எனக் கூறி அவனைத் திகைக்க வைத்தாள்.

அவள் அணிந்திருந்த சேலைமேல் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு, ''இருந்தால் மட்டும் போதுமா? அணிந்து மகிழ வேண்டாமா?'' என்று கேட்டான் சசிகாந்தன்.

''நான்தான் கட்டுகிறேனே!'' என்று மீண்டும் அவனைத் திணறடித்தாள் மீரா.

''எப்போது?''

சற்றுத் தயங்கி, ''இ. இரவில்'' என்றாள் அவள் மெல்லிய குரலில்.

அவனுடைய புருவ மத்தியில் சிறிய முடிச்சு விழுந்தது. ஏதோ யோசித்தவன், ''மீரா, நீ எத்தனை மணிக்குள் கட்டாயம் வீடு திரும்பியாக வேண்டும்?'' என்று விசாரித்தான்.

''கட்டா...யம் கண்டிப்பு என்று ஒன்றும் இல்லை. மாமாவேறு இன்று கிளப்பிற்குப் போகும் நாள். லேட்டாகத்தான் போவார்... அவசரமாகப் போக வேண்டும் என்று இல்...லை...'' அங்கே போய்த் தனியாகக் கிடப்பதற்கு இங்கே ஒரு நண்பரோடு பேசிக் கொண்டு இருக்கப் போகிறேன். இதில் தப்பென்ன? தவறென்ன? வெறும் சாதாரண பேச்சு... என்று தனக்கத்தானே சமாதானமும் கூறிக் கொண்டாள்.

''பின்னே சற்று நேரம் பேசிக் கொண்டு இருக்கலாம்'' என்று கூறி அவளை மியூஸியம் காம்பவுண்டிற்குள் அழைத்துச் சென்றான் சசிகாந்தன்.

அங்கே ஒரு மரத்தடியில் அமர்ந்தபோது, ''உங்களுக்கு மெட்ராஸ் நன்றாகத் தெரிகிறதே'' என்று வியந்தாள் மீரா.

''தெரியாமல் போவானேன். நான் படித்தது இங்கேதான். அவ்வப்போது வந்து போவது வேறு. உறவினர்கள் கூட இங்கே இருக்கிறார்கள்'' என்று விளக்கியவன் அதற்குமேல் தன்னைப் பற்றிப் பேசவில்லை.

அவளைப் பற்றிய விவரம் அறியும் ஆவலை மறைக்கவில்லை; அவனிடம் எதையும் மறைக்கும் எண்ணம் அவளுக்கும் வரவில்லை.

'பெரீய்ய பணக்காரர்களாமே' என்று உடன் பயின்ற பிளஸ் டூ மாணவிகள் விழிகளை விரித்தது; ஒரொருவர். 'இனி மீரா காரில்தான் போவாள்' என்று பொறாமையுடன் பெருமூச்சு விட்டது; 'எனக்கு லிஃப்ட் கொடுப்பாயா' என்று கெஞ்சியபோது தான் பெருமைப்பட்டது எல்லாம் சொன்னாள்.

வீட்டில் எல்லோருக்குமாக வந்து இறங்கிய பட்டு ஆடைகளைத் தொட்டுப் பார்த்து மகிழ்ந்தது அவளுக்கு அப்படியே நினைவு இருந்தது.

கல்யாண வேலைக்கு, 'ஷாப்பிங்' செய்ய என்று ஒரு காரை டிரைவரோடு அவள் வீட்டில் சேதுபதி நிறுத்தியபோது அவளுடைய தகப்பனாருக்குக் கால் தரையில் நிற்கவில்லை. 'தெருமுனைக் கடைக்குக்கூட அப்போது அவர் காரில்தான் போவார்' என்று சிரித்தாள்.

திருமணத்துக்கு ஒரே ஒரு வாரம் இருக்கையில் கேசவமூர்த்தி இறந்ததில் எல்லோருக்குமே பெரிய அதிர்ச்சிதான்.

'ஆனாலும், கழுத்தில் தாலி ஏறுமுன் அந்தப் பையன் போனது கெட்ட நேரத்திலும் ஒரு நல்ல நேரம்' என்று திருமண வேலைகளுக்கு உதவ என்று முன்னராகவே வந்திருந்த அத்தை சொன்னதும் கொஞ்சம் அமைதிப்பட்டாள்.

'அது சரிதான். ஆனால், இப்போ அவ்வளவையும் திருப்பிக் கேட்டால் என்ன செய்வது?' என்று நடேசனுக்கு ஒரே கவலை.

சேதுபதி கொடுத்த பணத்தில் பழைய கடன்களை அடைந்ததோடு நில்லாமல் கன்னாபின்னா என்று ஏதேதோ செலவு செய்து காசைக் கரியாக்கி முடித்திருந்தாரே; எப்படித் திருப்புவது?

காரியத்தன்று சேதுபதியின் வீட்டுக்குச் சென்றபோது அவருக்கு இதே நடுக்கம்தான்.

''ஆனால், மாமா பணத்தைப் பற்றிப் பேசாமல் ஓர் ஆறுதலுக்காக ஒரு பதினைந்து நாள், குழந்தை இங்கேயே இருக்கட்டும். இவள் முகத்தைப் பார்த்து என் துக்கத்தை ஆற்றிக் கொள்கிறேன் என்றதும் ஆகா என்று தலையாட்டிவிட்டார்'' என்று சிரித்தாள் மீரா.

அந்தச் சிரிப்பில் அவன் கலந்து கொள்ளவில்லை.

''பின்னே இந்தச் சேலை?'' என்று உணர்ச்சியற்று கேட்டான்.

''இது...'' ஒரு கணம் மவுனமாக இருந்துவிட்டு ''என் முடிவுதான்'' என்றாள் மீரா.

தூண்டித் துருவிக் கேட்டு, அவள் சொன்னதிலும் சொல்லாமல் விட்டதிலுமாகச் சசி தெரிந்து கொண்டது இது.

அந்தப் பேதமைப் பருவத்துப் பெண்ணின் மனதில்தான் விரும்பியதைச் செதுக்க, சேதுபதிக்குப் பத்து நாட்கள் கூடத் தேவைப்படவில்லை.

பாரதநாட்டுப் பெண்களின் கற்பு, மனத்திண்மை, வாளுக்கு மாலையிட்டு உடன் கட்டை ஏறிய ராஜபுத்திர நாரீமணிகள், மனதாலேயே கண்ணனைக் கணவனாக வரித்து ஜோதியில் கலந்த பூங்கோதை நாச்சியார், நிச்சயிக்கப்பட்ட கணவன் கலிப்பகையார் யுத்தத்தில் இறந்ததும் திருமணமே வேண்டாம் என்று மறுத்து தம்பிநாவுக்கரசரை வளர்த்து ஆளாக்கிய திலகவதியார் இந்த நாட்டில் இம்மாதிரிக் கதைகளுக்கா பஞ்சம்?

தான் திருமணம் ஆகாதவள் என்ற எண்ணமே அடியோடு அற்றுப்போய், அவளது மனதில் தான் கேசவனுடைய விதவை என்ற முத்திரை அழுத்தமாக விழுந்தது; தானாகவே வெள்ளைச் சேலையை எடுத்து அணியவும் வைத்தது.

அந்த வெள்ளைச் சேலைகள் அங்கே ரெடியாக எப்படி வந்தன என்று யோசிக்கும் அளவு சூட்சுமமும் அவளுக்கு இல்லை.

ஆனால், சேதுபதி மேலும் சிந்தித்தார்.

எப்படியும் சிறுபெண், ஆடை. அலங்கார ஆசை வந்துவிடக்கூடும். அது வேறு ஆசைகளுக்கு அடிகோலிவிடக் கூடுமே.

விதம் விதமாய் வண்ண வண்ணத் துணிகள், அணிகள் எல்லாம் கொடுத்தார். தனியறையில் அணிந்து மகிழ்ந்து கொள்ளச் செய்தார். இன்னும் கொஞ்சம்கூட அதிகப்படியாகச் சென்று கற்பனையில் மகனோடு வாழவும் தூண்டிவிட்டார்.

கொஞ்சம் விவரம் தெரிந்த பெண் என்றால், அப்படியும் நடந்து கொண்டிருப்பாள். ஆனால், இந்தப் பிள்ளை மனம் அந்தத் தூண்டுதலைப் புரிந்த கொள்ளவே இல்லை.

பதினைந்து நாட்கள் கழித்து அழைத்துப் போக வந்த தாயார், இதென்னடி கோலம்!'' என்று பதறியபோது, ''அவர் கூட ஒரு வாரம் இருந்திருந்தால் இதே கோலம்தானே!'' என்று வெகு அமர்த்தலான குரலில் கிளிப்பிள்ளையாய் ஒப்பித்தாள் மீரா.

''முட்டாள், வீட்டுக்கு கிளம்பு'' என்று மரகதம் அதட்டியபோது, ''என் வீட்டில் தான் இருக்கிறேன்'' அழுத்தத்துடன் உரைத்தாள்.

சற்றுத் திகைத்துவிட்டு, ''உன் அப்பா வந்து இரண்டு அதட்டல் போட்டால் தான் உனக்கு புத்தி வரும்'' என்று தன் கணவரைத் தேடிப் போனாள் அந்த அம்மாள்.

ஆனால், ''சரிதான், சும்மா ஊரைக் கூட்டாதே. இதோ பார். முப்பதாயிரம் ரூபாய் நம்ம கண்ணனுக்கு கவர்மன்ட் சீட் கிடைக்காவிட்டால் போகிறது. 'காபிடேஷன் பீஸ்' கட்டிச் சேருங்கள் என்று சம்மந்தி கொடுத்தார். சும்மா என்றால் ஐம்பது கேட்பார்களாம். இவர் சொல்லி வைத்திருப்பதால் இருபத்தைந்துக்குச் சேர்த்துக் கொள்ளச் சொன்னார்! வா போகலாம்'' என்றார் நடேசன்.

''மீ... மீரா?''

''என்ன? மீராவுக்கு என்ன? கண்ணுக்குக் கண்ணாக அவளுடைய மாமனார் பார்த்துக் கொள்வார். அவருக்கும் தான் பின்னாடி வேறே யார்? நீலா'' என்று அப்போது தயங்கிய மனைவியை அதட்டி அழைத்துச் சென்று விட்டார்.

ஆனால், சேதுபதி அத்தோடு மட்டும் விட்டு விடவில்லை.

நாலு ஆண்டுப் படிப்பைக் கண்ணன் ஐந்து ஆண்டாகப் படித்தபோது சலிக்காமல் ஃபீஸ் கட்டினார். வேலை, திருமணத்துக்கு ஏற்பாடு செய்து நடத்திக்

கொடுத்தார். இரண்டு ஆண்டுகளுக்கு முன் மீராவுடைய தங்கை ராதையின் திருமணத்தையும் முடித்துக் கொடுத்ததோ அவளுடைய கணவருக்கும் வேலை கொடுத்தார், இன்னும் அவளுக்கும் அடுத்த தங்கைகள் கீதா, ஸ்வேதா, தம்பி சுந்தர் எல்லோருடைய எதிர் காலத்துக்கும் அவரே பொறுப்பு என்றிருக்கிறார். அது மட்டும் இல்லை. மீராவுக்கும் பொருளாதாரம் எல்லாம் கற்றுக்கொடுத்து ஒரு டைரக்டர் ஆக்கியிருக்கிறார்.

''அப்பாவுக்கு வரவுக்கும் செலவுக்கும் உள்ள தொடர்பே தெரியாது. முன்னெல்லாம் மாசக் கடைசியில் தண்ணீர்ச் சாதமும் ஊறுகாயம்தான். அம்மா அடிக்கடி, இந்தப் பிள்ளைகள் எதிர்காலம் என்ன ஆகுமோ என்று கலங்கிப் போவார்கள். இப்போது எல்லாம் மாறிவிட்டது. காரணம் மாமாதானே. அதனால் எங்கள் எல்லோருக்குமே மாமா என்றால் தெய்வம்தான்'' என்று கூறி முடித்தபோது மீராவின் குரல் கம்மியிருந்தது.

''பின்னே?'' என்றான் அவன் ஒரு மாதிரிக் குரலில்.

குரலில் வேறுபாட்டை உணர்ந்து கண்ணைத் துடைத்துக் கொண்டு அவனை நோக்க அவள் முயலும்போதே சசிகாந்தன் எழுந்து விட்டான். ''கிளம்பலாமா?''

சட்டென அவள் மனம் வாடிப் போயிற்று. அவனுக்கு ஏதோ கோபம் என்பது அவளுக்கு நன்றாகவே புரிந்தது. காரணம் தெரியாததால் மனம் தவியாய்த் தவித்தது. ஆனால், உரிமையில்லாததால் கேட்டுத் தெரிந்து கொள்ளும் துணிவும் வரவில்லை. மெல்ல எழுந்து நின்றாள்.

அவளது வாடிய முகத்தைக் கண்டதும் இளகி, ''நாளை என்னோடு ஓர் இடத்துக்கு வருகிறாயா?'' என்று கேட்டான் அவன்.

''எங்கே?'' என்றாள் முகம் மலர.

''அதை நாளை சொல்வேனாம். நாலு மணிக்கு இதே இடத்தில் சந்திக்கலாம்.''

வழக்க விரோதமாய் சேதுபதி வீடு திரும்பியிருந்தார்.

ஹாலில் குறுக்கும் நெடுக்குமாகக் கூண்டுப் புலி போல நடந்து கொண்டு இருந்தவர், இவளைப் பார்த்ததும், ''எங்கே போனாய்?'' என்று எரிந்து விழுந்தார்.

''ஃப்வுண்டன் பிளாசா... தில்லையாடி வள்ளியம்மை...''

சட்டென விறைப்பு மறைந்து தொய்ந்து சோபாவில் விழுந்தார் அவர். ''என் மாத்திரை எடு'' என்றபோது குரலே எழும்பவில்லை.

சேதுபதிக்கு ரத்த அழுத்தம் உண்டு. தினமும் மாத்திரை போட்டுக் கொள்வார். அது போக, கட்டுப்படுத்த முடியாமல் படபடப்பு அதிகமாகும்போது சாப்பிட என்று டாக்டர் வேறு மாத்திரையும் தந்திருந்தார். அதை எடுத்துக் கொடுத்து நீரும் தந்தாள் மீரா.

சும்மா என்றால் என்ன விஷயம் மாமா என்று விசாரித்திருப்பாள். ஆனால்,

சசிகாந்தனோடு கழித்த இனிய மாலை நேரம் பற்றி மனதுள் குற்றக் குறுகுறுப்பு உறுத்தவே மௌனமாகவே நின்றாள்.

''ராஸ்கல்!'' என்றார் அவர் திடீரென்று. ''சும்மா விலாங்கு மாதிரி நழுவுகிறான். ஒரு முடிவு செய்யாமல் அலைக் கழிக்கிறான். 'போடா கழுதை' என்று மூஞ்சியில் அடித்து விரட்டலாம் என்றாலோ நஷ்டம் நமதாய் இருக்கிறது... எவளோடு சுற்றப் போனானோ அந்தக் கடா மாடு. மதியம் வரவே இல்லை... அதுதான், அந்தக் கழுதை சசிகாந்தனைச் சொல்கிறேன்'' என்றார் எரிச்சலோடு.

குப்பென அவள் முகம் வியர்த்து விட்டது. கண்களில் எதையும் கண்டு கொள்வாரோ என்ற பயத்தில் பார்வையைத் தரையில் பதித்துப் பேசாமல் நின்றாள் மீரா.

ஆனால், பேச்சின்றி அவள் நின்ற அந்த நிலையே அவரை யோசிக்க வைத்தது. கூடவே, அந்தக் கனகனச் சிவப்பு வேறு. ஆத்திரத்துடன் பேச வாயெடுத்தவர் அதை அடக்கிக் கொண்டார். 'அந்தக் குஷனை எடு' என்று வசதியாகச் சாய்ந்து கொண்டார்.

''ஏனம்மா நின்று கொண்டே இருக்கிறாய்? உட்காரேன்'' என்றார் அன்பொழுக. ''இவ்வளவு நேரம் நீ நிற்பதைக் கண்டால் உன் புருஷன் தாங்க மாட்டான்.''

சற்றுக் கலங்கிப்போய், 'நான் மாடிக்கி' என்று தொடங்கியவளை இடைமறித்து, மாடிக்குப் போய்க் கேசவனோடு மனதாரக் கொஞ்ச வேண்டுமாக்கும்? அதற்குத்தான் இரவு முழுவதும் இருக்கிறதே, இடையூறே இல்லாமல்'' என்று கண் சிமிட்டிச் சிரித்தார் சேதுபதி.

மாடியறையே வெறுத்துப் போய்விட, எதிரே ஓர் ஆசனத்தில் அமர்ந்தாள் மீரா.

''என்...னமோ சொல்லிக் கொண்டு இருந்தேனே... ஆங், நினைவு வந்துவிட்டது. அந்தப் பொறுக்கிப் பயல் சசிகாந்தனைப் பற்றிப் பேசிக் கொண்டு இருந்தோம் இல்லையா? மெய்யாகவே அவன் பொறுக்கிதானாம், மருமகளே. போகிற இடத்தில் எல்லாம் அங்கங்கே ஜல்சாவுக்கு ஒருத்தியைப் பிடித்து விடுவானாம். அதிலும் தொழிலில் பயன்படக்கூடும் என்றால் அப்படியே வளைத்துப் போட்டு விடுவானாம்.

பூனாவிலே ஒரு நல்ல குடும்பத்துப் பெண் - உன்னைப் போல என்று வைத்துக் கொள்ளேன். அவளை நைசாக நைச்சியம் பண்ணியிருக்கிறான். பரம்பரையாகப் பெரிய குடும்பம் லேசில் நடக்கவில்லை. அதனால், கல்யாணமே செய்து கொள்ளுவதாகச் சத்தியம் செய்திருக்கிறான். தன் குடும்பம் போல நினைத்து அவனது சத்தியத்தை நம்பிவிட்டது அந்தப் பெண். பிறகு கட்டிக்கொண்டுதான் ஆக வேண்டும் என்கிற நிலைமை வந்ததும் இந்தத் திருட்டுப் பயல் என்ன செய்தான் தெரியுமா? ஓசைப்படாமல் ஸ்டேட்சுக்குக் கம்பி நீட்டி விட்டான். இரண்டு வருஷம் அங்கேயே டேராவாம். இங்கே இவள் அவமானம் தாங்காமல் தூக்கில் தொங்கிச் செத்து, கலவரம் அடங்கு மட்டும்

மூச்சுக் காட்டவில்லை அந்த ஓடுகாலிப் பயல்.

''ஆனால், அவனைச் சொல்லியும் தான் என்ன பிரயோசனம்? இந்தக் கழுதைகளும்தான் மானம் கெட்டுப் போய் மேலே விழுகிறதுகள். ச்சு. அத்தோடு அவன் ஆசைக்குக் கட்டுவது என்றால் சட்டமும்தான் சும்மா விட்டு விடுமா?''

மீராவின் நெஞ்சு ஆயிரம் கூறாய்க் கிழிபட்டுப் போயிற்று. அவர் சொன்ன விதத்தில் உள்ளுரக் கூசிப் போனாள். அவமானத்தோடு வேதனை வேறு.

அப்போதும் மாமா சொல்வது அவ்வளவும் உண்மை என்று அவளால் நம்ப முடியவில்லை.

கொஞ்சமேனும் அடிப்படை இல்லாமல் இவர் இவ்வளவு பெரிய பொய்க் கட்டிடம் எழுப்பக் கூடுமா?

அதோடு சட்டம் சும்மாவிடாது என்கிறாரே.

அப்படியானால் அவன் ஏற்கனவே மணம் ஆனவனா? அல்லது ஊருக்கு ஒரு பெண் மணக்க முடியாது என்றாரா? இரண்டும் இருக்காது என்று அவள் மனம் கதறக் கதற, ஏன் இருக்காது, அவனைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? என்று கேட்டது அறிவு.

இருந்திருந்து ஆறுநாள் - ஆறே நாள் பழக்கம்.

அதிலும் அன்று அவ்வளவு பேசிய போதும் அவளைப் பற்றித் துருவித் துருவி விசாரித்தவன், தன்னைப் பற்றி ஒன்றும் கூறினான் இல்லையே. ஒரு தரம் பேச்சு வந்தபோது உடனே மாற்றி விட்டானே. இதற்கு என்ன காரணம்?

சேதுபதியின் இடுங்கிய பார்வை தன்னைத் தொடர்வதை உணரக்கூட இல்லாமல் எழுந்து சென்றாள்.

அவனது ஒவ்வொரு அசைவும், பேச்சும் நிழல் படமாய் நெஞ்சுத் திரையில் ஓடின.

ஜாடைமாடையாக, குறிப்புகாட்டி அவ்வளவு பேசிய அவன் காதலைப் பற்றியோ, திருமணம் பற்றியோ ஒரு தடவை கூடப் பேசவில்லையே.

ஆனால், மீராவை ஏய்ப்பது அவ்வளவு எளிதா?

இவ்வளவு பெரிய வீட்டை, தோட்டத்தை, அலுவலகத்தை நிர்வாகம் செய்கிறவளுக்கு அவ்வளவு புத்திகட்டையா?

ஆனால், அத்தோடு ஒதுங்கி ஒளியவும் மனம் வரவில்லை.

நேருக்கு நேரே ஒரு வார்த்தை கேட்டு விட்டால் பிறகு வெட்டிக் கொள்ளலாம்.

வெட்டிக் கொள்வது பற்றி எண்ணும்போதே அவளுக்கு அழுகை வந்தது.

இரவெல்லாம் அதே அழுகைதான். ஆனாலும், சசிகாந்தன் தவறானவனாக இருந்தால் அடியோடு வெட்டிக் கொள்ளும் முடிவில் மட்டும் அவள்

மாறுவதாக இல்லை.

மறுநாளும் மீரா அலுவலகம் வராததுபற்றி சேதுபதி எரிச்சல் காட்டாதது மட்டுமின்றி, ''முகமே சரியாக இல்லை, எதற்கும் இன்னும் ஒரு நாள் ரெஸ்ட் எடுத்துக் கொள்ளம்மா'' என்று கரிசனமாய்க் கூறிவிட்டுப் போனார்.

ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி ஃபவுண்டன் பிளாசாவுக்கு மீராவைச் சுமந்திருந்த ஃபியட் குறிப்பிட்டிருந்த நேரம் தவறாமல் சென்று சேர்ந்தது.

''ஹல்லோ, ஸ்லீப்பிங் பியூட்டி?'' என்று குதூகலக் குரலில் அழைத்தபடி கதவைத் திறந்தான் சசிகாந்தன்.

ஸ்லீப்பிங் பியூட்டியா? ஒருவேளை அவள் உறக்கத்தில் இருந்தாளா?

''ஹல்லோ...'' எவ்வளவோ முயன்றும் அவளால் தன் குரலில் முழு உயிரைக் கொண்டுவர முடியவில்லை.

டிரைவரை ஜாடையால் இறங்கி அகலச் சொல்லிவிட்டு அவள் அருகே ஏறி அமர்ந்தான் சசிகாந்தன்.

''என்னம்மா?''

ஏதோ இருப்பதை வினாடியில் உணர்ந்து அவன் கேட்டவிதம் அவளை வெகுவாகப் பாதித்தது. ஆனாலும், சேதுபதியின் கூற்றில் சிறிதளவேனும் உண்மை இருந்தால் இந்தப் பேச்சும் பாவனையும் அவனுக்குத் தண்ணீர் பட்டபாடுதானே.

வெகு சிரமப்பட்டு வரவழைத்த சாதாரண குரலில், ''ஒன்றும் இல்லையே ஒ... ஒன்றுமே... இல்லையே'' என்று உரைத்தாள் மீரா. மேலே அவன் ஏதும் கேட்க இடம் கொடாமல், ''ஒரு சினேகிதி... ஸ்டேட்சுக்குப் போயிருந்தவள் டெலிஃபோன் செய்தாள். ஏன் சசிகாந்தன், நீங்கள் ஸ்டேட்சுக்கும் போயிருக்கிறீர்களா?!'' என்று விட்டேற்றியான குரலில் விசாரித்தாள்.

அவள் முகத்தில் பார்வையைப் பதித்து, ''ம்...'' என்று ஆமோதித்தான் அவன்.

''சும்மா சுற்றிப் பார்க்கவா... அல்லது த... தங்கியிருந்தீர்களா?''

''இரண்டு ஆண்டுகள்.''

சுருக்கமான பதில்கள் என்றாலும் அவள் நெஞ்சில் சம்மட்டி அடியாய் விழுந்தது. ஆக மாமா முழுதாய்ப் பொய் சொல்லவில்லை.

ஆயினும் கடைசிவரை உயிரைவிட விரும்பாத நம்பிக்கை, காரணம் வேறாக இருக்கலாம் என்றது.

அதையும் தெரிந்து கொள்ள வேண்டியதுதான்.

''உ...உங்கள் மனைவி நலமா?'' என்று தன் கை நகங்களைக் கவனமாக ஆராய்ந்தபடி குசலம் விசாரித்தாள்.

''இப்போதைக்கு அவ்வளவு சுகமாக இருப்பதுபோலத் தெரியவில்லை, மீரா'' என்று சோகமான குரலில் கூறி அவள் தலையில் இடியைத் தூக்கிப் போட்டான் சசிகாந்தன்.

தன் நடிப்பும் பாவனையும் மறந்துவிடப் பேந்த விழித்தாள் மீரா.

ஓரக்கண்ணால் அவளை நோக்கிய அவனது உதடுகள் உள்ளடங்கிய சிரிப்பில் துடிப்பது மீராவின் அடிபட்ட விழிகளில் பட்டது.

ஆகத் திருமணம் ஆனவன்தான்!

ஆனால், அவளுடைய நெஞ்சு, வலியால் துடிப்பது அவனுக்குத் தெரியவில்லையா? எப்படிச் சிரித்துக் கொண்டே சொல்கிறான்? இதெல்லாம் இவர்களுக்கு விளையாட்டுத்தானா? நல்ல வேளையாக அந்தப் பூனாப் பெண் போல அடியோடு அவலப்படாமல்...

மேலேயும் ஏதோ கூறுகிறானே... ''ஏனென்றால் அவன் பேச்சு 'நஞ்ஞநமன' போடுகிறது. கண்ணிலோ லேசான வீக்கமும் சிவப்பும், உடம்புச் சூடு பற்றித் தொட்டுப் பார்க்க அனுமதி கிடைக்குமா என்று தெரியவில்லை. என்ன, தொட்டுப் பார்த்துச் சொல்லட்டுமா?'' என்று புறங்கையால் அவளது கன்னத்தை மிருதுவாகத் தொட்டான் சசிகாந்தன்.

அடக்கமாட்டாமல் கலகலவென்று கண்ணீர் உகுத்தாள் மீரா.

''ஷ்... மீரா, பொது இடம். கட்டுப்படுத்திக் கொள்'' என்று ஒரு விரலால் அவளது கண்ணீரைத் தட்டிவிட்டான் அவன்.

அவள் மெல்லச் சுதாரிக்கவும், ''சேதுபதியார் கைங்கரியமா?'' என்று சற்று ஏளனமாக வினவினான்.

உதட்டை அழுத்திக் கொண்டு பேசாதிருந்தாள் அவள்.

''அப்படி என்ன சொன்னார்?''

மெல்ல, ''உங்களுக்கு...'' என்று தொடங்கியவள் சற்றுத் திகைத்தாள்.

அவன் திருமணம் ஆனவன் என்று அவர் வாயால் சொல்லவில்லை; அவன் நடத்தை பற்றி அவர் கூறியதை வார்த்தைகளில் மொழிய இப்போது அவளுக்குக் கூசியது.

ஆனால், ''எதற்கோ பறக்கிறேன் நான் என்னை ஒரு நண்பனாக எண்ணிச்

சொல்லக் கூட உன்னால் முடியாதா?'' என்று படபடத்தான் அவன்.

''நீ...நீங்கள் ஊருக்கு ஒரு பெண்ணை... அதிலும் தொழில் தொடர்புள்ள பெண்ணை... நீங்கள் விரும்பனால் கூட இந்தப் பெண்களை மணக்கச் சட்டம் இடம் தரா..து என்று...''

மேலே கேளாமல் காரைவிட்டு இறங்கினான் சசிகாந்தன்.

பார்வையால் அழைக்கவும் ஓடி வந்த நாகேந்திரனிடம், ''உள்ளே சமோசா கடையிருக்கிறது. ஏதாவது ஆர்டர் பண்ணி சாப்பிட்டுக் கொண்டு இரு. நாங்கள் சரியாக ஒரு மணி நேரத்தில் வருகிறோம்'' என்று அனுப்பி விட்டு முன்புறம் ஏறினான்.

''ஒருமணிநேரம்! வேண்டாம் சசி வேண்டாம். நான் இன்று சீக்கிரம் போய்விட வேண்டும்'' என்றாள் மீரா.

''எப்படி முடியும்? உன்னை என் அறைக்கு அழைத்துச் சென்று, மயக்கி, கெடுத்து, களைப்பு தீர்ந்து, திரும்பி வரக் குறைந்தது ஒரு மணி நேரமாவது வேண்டாமா?'' என்றான் அவன் எகத்தாளமாக.

முதல் தடவையாக அவன் கோபத்தை உணர்ந்து, அவளுக்கு நெஞ்சுக்குள் வலித்தது. ''சாரி'' என்றாள் மெதுவாக.

பேசாமலே இருந்து அவளை மேலும் சற்றுத் துடிக்க வைத்துவிட்டுப், ''பின்னே, என்னைப் பற்றி ஒருவர் பிழையாக ஒன்று சொன்னால் அவ்வளவு எளிதாக நம்பி விடுவதா?'' என்றான் சினக்குரலிலேயே.

தலையசைத்து, ''எளிதாக இல்லை, சசி.'' என்றவளின் இமைகளிலிருந்து இரு பெரிய நீர் மணிகள் உதிர்ந்து சிதறின.

''சரி சரி இந்தச் 'சசி' என்ற அழைப்புக்காக இந்தத் தடவை மன்னிக்கிறேன். கண்ணைத் துடைத்துக் கொள். கைக்குட்டை இருக்கிறதா அல்லது என் பாக்கெட்டிலிருந்து எடுத்துக் கொள்'' என்றான் அவன்.

''என்னிடமே இருக்கிறது'' என்று கைப்பையைத் திறந்து அழகாக மடித்து வைத்திருந்த வெண்ணிறக் கைக்குட்டையை எடுத்துக் கண்ணீரை ஒற்றி எடுத்தாள் மீரா.

''பவுடர் ஏதாவது இருந்தால்கூட லேசாகப் போட்டுக் கொள். நாம் போகிற இடத்தில் நீ அழுதது தெரியவேண்டாம்'' என்று கூறி அவன் அழைத்துச் சென்ற இடத்தைப் பார்த்ததுமே அவள் மனதில் கொஞ்ச நஞ்சம் இருந்த சஞ்சலமும் அடியோடு மறைந்து போயிற்று.

அது ஒரு ரிட்டயர்டு ஜட்ஜின் வீடு. அவனுக்குப் பெரிய தாயாரின் - தாயின் தமக்கையின் வீடு. அவனிடம் உயிராக, கிட்டத்தட்ட அன்னையாகவே இருந்தார் சரசுவதி அம்மாள்.

அவளைப் பற்றி அங்கே சொல்லியிருப்பான் போலும், மிகவும் பிரியத்துடன்

பழகினார்.

இவர்கள் இருவரும் கிளம்பும்போது, ஒரு ரோஜா வண்ணப் பட்டுச் சேலையையும் குங்குமச் சிமிழையும் அவளுக்குப் பரிசாகக் கொடுத்தார். ''அடுத்த முறை வரும்போது இந்தச் சேலையைக் கட்டிக் கொண்டு நெற்றியில் திலகத்துடன் வர வேண்டும்'' என்று கூறி வழியனுப்பினார்.

திரும்பி வருகையில் ஏதோ நினைத்து, 'ஸ்டேட்ஸ் பற்றித் கேட்டாயே, அதற்கும் ஏதாவது கதை சொன்னாரா?'' என்று வினவினான் சசிகாந்தன்.

அதுவரை இருந்த இனிமை லேசாக கலைய அவள் முகம் வாடியது.

''பரவாயில்லை. அவர் சொன்னதையெல்லாம் நீ கஷ்டப்பட்டுத் திருப்பிச் சொல்ல வேண்டாம். ஆனால், நான் அங்கே சென்ற காரணம்...''

''சொல்ல வேண்டாம்'' என்று இடைமறித்துச் சொன்னாள் மீரா.

''இருக்கட்டும் தெரிந்து கொள். அங்கே எம்.பி.ஏ. முடிக்காமல் தொழிலுக்குள் நுழையவிட மாட்டேன் என்று விட்டார் என் அப்பா'' என்று விவரம் கூறினான் அவன்.

இதைப் போய் என்னவெல்லாம் நினைத்து... சீச்சி. ''என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.'' என்றாள் அவள் மெல்லிய குரலில்.

அவனது ஓரப்பார்வை ஒரு கணம் அவள் மேல் படிந்து மீண்டது. ''அதுதான் சொன்னேனே, சசி என்ற அழைப்புக்காக இம்முறை மன்னிப்பதாக'' என்றவன் குரல் மாற, ''ஆனால் இனி ஒரு சின்ன பிசகு செய்தாலும் சரிதான். என் விருப்பம் போலத் தண்டனை கொடுக்காமல் விடமாட்டேன். கவனித்துக் கொள். என் விருப்பம் போலத் தண்டனை ஆமாம்.'' என்று மிரட்டுவது போலப் புகன்று பின் சிரித்தான்.

அந்தப் பாவனையும் சிரிப்பும் அவளைச் சிவக்க வைத்தன.

இரவெல்லாம் அவள் மனம் ஏதேதோ இனிய கற்பனைகளில் மிதந்தது.

கூடவே இனி அவள் இங்கு இருப்பது நேர்மை இல்லை என்கிற நியாயமும் உறுத்திற்று.

அன்று குமுறிய தாயார் இன்று இரு கை விரித்து வரவேற்பார். நாளையே அம்மாவிடம் போய்...

ஆனால், நாளைக்கு சேதுபதி வேறு வேலை வைத்திருந்தார். ''இன்று விழுப்புரம் ஃபாக்டரியை சற்று நேரில் போய்ப் பார்த்து விட்டு வந்து விடம்மா. என்னமோ ஒரே பிராபிளமாம். நானே போவேன். ஆனால், ஒருவாரமாய் என் 'பிரஷர், வேறு ஏறி விட்டிருக்கிறதில்லையா? என்னால், ஒன்றும் முடியவில்லை. ஹ்ம்ம்...'' என்று களைப்புடன் கேட்டபோது அவளால் மறுக்க முடியவில்லை.

என்ன, இருந்திருந்து இன்னும் ஒருநாள்.

எவ்வளவோ உதவி செய்திருக்கும் மாமாவுக்கு அவர் கேட்கும் இந்தச் சிறு உதவி செய்யவில்லை என்றால் எப்படி? பாவம். அவள் இங்கிருந்து போனபிறகு ரொம்பவும் கஷ்டப்படுவார்...

ஆனால், இங்கேயும் இருந்து கொண்டு சசியை மணப்பது பற்றித் திட்டமிடுவது என்றால் அவருக்கு இன்னமும் அதிக வருத்தம்தான் உண்டாகும். அதனால் வெளியேறி விடுவதுதான் மேல்.

ஒருவேளை மாலையில் சீக்கிரம் திரும்பி வந்துவிட்டால், இன்றே அம்மாவிடம் சொல்லிவிடலாம்.

ஆனால், சென்ற வேலைதான் சீக்கிரமாக முடிவதாக இல்லை.

சில நிர்வாகக் குளறுபடிகள். சம்பந்தப்பட்டவர்களைக் கூப்பிட்டு விசாரிக்கலாம் என்றால், அவர்கள் யாரும் அலுவலகத்துக்கு வரவே இல்லை, அழைத்து வர அனுப்பியிருப்பதாக நிர்வாகி சொன்ன ஆள்கூடத் திரும்பிவரக் காணோம். அலுத்துச் சலித்துப் போய், இன்னின்ன மாதிரி விஷயத்தைக் கையாளும்படி நிர்வாகியிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினாள். ஆனால், அப்போது தான் வேலையில் சேர்ந்தவர் போல அந்த நிர்வாகிக்கு ஆயிரம் சந்தேகங்கள் புதிது புதிதாகத் தோன்றிக் கொண்டே இருந்தன.

எல்லாம் முடிந்து கிளம்பினால், காண்டசா கூட வழியில் மக்கர் செய்தது. கடைசியாக ஒரு வழியாக மீரா வீடு வந்து சேர்கையில் வெகு நேரமாகிவிட்டது.

விழுப்புரம் விவரங்களை மீரா சொன்னபோது சேதுபதி அதை அவ்வளவாகக் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை.

அவள் பேசிக் கொண்டு இருக்கும்போது திடுமெனக் குறுக்கிட்டு, ''என் செல்வங்கள் அத்தனைக்கும் உன்னையே வாரிசாக நியமித்து எழுதச் சொன்னால் வக்கீல் சிரிக்கிறார், மீரா. அவள் சின்னப் பெண்; அவளால் இதையெல்லாம் நிர்வகிக்கவே முடியாது என்கிறார். நான் சொல்லிவிட்டேன்; 'என் மருமகள் கெட்டிக்காரி, பொறுப்புணர்ச்சி உள்ளவள். ஒரு கடமை என்று வந்துவிட்டால் தன் சுகத்தையெல்லாம் தியாகம் செய்தாவது கடமையை நிறைவேற்றக் கூடியவள். இந்த அடிப்படைக் குணங்கள் இருக்கிறபோது இன்னும் ஒரு பத்து வருஷம் கூடவே இருந்து வழி நடத்திக் கொடுத்து விட்டேன் என்றால் அப்புறம் எனக்கும் மேலே அவள் நிர்வாகம் நடத்துவாள்' என்று அடித்துச் சொல்லி விட்டேன். இன்னும் ஐந்து ஆண்டுகள் போனபிறகு அதிகாரத்தையும் முழுவதுமாக உன் பெயருக்கு மாற்றிவிடப் போகிறேன்.

''இன்னும் ஐந்து ஆண்டுகளில் என்னுடைய இந்த இருபது கோடி முப்பதாகி விடாதா, மீரா?'' என்றார்.

அவர் சொன்ன 'முப்பது கோடி' அவள் மனதில் பதியவில்லை.

ஆனால், பத்து ஆண்டுகளுக்குத் திட்டம் போடுகிறாரே, ஆனால், அவள் பத்து நாட்கள் கூட இங்கே இருக்கப் போவதில்லை என்பது தெரிந்தால் இந்த அன்பு உள்ளம் எப்படித் துடித்துப் போகும் என்று மனம் பரிதவித்தாள்.

இவரிடம் எப்படிச் சொல்வது?

அம்மா மூலமாகத்தான்.

ஆனால், ஒன்றை மட்டும் மறவாமல் தெளிவாகத் தெரிவிக்கச் சொல்ல வேண்டும். மாமாவிடம் அவளுக்கு உள்ள அன்பில் சற்றும் மாற்றம் இல்லை. பெற்ற தந்தைக்கு ஈடான பிரியமும் மரியாதையும் அப்படியே இருக்கின்றன.

அவரும் இன்றுவரை காட்டி வரும் பரிவு மாறாமல் மகளாகவே கருதிப் பழகலாம். பிரியமாய் அவளுடைய திருமணத்தைக்கூட நடத்தி வைக்கலாம்.

மறுநாள் தாயாரைப் பார்க்கப் போவதாக கிளம்பியபோது போர்டிகோவில் காண்டசா வந்த நின்றது.

டிரைவரைப் பார்த்து லேசாக முறுவலித்து 'ஃபியட் போதும் சூசை. நாகேந்திரனை வரச் சொல்' என்றாள்.

''அவனை நேத்தைக்கே அய்யா டிஸ்மிஸ் பண்ணிட்டாங்கம்மா'' என்று பதில் வரவும் மீரா அப்படியே திகைத்துப் போனாள்.

ஏன்? சசிகாந்தன் ஆள் என்று கண்டு கொண்டாரா? யாரிடம் கேட்பது?

''ஏறுங்கம்மா'' என்று சூசை கார் கதவைத் திறந்து விட்டபோது ஒன்றும் சொல்லத் தோன்றாமல் ஏறி அமர்ந்தாள்.

நாகேந்திரனை வேலையிலிருந்து விலக்குவானேன்? மாமாவுக்கு எதுவரை தெரியும்? மேலே என்ன செய்யப் போகிறார்? வழியெல்லாம் இந்தக் கேள்விகள் அவள் மனதை வண்டாய்க் குடைந்தன.

ஆனால், அவள் விஷயத்தில் அவர் அப்படி என்ன செய்து விட முடியும்?

அன்று சனிக்கிழமை. தம்பி தங்கைகள் எல்லோரும் வீட்டில் இருந்தனர். ஹாலின் ஒரு புறத்தில் இரண்டு தங்கைகளும கேரம் விளையாடிக் கொண்டு இருக்க, புதிய 'வீசிஆரில்' படம் பார்த்துக் கொண்டிருந்தான் தம்பி. நேற்றுத்தான் தவணை முறையில் வாங்கி வந்ததாம்! எப்படிக் கட்டுவார்கள் என்று யோசனை வந்து மறைந்தது அவளுக்கு.

இவளைக் கண்டதும் ஒரு சின்னக் களேபரமான வரவேற்பு. தங்கைகளின் ஆரவாரம்.

ஆனால், மீரா தன்னுடைய தாயுடன் தனித்துப் பேச வந்தவள் ஆயிற்றே. சற்று நேரக் கலகலப்பின் பின்னர், மீண்டும் தம்பி தங்கையரை அவரவர் பொழுதுபோக்கில் ஈடுபடுத்தி விட்டு ஹாலை அடுத்திருந்த தனியறைக்குத் தாயை அழைத்து வந்தாள்.

''அம்...'' என்று தொடங்கியவளுக்கு டிரைவர் பற்றி சசிகாந்தன் குறிப்பிட்டது நினைவு வந்தது.

பக்கத்து சன்னல் வழியே லேசாக எட்டிப் பார்த்தாள்.

அங்கே முன் சுவர்ப்புறம் சாய்ந்தாற்போல சூசை நிற்பது தெரிந்தது. அங்கிருந்து வீட்டினுள் நட்க்கும் பேச்சை நன்றாகவே கேட்க முடியும். அதே சமயம் சற்றுக் களைப்புடன் சுவரில் சாய்ந்து கொண்டு நிற்பது போலவும் தோன்றும்... எது நிஜம்?

வினாடியில் முடிவெடுத்துத் தம்பி தங்கையரை அழைத்து ரெடியாகச் சொல்லி பணம் கொடுத்துக் காரில் சினிமாவுக்குப் போய் வருமாறு அனுப்பினாள். சினிமா முடியும் வரை இருந்து அழைத்து வருமாறு சூசையைப் பணித்தாள்.

ஆனால், இவ்வளவும் அவளைப் பொறுத்த வரையில் ஒரு பயனும் அற்றதாய்த்தான் போயிற்று.

இத்தனைக்கும் அவள் சசிகாந்தனைப் பற்றி ஒரு வார்த்தை கூறிவிடவில்லை. சும்மா பொதுவான பேச்சுதான்.

''ஒன்று சொல்ல வந்தேன் அம்மா'' என்றாள் சலுகையுடனே.

''என்னடா கண்ணு!''

தாயின் குரலில் இருந்த கனிவு உற்சாகம் ஊட்ட, ''மாமா வீட்டில் இருப்பது ஒரு மாதிரி இருக்கிறது அம்மா. இனி நான் இங்கேயே வந்து விடப் போகிறேன்'' என்றாள் முறுவலோடு.

''ஆ!'' என்ற தாயின் அதிர்ச்சியில் பிறந்த கலக்கம். ''என்னடி உளறுகிறாய்?'' என்ற அதட்டலில் மறைந்தது.

''இதில் உளறல் என்னம்மா! அவர் நமக்கு என்ன உறவு? அங்கே நான் இருப்பது எந்த விதத்தில் நியாயம்?'' என்று கேட்டாள்.

''உனக்கு என்ன பைத்தியமா? அவர் உனக்கு மாமனாரடி. உன் புருஷனுக்குத் தகப்பனார்.''

''திருமணமே ஆகாமல் அந்த உறவெல்லாம் எங்கிருந்தம்மா வரும்?'' என்று விடாமல் கேட்டாள் மீரா.

வெறுப்பும் எரிச்சலுமாக மகளை வெறித்து விட்டு, ''ஒருவாரம் கழித்து மாப்பிள்ளை செத்திருந்தால் உன்னால் இந்தப் பேச்சு பேச முடியுமா?'' என்று அழுத்தம் திருத்தமாகக் கேட்டாள் மரகதம்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் பதினேழு வயதுப் பேதமையில், மெல்லிய குரலில் அமைதியாக அவள் கூறிய அதே வார்த்தைகள்!

ஆனால், இன்று நாற்பத்தைந்தைத் தாண்டிய உலக அனுபவம் மிக்க தாயின் வாயிலிருந்து வெளி வருகையில் சற்றும் பொருந்தாமல் பிசிர் தட்டியது.

அன்று அதே வார்த்தைகளை அவள் சொன்னபோது, அழுகையும் அதட்டலுமாகத் தாயார் பேசியது மீராவுக்கு நினைவு வந்தது. அந்தத் தாயா இப்படிப் பேசுவது!

''ஆனால் அந்த ஒரு வாரம் கேசவன் வாழ்ந்திருக்கவில்லையே, அம்மா'' என்று விடாமல் கேட்டாள்.

மீண்டும் ஒரு தரம் மகளை வெறித்து விட்டு ''பெரியவரிடம் ஏதும் தகராறாடி? அவரிடம் ஒன்றும் இப்படிப் பேத்தி விடவில்லையே?'' என்று கவலையுடன் விசாரித்தாள் மரகதம்.

ஒருவேளை, எவ்வளவோ நன்மைகளைச் செய்திருக்கும் மாமாவிடம் நன்றியில்லாமல் அவர் மனம் நோக ஏதுவும் செய்துவிடக் கூடாது என்று தாயார் நினைக்கிறாளோ என்று யோசித்தபடி, ''இல்லை'' என்று தலையசைத்தாள் மீரா.

''அப்பாடி! நிமிடத்தில் எங்கள் தலையில் கல்லைப் போட்டு விட்டாய் என்றே நினைத்து விட்டேன். ஸ்:..ஸ்...'' என்று ஆசுவாசப்படுத்திக் கொண்டாள் அன்னை.

எங்கள்?!

திகைப்பும் வேதனையுமாக மகளின் விழி அகலவும் சற்றே முகம் கன்றினாள்: உடனே சமாளித்து பேசினாள். ''பார் கண்ணு, நீ அங்கே எவ்வளவோ சுகத்தில் இருக்கிறாய் ஏசி, கார், பங்களா, எடுபிடி என்று நன்றாக இருக்கிறாய்...''

சுகமாகவும் இல்லை; நன்றாகவும் இல்லை என்று உள்ளூரச் சொல்லிக் கொண்டாள் மகள். ஆனால், சேதுபதி கற்றுக் கொடுத்த பிசினஸ் பயிற்சியின்படி, வாய் திறவாமல் எதிராளியைப் பேசவிட்டாள். ஆனால், ஈன்று வளர்த்த தாய்கூட எதிராளி ஆகக் கூடுமா?'

முகத்தில் மிகுந்த வருத்தம் காட்டி, ''நீ ஏக புத்திசாலி என்று இவ்வளவு நாளாய் நினைத்துப் பெருமைப்பட்டுக் கொண்டு இருக்கிறேன். வினாடிக்குள் எல்லாம் தட்டிக் கவிழ்த்து விடப் பார்த்தாயே'' என்று உச்சுக் கொட்டினாள் மரகதம்.

''எனக்குப் புரியவில்லை, அம்மா'' என்றாள் மகள் ஒரு பிடிவாதத்துடன்.

அன்னை மனதில் என்ன இருந்தாலும் அது முழுக்க வெளிச்சத்திற்கு வந்துவிட வேண்டும் என்று நினைத்தாள் மீரா. ஆனால், தாயார் பதில் கூறுமுன் ஒரு பாட்டை முணுமுணுத்தபடி தந்தை வரவும் மனதில் வேறு பயம் பிறந்தது.

உள்ளே மகளைப் பார்த்ததும் ஆச்சரியத்துடன், ''வாசலில் உன் கான்டசாக் காரைக் காணவில்லையே செல்லக் கண்ணா, நீ எப்படியடா வந்தாய்?'' என்று

மனைவியிடம் கையிலிருந்த பையை நீட்டினார் நடேசன். ''டிஜன் அறுபதுக்கு குறையவே மாட்டேன் என்று விட்டான். உசத்தி ஆப்பிளாம். உன் மகளுக்கு ஒன்று வெட்டிக் கொண்டு வா. ம், நீ சொல்லும்மா எப்படி வந்தாய்?'' என்று மீண்டும் மகளிடம் திரும்பினார்.

தம்பி தங்கைகளைக் காரில் அனுப்பிய விஷயம் விளக்கிவிட்டு, ''உங்கள் உடம்புக்கு ஒன்றும் இல்லையேப்பா?'' என்று கவலையுடன் வினவினாள்.

''என் உடம்புக்கா? ஒன்றும் இல்லையே. நல்ல கல்லுக்குண்டாக இருக்கிறேனே. பல விருத்திக்கு பாதாம் பால், ஆயுசு விருத்திக்கு ஆப்பிள் என்று உன் அம்மா ஆர்டர்படி சாப்பிடுகிறேனே. ஏம்மா அப்படிக் கேட்கிறாய்?'' என்று கேட்டார் அவர்.

''இ...இல்லைப்பா. இந்த நேரத்தில்... ஆ...ஆபீஸ் போகாமல் இருக்கிறீர்களே... என்று...'' என்னவோ, தான் தான் தவறு செய்துவிட்டாற் போலத் தயக்கத்துடனும், அதை மீறிய உறுத்தலுடனும் கேட்டு விட்டாள் மீரா.

''ஆபீசா!?!'' வாய்விட்டு ஓஹோ என்று சிரித்தார் அவர். ''கேசவமூர்த்தி இன்டஸ்ட்ரீசின் எம்.டி... இருபது கோடி சொத்துக்கு அதிபதி மீரா தேவியின் தகப்பனார் அரைப் பைசா ஆபீசில் அற்ப ஆயிரம் ரூபாய்க்கு வேலை பார்ப்பதா? விட்டு விட்டேன்'' என்று பெருமையாக அறிவித்தார்.

பொங்கி எழுந்த கோபத்தில் ஏதாவது தப்பாகச் சொல்லிவிடக் கூடாதே என்று மனதுக்குள் ஒன்று இரண்டு எண்ணத் தொடங்கினாள் மீரா. சற்றே சமனப்பட்டதும், ''அந்த இருபது கோடிச் சொத்துக்கு அதிபதி நான் இல்லை அப்பா. மிஸ்டர் சேதுபதி'' என்று தெளிவாக உரைத்தாள்.

''சேச்சே. மாமனார் பெயரைச் சொல்லாதே, கண்ணா'' என்ற இடையீட்டை ஒதுக்கி, ''அத்தோடு என் எம்.டி. பதவி வெறும் அலங்காரப் பெயர்தான். மாமா எப்போதும் வேண்டுமானாலும் அந்தப் பதவியிலிருந்து என்னை அகற்றிவிடலாம்'' என்றாள் விளக்கமாக.

''மாட்டாரே'' என்றார் தந்தை எக்களிப்புடன் அவரே என்னிடம் சொன்னாரே. மீராவை எம்.டி. ஆக்கியதே அவளை என் வாரிசு என்று அறிவிப்பதற்காகத்தான். இனி நீங்கள் கூட அதற்கு ஏற்றாற்போல கவுரவமாக நடந்து கொள்ளுங்கள். கண்டவர்களிடம் கையேந்துவானேன் என்றாரே.''

''அவரிடம் மட்டும் கையேந்தினால் போதும் என்றாராக்கும்.''

சரக்கென்று திரும்பினார் நடேசன். ''என்ன, பேச்சு ராகம் மாறுகிறது? உன் சொத்து குறைந்து விடுமே என்றிருக்கிறதா?''

''என்னப்பா!'' என்றாள் மகள் அடிபட்டாற்போல.

''பின்னே என்ன?'' என்று அதட்டினார் அவர்.

''அங்கே எல்லாம் விட்டுவிட்டு இங்கே வருகிறேன் என்றாள்'' என்று சமயம் பார்த்துக் குறைப்பட்டாள் தாயார்.

''என்னது!'' என்று அதிர்ந்தார் நடேசன்! ''பைத்தியமா உனக்கு? எவ்வளவு சொத்து. லாட்டரி பிரைஸ் அடித்தால்கூட இவ்வளவு வருமா? விட்டுவிட்டு வருகிறாளாம் முட்டாள். வந்துவிட்டால் உன் தம்பி தங்கைக்கு காலேஜுக்கு எவன் ஃபீஸ் கட்டுவான்! இங்கே இன்னும் இரண்டு பெண்கள் கல்யாணத்துக்கு

இருக்கிறார்கள் என்பதை மறந்து உளறாதே'' என்று அதட்டினார்.

''உங்கள் மூத்த மகளுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை என்பதை நீங்கள் அல்லவோ மறந்து விட்டீர்கள்'' என்பது அவள் தொண்டையுள் விக்கித்து நின்றது.

அவளுக்குப் பதில் சொல்லும் வாய்ப்பே தராமல் தாயார் தொடர்ந்தாள். ''நன்றாகச் சொல்லுங்கள். அங்கே ராணி மாதிரி வாழ்வதை விட்டு இங்கே ஓடி வருகிறாளாம். எல்லாவற்றையும் நாசம் பண்ணவா? அங்கே இல்லாத தேன் இங்கே எங்கே ஒடுகிறதாம்? அப்படி ஓடிவர என்ன அவசியம்?''

தாய் தந்தையிடம் இந்தப் போக்கை எதிர்பார்த்திராத மீரா திகைத்தாள். 'இவர்களிடம் என்ன சொல்வது? என் மனதில் காதல் பூத்திருக்கிறது. அதனால், அந்த வீட்டுச் சோறு தொண்டையில் சிக்குகிறது என்று பெற்ற பெண்ணின் வாழ்வைப் பற்றிய நினைவே இல்லாமல் வரவு செலவுக் கணக்குப் போடும் இவர்களிடம் எப்படிச் சொல்வது? உடம்புத் திமிர், காமம் அது இது என்று எல்லாவற்றையும் கொச்சைப்படுத்தி விடமாட்டார்களா? அப்படி ஏதாவது பேசிவிட்டால் அப்புறம் சசிகாந்தனை நிமிர்ந்து பார்க்கக் கூட மனம் கூசிப்போகாதா?''

சசிகாந்தன் நினைவு வந்ததும் ஒன்று தோன்ற, ''மாமா எப்போது அப்படிச் சொன்னார்?'' என்று தந்தையைக் கேட்டாள்.

''எப்படி?''

''வேலையை விடுவது பற்றி.''

''நேற்றுக் காலையில் மெனக்கெட்டு வந்து சொல்லிவிட்டு, ராஜினாமாக் கடிதம்கூட ஏற்பாடு செய்துவிட்டு, சொத்தையெல்லாம் உன் பெயருக்கு மாற்றுவது பற்றிப் பேச வக்கீலிடம் போனார். விஷயம் புரியாமல் நீயானால் உளறிக் கொண்டு இருக்கிறாய்'' என்றார் அவர் எரிச்சலோடு.

'பிரஷர்' சோர்வு என்று தன்னை விழுப்புரம் அனுப்பிவிட்டு இங்கே வந்து வேலையை விட வைப்பானேன்? சொத்தை அவள் பெயருக்கு மாற்ற ஏற்பாடு செய்வானேன்? காலையில்கூட அதுபற்றி அவளிடம் ஏதோ சொன்னாரே... அத்தோடு அந்த நாகேந்திரன் டிஸ்மிஸ் வேறு... காரணம் புரியாமல் மீரா குழம்பிப் போனாள்.

ஆனால், அவள் பேசாமல் நிற்கவும் நடேசனுக்குக் கோபம் வந்தது. ''நான் இவ்வளவு சொல்கிறேன், ஊமைக் கோட்டான் போலச் சும்மா நிற்கிறாயே. தெரு நாய்க்குத் தெங்கம் பழம் ஒட்டுமா என்பது போல எல்லாவற்றையும் தட்டிக் கவிழ்த்து விட்டு வந்து நின்றாயென்றால் எனக்குப் பொல்லாத கோபம் வரும் ஜாக்கிரதை. இங்கே வருகிற நினைப்பை அடியோடு மறந்துவிட்டு மரியாதையாக அங்கே போய்ச் சேர். இந்தாடி, அப்படி மூளை கெட்டு இவள் வந்து நின்றாள் மாலை போட்டு வரவேற்க இங்கே யாரும் இல்லை என்று உன் முட்டாள் மகளுக்கு எடுத்துச் சொல்லு'' என்று உறுமிவிட்டு உள்ளே சென்று விட்டார் நடேசன்.

'செல்லக் கண்ணா'க இருந்தவள் ஊமைக் கோட்டானாகவும் தெரு நாயாகவும் மாறிய விந்தையும், தந்தையின் கோபமும் மனதை வாட்ட, ''என்னை

நினைக்கவே இல்லையேம்மா?'' என்று மெல்லிய குரலில் ஏக்கத்துடன் தாயிடம் கேட்டாள்.

பெற்றவள் ஆயிற்றே. சற்றேனும் புரியாமல் போகுமா? ''நினைக்காமலா மீரா? முதலில் உன்னை இந்தக் கோலத்தில் பார்த்தபோது எனக்கு நெஞ்சே வெடித்துப் போயிற்று. வேண்டாம் என்றால் நீயும் பெரிதாக வேதாந்தம் பேசினாய். இன்றைக்குப் பார், செலவை வெகுவாகப் பெருக்கிப் பழகிவிட்டோம். நேற்று உன் மாமா ஏதோ சொன்னதும் ஓடிப் போய் இந்த 'வீசிஆரை' வாங்கி வந்து விட்டார் உன் அப்பா. இருந்த வேலையையும் விட்டாயிற்று. உன் அண்ணன் அதற்கும் மேலே. பெண்டாட்டிக்குப் பாத பூஜை செய்ய அவ்வப்போது இங்கே பீராய வருகிறான். அப்பா சொன்ன மாதிரிஇன்னும் இரண்டு பெண்கள் கல்யாணம், தம்பி படிப்பு, எங்கள் எதிர்காலம் எல்லாம் பார்க்க வேண்டும் இல்லையா? உன் ஒருத்திக்காகப் பார்த்தால், இத்தனை பேர் வாழ்வு பாழாகிவிடுமே. மற்றதெல்லாம் விட்டுவிட்டாலும் உனக்கு அங்கே என்ன குறை, சொல்லு.''

தாயை வெறித்துப் பார்த்தாள் மீரா.

தலை நிறையப் பூவும் நெற்றி நிறையக் குங்குமமும். அன்று ஒரு சிறு பொட்டு குங்குமத்துக்குத் தேடி தவித்தது நினைவு வந்தது. நடு வயது தாண்டிய பிறகும் பல விருத்திக்குப் பாதாம்பாலும் ஆயுசு விருத்திக்கு ஆப்பிளும் என்று கணவனுக்குத் தரும் தாயார், இந்த சின்ன வயதில் மகள் மணிமேகலையாக வேண்டுமா என்று ஏன் போராடவில்லை?

சுற்று முற்றும் பார்த்துவிட்டு மகள் அருகில் வந்தாள் மரகதம். மிகவும் தணிந்த குரலில், யோசி கண்ணு. உன் மாமா வயசாளி. மிஞ்சி மிஞ்சி இன்னும் எத்தனை வருஷம் இருப்பார்? ஓர் ஐந்து, ஆறு ஆண்டு வாழுவாரா? அதுவரை பொறுத்திருந்தால் சொத்துக்குச் சொத்து, சுகத்துக்கு சுகம்'' என்றாள்.

பெற்றவளின் இந்தக் கணக்கில் மீராவின் மனம் கைத்துப் போயிற்று.

தன் சுகத்துக்காக ஒருவர் எப்பேது சாவார் என்று காத்திருப்பதாமா? அதுவும் எந்தவித உரிமையும் இல்லாத ஒரு சொத்தை விட மனம் இல்லாமல்!

வெறுப்புடன் திரும்பினால், வாயிலில் கார் வந்து நின்றிருந்தது. மீரா பார்த்ததும் டிரைவர் இறங்கி வந்தான்.

''படம் முடியுமுன் ஏன் வந்தாய்?'' என்றாள் அவள் புருவச் சுளிப்புடன்.

''அவங்களுக்கு வேறே கார் அனுப்ப ஏற்பாடு செய்து விட்டேனுங்கம்மா. இங்கே நீங்க திடீர்னு கடைகிடை போகணுமின்னா வசதியாய் இருக்குமேன்னு நான் வந்து விட்டேனுங்க.'' என்று பவ்யமாகப் பதில் கூறினான் சூசை.

''பார் பார்'' என்ற தாயின் முகம் புரிந்து கையைப் பற்றி அழுத்தினாள் மீரா.

டிரைவர் முன்னிலையில் காட்டாவிட்டாலும் உள்ளே அழைத்துப் போய், ''பார், இந்தப் பரிவையும் போற்றுதலையும் விடுகிறேன் என்றால், மடத்தனம் இல்லையா?'' என்று கேட்ட பிறகு தான் மகளை அனுப்பினாள் மரகதம்.

இது பரிவும் இல்லை, போற்றுதலும் இல்லை. இவன் உளவு பார்க்க வந்தவன் என்பதைச் சொன்னாலும் இவர்கள் ஒத்துக் கொள்ளப் போவது இல்லை என்று வெறுப்புடன் எண்ணமிட்டவளுக்குச் சுரீல் என்றது.

அன்று ராதா வீட்டில்... அங்கே என்னென்ன ஒட்டுக் கேட்டிருப்பான்? அங்கே என்ன பேசினோம் என்று யோசித்தாள். ஆனால், என்ன பேசியிருந்தாலும் உரக்க ஒன்றும் பேசவில்லையே. இவனுக்கு ஒன்றும் கேட்டிருக்காது.

கேட்டிருந்தது என்பது தவிப்பை அடக்க மாட்டாமல் தங்கை வீடு சென்றதும் தெரிந்தது.

ராதாவின் முகமும் கண்ணும் கண்ணீரில் சிவந்து வீங்கியிருந்தது. மீரா பதறிப் போனாள்.

''ஒரு பெண்ணின் உடலை விற்றால்தான் விபசாரமா, அக்கா? உன் வாழ்வை அங்கே அணுஅணுவாகப் பலியிட்டு இங்கே சுக வாழ்வு வாழ்வது எங்கள் இருவருக்கும் பிடிக்கவில்லை. முதலில் இந்த வலையிலிருந்து நாங்கள் வெளியேறிப் பிறகு உன்னையும் வெளிவரச் செய்ய வேண்டும் என்று வேறு வேலைக்கு முயற்சி செய்திருந்தார். இன்று வேலைக்கு ஆர்டர் வந்துவிடும் என்கிற நிலையில் நேற்று வருந்துகிறோம் என்று கடிதம் வந்தது. போய்க் கேட்டால் மிஸ்டர் சேதுபதி தலையீடாம்...''

சூசை நினைவு வர ''மெள்ள'' என்று மீரா எச்சரித்தாள்.

குரலை வெகுவாகத் தணித்த போதும், ''உன் உளவுக்கார டிரைவர் இன்றும் வத்தி வைத்து விடுவான் என்று பயப்படுகிறாயா, அக்கா? செய்யட்டும். இந்த ஈனச் சாப்பாடு வேண்டாம் என்று பழைய வேலையை அவர் விட்டு விட்டார். ஆனால், இனி எப்படி... நாங்கள் இரண்டு பேரும் பட்டினிக்குப் பயப்படவில்லை அக்கா. ஆனால், இந்தக் குழந்தை... அத்தை...'' என்றவளின் கண்களில் மீண்டும் முத்துச்சரம் இறங்கலாயிற்று.

மீராவின் விழிகளிலும் கண்ணீர் ததும்பி வழியவும், ஓர் ஆத்திரத்துடன் தன் விழிநீரைச் சுண்டிவிட்டு, ''வெறும் உடல் உறவுக்காகச் சொல்லவில்லை அக்கா. ஆனால், அங்கே உனக்கு எவ்வளவு பெரிய அநியாயம் நடக்கிறது தெரியுமா? திருமணம் என்கிற உறவு இரண்டு பேருக்கு இடையில் உண்டாகிற அன்பு, நேசம், பாசம், நட்பு, கேலி, கிண்டல், சிரிப்பு என்று ஒன்றையுமே உணரவிடாமல் உன்னை சன்னியாசினி ஆக்குகிறார்களே. உன் மாமாவைகூட மன்னித்து விடலாம். ஏதோ தன் மகன் ஆசைப்பட்ட பெண், கடைசி நாள் வரை ஓர் ஊன்று கோலாக நம்முடனே இருக்கட்டும் என்று நினைத்திருக்கலாம். ஆனால், அப்பாவும் அம்மாவுமே இதற்கு உடந்தை என்றால் தாங்க முடியவில்லை. அக்கா, உன்னுடைய இந்த நிலைமைக்கு, இந்தப் பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் சுயநலக்காரப் பெற்றோருக்குப் பிறந்த நானும் ஒரு காரணம்தானே. அதனால்தான் இந்த இழிசோறு இனிமேல் உண்ணக் கூடாது என்று...'' என்றவள் மேலே பேச முடியாமல் திணறிவிட்டு சட்டெனத் திரும்பி உள்ளே சென்றாள்.

முகத்தில் நீர் அடித்துக் கழுவிவிட்டு மீண்டும் வெளியே வந்தபோது அவள் முகத்தில் சற்று அமைதி இருந்தது.

தொட்டிலில் கிடந்த குழந்தையின் தலையை மெல்ல வருடிக் கொண்டிருந்த தமக்கையிடம், ''ஒன்று சொல்கிறேன், செய்கிறாயா, அக்கா. சும்மா சேதுபதி வீட்டிலிருந்து வெளியேறிவிடு. இனி இங்கேதான் இருப்பேன் என்று விட்டால் அம்மாவும் அப்பாவும் உன்னைக் கழுத்தைப் பிடித்தா வெளியே

தள்ளிவிடுவார்கள்'' என்று யோசனை சொன்னாள்.

லேசாக முறுவலித்தாள் மீரா. கழுத்தைப் பிடித்துத் தள்ளாதது ஒன்றுதான் குறை என்று இந்த அன்பான தங்கையிடம் சொல்லுவானேன்? இவள் வேதனையை இரட்டிப்பாக்குவானேன்?

தலையசைத்து விட்டு மெல்லத் திரும்பிச் சென்று காரில் அமர்ந்தாள் மீரா.

ராவணன் ஜடாயுவின் இரு சிறகுகளையும் வெட்டியதும் அதற்குமேல் போராட முடியாமல் ஜடாயு கீழே விழுந்து விட்டதாக ராமாயணத்தில் படித்தது மீராவுக்கு நினைவு வந்தது.

அடிபட்ட பறவையாக விழுவது என்றால், என்ன என்பதும் மீராவுக்கு அப்போது புரிந்தது.

ஓர் ஆறு நாட்களாகப் பயந்து பயந்து முயன்று, இரண்டு நாட்களாகச் சிறகடித்த மீராவின் மனம் இப்போது சிறகு ஒடிந்த பறவையாய் விழுந்து விட்டது.

கிளியின் சிறகை வெட்டிக் கூண்டில் அடைத்து வைத்துப் பாலும் பழமும் கொடுப்பார்களாமே. அதுபோலத்தான் அவளும் வீட்டுப் பொற்கூண்டில் அடைபட்டுக் கிடக்க வேண்டிய வெள்ளைக்கிளி. அந்தக் கூண்டில் இருந்து அவள் வி டுபட முயன்றால் இங்கேயும் அங்கேயுமாக இரண்டு குடும்பங்கள் அழிந்து போய்விடும்.

அம்மா சொன்னது போல அவள் ஒருத்திக்காக ஒன்பது பேர் வாழ்வு வீணாவது நியாயம் இல்லைதான். அதைவிட அவள் ஒருத்தியின் வாழ்வு அழிவது பரவாயில்லைதான்.

'கண்ணிழந்தான் பெற்றிழந்தான் போல' என்று கம்ப ராமாயணத்தில் ஓர் இடம் வரும். எப்போதும் இல்லாத ஒரு குறை பெரும் இழப்பாகத் தோன்றுவது இல்லை. ஆனால், அதை அடைந்து அந்த சுகத்தை அனுபவித்துத் தெரிந்த பிறகு இழக்க நேர்ந்தால் வேதனை தாங்க முடியாது. மீரா அப்போது அந்த வேதனையில்தான் துடித்துக் கொண்டு இருந்தாள். வீட்டில் பத்திரப்படுத்தியிருந்த ரோஜா வண்ணச் சேலையும் சிமிழும் மேலும் துடிக்க வைத்தன.

ஆனால், சேதுபதியை எதிர்த்து நின்று போராடும் தைரியம் அடியோடு போய்விட்டது. அவர் இந்த அளவு எதிர்க்கக் கூடும் என்றும் அவள் நினைக்கவே இல்லை. காரின் பின் சீட்டில் ஒய்ந்து கிடந்தவளுக்கு சட்டென ஒன்று உறைத்தது.

அவள் நினைத்ததுபோல ஒன்பது பேர் நன்றாயிருக்கப் போவது இல்லையே.

அவளுக்கு உதவ நினைத்த பாவத்துக்காக அவளுடைய அன்புத் தங்கையின் குடும்பம் பட்டினி கிடக்குமே.

நாகேந்திரனை டிஸ்மிஸ் செய்தது. அவளை விழுப்புரத்துக்கு அனுப்பிவிட்டு அப்பாவின் வேலையை விட வைத்தது, கிருஷ்ணனுக்குக் கிடைக்கவிருந்த வேலையைக் கெடுத்தது என்று எல்லாவற்றையும் எண்ணிப் பார்த்தால் இனி மீராவுக்கு உரிய மரியாதையே அந்த வீட்டில் எப்படி இருக்கும் என்று சொல்வதற்கு இல்லை. இந்நிலையில் அவளது கோரிக்கைக்காக, சேதுபதி கிருஷ்ணனுக்கு மீண்டும் வேலை கொடுப்பது நடக்கக் கூடிய காரியம் இல்லை. அப்படியே அவர் கொடுத்தாலும் கிருஷ்ணன் அதை ஏற்பார் என்று சொல்வதற்கும் இல்லை.

வேறு விதமாய் - பணமாய் உதவி செய்யலாம் என்றால் மீராவின் கையில் என்றுமே பணம் நிற்க சேதுபதி அனுமதித்தது இல்லை. ஏதோ ஐநூறு, ஆயிரம் என்றால் கணக்காளரிடம் சொல்லி வாங்கிக் கொண்டு போகலாமே தவிர, எம்.டி. என்று பெத்த பேர் இருந்தபோதும், 'பாங்க்' கணக்கு, பாஸ்புக் எல்லாம் சேதுபதியிடமே இருந்தது. வரிக்கணக்குக்காக என்ற காரணத்துடன்.

ஆனால் இந்த நல்ல சகோதரி துன்பப்படுமாறு எப்படி விடுவது?

ஒரே ஒரு வழி மனதில் பட்டது.

கூடவே அவனிடம் நேரிடையாகச் சொல்லும் கடமையும் அவளுக்கு இருக்கிறதல்லவா? அந்தச் சேலையையும் சிமிழையும் தயங்காமல் வாங்கிக் கொண்டாளே!

'ஓ' என்று அழத்துடித்த மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு யோசித்தாள்.

இப்போது சசிகாந்தன் எங்கே இருக்கக் கூடும்!

இன்று அவனுக்கு அவனுடைய பெரியன்னை வீட்டில் சாப்பாடு. இரண்டு பிசினஸ் கால் பேசி விட்டு ஒரு மணிக்கு அங்கே செல்வதாகக் கூறியிருந்தான்.

மணிக்கட்டைத் திருப்பிப் பார்த்தாள். பன்னிரண்டு.

அவ்வளவு தானா? அவ்வளவே தானா? அவளது உலகம் ஓர் இரண்டு மணி நேரத்திற்குள்ளாகத்தான் அழிந்து போயிற்றா?

நடுங்கிய உதட்டைப் பற்களால் அழுத்திக் கொண்டாள் மீரா. பிறகு, பிறகுதான் இந்த அழுகைக்கு வாழ்நாள் முழுவதுமான அவகாசம் இருக்கிறதே இப்போது ஏன்?

பிரயாசைப் பட்டுக் கண்ணீரை அடக்கி மீண்டும் யோசித்தாள்.

சூசையைத் திருப்பி அனுப்பிவிட்டு, ஒரு டாக்சியில் சசிகாந்தன் தங்கியிருந்த ஓட்டலுக்குச் செல்லலாம் என்று தோன்றிய எண்ணத்தை உடனே மாற்றிக் கொண்டாள்.

டாக்சியில் சென்றாலும் அவன் பின் தொடர்ந்து வரத்தான் போகிறான். ஏனென்று கேட்டால் உங்கள் பாதுகாப்புக்காக அம்மா என்று வெகு

பவ்வியமாகப் பதிலும் கூறுவான்.

ஏற்கனவே மாமாவுக்கு எல்லாம் தெரிந்திருக்கையில் இன்னும் ஒன்றும் தெரிவதில் என்ன பிரமாத நஷ்டம் வந்துவிடப் போகிறது? தலைக்கு மேல் போய்விட்ட வெள்ளம், இதில் சாண் என்ன? முழம் என்ன?

சூசையை அழைத்து 'கன்னிமரா'வுக்கு ஓட்டச் சொன்னாள்.

அதிர்ச்சியில் அவன் உடம்பு விறைப்பதைப் பின்னிருந்து பார்க்கும்போது ஒரு குரூரமான திருப்திகூட அவளுக்கு உண்டாயிற்று.

இவளுக்கு இவ்வளவு துணிச்சலா என்று இருக்கிறதாக்கும். இங்கே சூசையின் சிக்கலும் அவளுக்குப் புரிந்தது. சூசையால் மீராவின் கட்டளையை மீறவும் முடியாது; அதே சமயம் 'கன்னிமரா'வில் அவளைப் பின் தொடர்ந்து சென்று ஒட்டுக் கேட்பதும் அதை சேதுபதியிடம் ஒப்பிப்பதும் கூட முடியாது.

ஓட்டலை அடைந்ததும், ''காரிலேயே இரு.'' என்று அதிகாரக் குரலில் பணித்துவிட்டு, உள்ளே சென்றாள்.

சசிகாந்தன் அறையில் தான் இருந்தான்.

எதிர் பாராமல் அவளைக் கண்டதும் அவனிடம் உண்டான குதூகலம் அவள் முகத்தைப் பார்த்ததும் மறைந்தது.

சோபாவைக் காட்டி அமருமாறு சைகை செய்தவன், ''இப்போது என்ன புதுப்படலம்?'' என்று வினவினான்.

இவனிடம் சொல்வது கடினம்தான். ரொம்பவும் கஷ்டம்தான். ஆனால், வேறு வழி? அத்தோடு என்னவென்று சொல்வது?

உதட்டைப் பற்களால் அழுத்திச் சில கணங்கள் பேசாமல் இருந்துவிட்டு, ''இதோ பாருங்கள், மிஸ்டர் சசிகாந்தன், நான்... நான்...'' என்று தடுமாறினாள். ஒரு பெரிய மூச்செடுத்துவிட்டு, ''நான் இனி என் வாழ்வை எந்த விதத்திலும் மாற்றிக் கொள்வதாக இல்லை... நான் ... நான் வேறு விதமாய் உங்களை ஊக்குவித்திருந்தால் என்னை மன்னியுங்கள்...'' என்று தரையைப் பார்த்தபடியே சொல்லி முடித்தாள்.

அவள் 'மிஸ்டர் சசிகாந்தன்' என்று தொடங்கியதில் இருந்து மார்பின் குறுக்கே கைகளைக் கட்டிய வண்ணம் குறுக்கிடாமல் கேட்டிருந்த அவன், ''அந்த வேலை நீ செய்ததே இல்லையே'' என்று கூறி அவளைத் திகைக்க வைத்தான்.

திகைத்து நிமிர்ந்தவளிடம். ''இப்போது போஸ் சரி, கார்ப்பெட் என்னதான் அழகாக இருந்தாலும் ஒருவர் முகத்தைப் பார்த்துப் பேசுவதுதான் மரியாதை... எந்த வேலை என்று யோசனையா? ஊக்குவித்ததாகச் சொன்னாயே, நீ ஒரு நாளும் என்னிடம் ஊக்கு விற்றதே இல்லையே'' என்று வெண்ணிறப் பற்கள் தெரிய முறுவலித்தான் சசிகாந்தன்.

மீராவுக்கு ரசிக்கவில்லை. இந்தக் கேலியும் சிரிப்பும் எவ்வளவு நேரம் நிலைக்கும்?

''ப்ளீஸ், சசி'' என்றாள் சிறு வேதனையுடன்.

திருப்தியுடன், ''ம்... இப்போது பேசும் சசி. இதை விட்டு மிஸ்டர் சசிகாந்தனாம். இப்போது சொல் என்ன விஷயம்?'' என்று இலகுவாகவே கேட்டான் சசிகாந்தன்.

தங்கள் இருவரின் இணைப்பு நடக்கக் கூடியது அல்ல என்பதை எந்தவித 'மெலோடிராமா'வும் இல்லாமல் கூறிவிட்டு, ராதையின் கணவனுக்கு ஏதாவது ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்யும்படி கேட்க வேண்டும் என்று எண்ணித்தான் மீரா சசிகாந்தனிடம் வந்தது. ஆனால், விஷயத்தைச் சொல்லுவதே இயலாததாய்த் தோன்றுகையில் அதற்குமேல் கிருஷ்ணனுக்கும் உதவியை எப்படிக் கேட்பது? அவருக்கு எப்படியாவது கஷ்டப்பட்டு வேறு எந்த வழியிலாவது வேலை தேட வேண்டியதுதான்.

அவனையும் அவனது இலகுவான கேலிச் சிரிப்பையும் காண்கையில் நெஞ்சை அடைத்தது. கண்ணோரம் கரித்துக் கொண்டு வந்தது.

இவனிடம் எல்லா விஷயங்களையும் எடுத்துச் சொல்லி, அவன் மறுத்துப் பேசி, இவள் வாதம் புரிந்து இவளது முடிவை அவன் ஏற்க வைத்து... அதெல்லாம் செய்து முடிக்க அவளுக்குச் சக்தியும் இல்லை. இதோ இதோ என்று ரெடியாகிக் கொண்டிருந்த கண்ணீர் அதற்கு அவகாசம் அளிப்பதாகவும் இல்லை. அந்தக் கண்ணீர் வெள்ளம் உடைப்பெடுக்குமுன் இங்கிருந்து ஓடிவிட வேண்டும்.

பிரயாசையுடன், உடல் குரல் இரண்டையும் கட்டுப்படுத்தி மெல்ல எழுந்து, ''மரியாதை இல்லாமல் நடந்து கொள்வதாக எண்ணாதீர்கள் எனக்கு... வேலை இருக்கிறது. நான் போக வேண்டும்'' என்று கூறிக் கதவை நாடி நடந்தாள்.

இரண்டு எட்டில் எதிரே வந்து நின்று, ''மரியாதை இல்லாமல் நடப்பதாக எண்ணவில்லை. ஆனால், உண்மை இல்லாமல் பேசுவதாக மட்டும்தான் நினைக்கிறேன்'' என்றான் சசிகாந்தன்.

தன் பொய்யைப் புரிந்து கொண்டாலும்கூடக் குறிப்புணர்ந்து அவன் நாசூக்காக ஒதுங்கிக் கொள்ளக்கூடும் என்று வேதனையோடு எதிர்பார்த்த மீரா மீண்டும் திணறினாள்.

யோசனையோடு அவள் முகத்தைப் பார்த்த வண்ணம் நின்ற அவன் பேசலானான். ''பார் மீரா, உன்னுடைய இந்த மேம்போக்கான வார்த்தைகளை ஒத்துக் கொண்டு நாகரீகமாக நானும் விலகிப் போய் விடலாம்தான். நீயும் ஒதுங்கிக் கொள்ளலாம். ஆனால், அந்த நாகரீகம் பார்த்தால் வாழ்க்கை முழுவதும் ஒரு வேதனையை அனுபவித்துக் கொண்டே இருக்க நேருமே. அதைவிடச் சற்று அநாகரீகமாக நடந்து கொண்டால்தான் என்ன? ம்? அத்தாடு நாம் இருவருமே 'டீன் ஏஜ்' சிறுவர்கள் அல்ல. நிதானமாய் பேசி முடிவு செய்யலாம்...'' என்று கூறி விஷயத்துக்கு வந்தான். ''என்ன விஷயம்?''

அவனது குரலில் அவளது படபடப்பும் கண்ணீரும் அடங்கியது. ''மாமாவுக்குப் பிடிக்காது. வருத்தப்படுவார்'' என்றாள் கருக்கமாக.

''ஏன்? நான் வருத்தப்பட மாட்டேனா?'' என்றான் சசிகாந்தன் சற்றுக் கோபமாக.

''சசி, ப்ளீஸ்...'' என்றாள் மீரா கெஞ்சுதலாக.

''வாழ்நாள் முழுவதும் நாம் ஒருவரை ஒருவர் 'ப்ளீஸ்' பண்ண வேண்டும் என்பது தான் என் ஆசை. இதில் மிஸ்டர் சேதுபதி கொஞ்சம் வருத்தப்படக் கூடும் என்பதற்காக அதை இழந்துவிட நான் தயாரில்லை'' என்றான் அவன் அழுத்தத்துடன்.

''அவர் எனக்கு எவ்வளவோ செய்திருக்கிறார் சசி'' என்றாள் அவள் மெல்லிய குரலில்.

''என்னது? இந்தக் காண்டசா. ஏசி, சொத்து பத்து இதெல்லாம்?'' என்றான் அவன் ஏளனமும் கோபமுமாக.

வருத்தமாகத் தலையசைத்தான் மீரா. இதெல்லாம் எனக்கு உன்னைவிடப் பெரிதென்றா நினைத்தாய் என்பதுபோல அவள் முகம் வாடியது. ''அதில்லை சசி. அண்ணன் படிப்பு, வேலை, தங்கை திருமணம், தம்பி தங்கை படிப்பு இன்னும் எத்தனையோ செய்திருக்கிறார். இந்த நன்றியை எப்படி அடியோடு மறப்பது?''

''ஓ! எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை. செய்ந்நன்றி கொன்றமகற்கு மாடலா? குறள் சரிதானா?'' என்று ஏளனம் செய்தான் அவன்.

அவளது கோபம் வேதனையாக இருந்த போதும் ஒரு விசித்திரமான வகையில் சுகமாகவும் இருந்தது. அவளை இழக்க விரும்பாமையால் வரும் சினம் அல்லவா? இந்த சுகம் அவளுக்கு மறுக்கப்பட்ட விதம் மேலும் வேதனையைக் கூட்டிற்று. உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமல் நின்றாள்.

குனிந்து அவள் முகத்தைப் பார்த்த அவன் குரல் உடனே இளகிற்று. ''ஓகே மீரா. நான் ஒன்று கேட்கிறேன். பதில் சொல். நாளைக்கு நமக்குத் திருமணமாகிக் குழந்தை பிறந்தால்... அப்படி விழிக்காதே. தேன் என்று சொன்னால் வாய் இனித்து விடுமா, அல்லது நெருப்பு என்று சொன்னால் வாய் சுட்டு விடுமா? சும்மா ஒரு பேச்சுக்குச் சொல்கிறேன். கவனமாய்க் கேட்டு பதில் சொல். நமக்குக் குழந்தை பிறந்தால் அதை வளர்ப்பதும் படிக்க வைப்பதும் திருமணம் செய்வதும் யார் பொறுப்பு?'' என்று கேட்டான் அவன்.

அவனது பேச்சினால் மனக் கண்முன் விரிந்த இனிய காட்சியை ஒதுக்கித் தள்ள முயன்றபடி, ''நீங்... நீங்கள்தான்.'' என்று பதிலிறுத்தாள் மீரா.

''ஓகோ! அப்படியானால், உன் அண்ணன் தம்பிகளைப் படிக்க வைப்பதும் சகோதரிக்குத் திருமணம் செய்வதும் யாருடைய பொறுப்பாயிருக்க வேண்டும்?''

''.....''

''கேட்கிறேன் இல்லையா?''

''அ... அப்பா...''

''ஆமாம். உன் அப்பாவின் பொறுப்புதான். அவரது கடமைகளை இன்னொருவர் நிறைவேற்றினால் நன்றிக் கடன்பட வேண்டியதும் அவர் தான். அவர் மட்டுமேதானே தவிர நீ அல்ல. அப்படி அவர் பட்ட கடனைத் தீர்க்க உன் வாழ்வைப் பலியிடுவது எப்படி நியாயம் ஆகும்?'' ஆணித்தரமாகக் கேட்டான் அவன்.

ராதையும் இதைத்தானே சொன்னாள்? ஆனால், அப்படி உதறிவிட முடியுமா?

''ஆனால் இந்த உதவியை எல்லாம் மாமா எனக்காகத்தானே செய்தார். அதை நான் எப்படி அலட்சியம் செய்ய முடியும்?'' மீராவின் குரல் கலங்கியது.

''உனக்காக என்றால் உன்மேல் கொண்ட பாசத்தால் என்று எண்ணுகிறாயா என்ன?''

''பின்னே?''

''சேதுபதியின் சைகாலஜி உனக்கு இன்னமும் புரியவில்லையா, மீரா. அவருடைய மகன் விரும்பிய பெண் நீ. அவன் உன்னோடு சேர்ந்து அடைய ஆசைப்பட்ட சுகங்கள் எதையும் நீ இன்னொருவரோடு அனுபவித்துப் பாராமலேபட்டுப் போய்விட வேண்டும் என்கிற வெறி அவருக்கு'' என்றான் சசிகாந்தன்.

''ச்சி!'' என்று அதிர்ந்தாள் மீரா.

சசிகாந்தனின் பேச்சை மீராவால் நம்ப முடியவில்லை.

சேதுபதியிடம் பிடிவாதம் உண்டு. விரும்பியது விரும்பிய வண்ணம் நடவாவிட்டால் எரிச்சல் படுவார். உண்மை. ஆனால், யாருக்குத்தான் நினைத்தது நடக்க வேண்டும் என்ற ஆசை இராது?

அவர் சொன்னது நடக்காவிட்டால் கோபப்படுவாராக இருக்கலாம். ஆனால், அவரைச் சுற்றியுள்ளவர்கள் அவரது விருப்பத்தை அனுசரித்தே நடந்து பழகியிருந்ததால் அவரது கோபத்தை இதுவரை மீரா கண்டதே இல்லை.

அத்தோடு இன்னொருவர் என்றால் மகன் இறந்ததற்கே இவளது துரதிர்ஷ்டம் தான் காரணம் என்று வெறுத்து ஒதுக்கியிருப்பார். ஆனால், சேதுபதியின் பெருந்தன்மை அவளை மருமகளாகவே ஏற்றதோடு அவளுடைய குடும்பத்துக்கும் எண்ணற்ற நன்மைகளைச் செய்தது.

இப்போதும் கூடத் தன் மருமகள் என்றே எண்ணிப் பழகிவிட்ட ஒரு பெண் வேறு ஒருவரோடு நெருங்கிப் பழகுவதை அந்தப் பழங்கால மனிதரால் ஏற்க

முடியாமல் போனதாலேயே இந்தச் சில செயல்களைச் செய்திருக்கலாம்.

நாகேந்திரனை நீக்கியது... அவனது உளவு வேலையை அறிந்து கொண்டதால்கூட இருக்கலாம்.

அப்பா... பெரும் சொத்தைப் பெறப்போகும் மருமகளுடைய தந்தை மற்றவரிடம் குற்றேவல் புரிவது சரியில்லை என்ற எண்ணத்தினாலேயே இருக்கலாம்.

ஆனால், கிருஷ்ணன்... கிருஷ்ணன் விஷயத்தில் கூட அவர் தன் நிறுவனத்திலிருந்து வேறிடம் செல்வது பிடிக்காத காரணத்தினாலேயே அவன் பெறவிருந்த வேலை வாய்ப்பை அவர் கெடுத்திருக்கலாம்.

இவளது பலவீனப்பட்ட மனதுதான் என்னென்னமோ எண்ணிப் பயந்து விட்டதோ என்னமோ?

ஆறு ஆண்டுகளாக அவரது அன்பையும், உதவிகளையும் பெற்று நன்றியில் திளைத்திருந்த மீராவின் மனம் இப்போது அவர் மேல் குற்றம் சாட்ட விரும்பாமல் அவருக்குச் சாதகமான பல காரணங்களைத் தேடி கண்டுபிடித்தது.

அவனிடமும் அதையே சொன்னாள். ''என்னை அவர் தன் மருமகளாகவே மகனுடைய மனைவியாகவே கருதி வந்திருக்கிறார். இப்போது நான் வேறு ஒருவரைக் காதலிப்பது என்றால், அவருக்கு அது பிடிக்கும் என்று நாம் எதிர் பார்க்க முடியாது, சசி. அது விஷயம் அவ்வளவேதான். இப்போது என்னை மறந்து விடும்படி உங்களிடம் நான் வேண்டுகிறேன் என்றால் அது எங்கள் குடும்பமும் என் தங்கையின் குடும்பமும் நாசமாகிவிடக் கூடாது என்பதற்காகத்தான். மற்றபடி மாமாவுக்கும் அதற்கும் ஒரு சம்பந்தமும் இல்லை'' குரலில் வருத்தம் இருந்தபோதும் அவளுக்கு நியாயம் என்று பட்டதைச் சொல்ல அவள் தயங்கவில்லை.

''சம்பந்தம் இல்லையா? இருக்கட்டும். அதைப் பிறகு பேசலாம். முதலில் அது என்ன, இரண்டு குடும்பம் நாசமாகிற கதை? எனக்குப் புரியவில்லை. அதைப்பற்றி சொல்லு.''

அவனது அருகாமையினாலோ என்னவோ, இங்கே வருமுன் இருந்த வேதனையும் தவிப்பும் அவளுக்குச் சற்று அடங்கியிருந்தன. இப்போது மீண்டும் இந்தக் கதையைத் தொடங்கினால் பழைய வேதனை திரும்பி விடுமோ என்றிருந்தது மீராவுக்கு.

கூடவே பெற்றோரின் குணம் பற்றிக் கூற அவமானமாகவும் இருந்தது. ''அதற்கும் இதற்கும் ஒன்றும் இல்லை, சசிகாந்தன்'' என்றாள் தயக்கமாக.

''அதை நான் முடிவு செய்கிறேன்'' என்றான் அவன் எடுப்பாக. உடனேயே, ''மீரா நேற்று முன் தினத்திற்கு இன்று எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது என்கிறாய். காரணம் புதிதாக ஒன்றும் இல்லை என்றும் சொல்கிறாய். உள்ளிருக்கும் உனக்குக் கண்ணில் படாத ஒன்று வெளி ஆளான எனக்குப் புரியக்கூடும் இல்லையா? ப்ளீஸ். சொல்லு. உனக்குப் புரியவில்லையா. நம்

இருவருடைய எதிர்காலத்துக்காகவும் நான் உன்னிடம் போராடிக் கொண்டு இருக்கிறேன். தயவு பண்ணிச் சொல்லு'' என்று நயந்து தொடங்கி அழுத்தத்தில் முடித்தான்.

பெரிய நம்பிக்கை ஒன்றும் உண்டாகிவிடா விட்டாலும், அதற்கு மேல் மறுக்க மாட்டாமல் மீராவும் முழு விவரத்தையும் சொன்னாள். முன்தினம் விழுப்புரம் செல்ல நேரிட்டதிலிருந்து, அன்று தங்கை வீடு சென்று வந்தது வரை சொல்லி முடித்தாள்.

சற்று நேரம் அங்கே அமைதி நிலவியது.

பிறகு, ''நீ புத்திசாலி என்று நினைத்தேன், மீரா. சோர்வு அது இது என்று உன்னை விழுப்புரம் அனுப்பி, மாலை வெகுநேரம் வரை உன்னை அங்கே பிடித்து வைத்திருக்க ஏற்பாடு செய்து விட்டு, இங்கே உன் அப்பாவை வேலையை விடச் செய்து அந்தச் சுமையை உன் தலையில் ஏற்றி, உன் தங்கையையும் அவள் கணவரையும் விரல் அசைக்க விடாமல் கட்டிப்போட்டு... சேதுபதியின் குள்ளநரித்தனம் மெய்யாகவே உனக்குப் புரியவில்லை என்றா சொல்கிறாய்?'' என்று வியந்தான் சசிகாந்தன்.

''இதெல்லாம் அவர் திட்டமிட்டுச் செய்தது இல்லை என்று நான் சொல்லவில்லை, சசி. ஆனால், அதற்கு நீங்கள் சொன்ன மாதிரி குரூரமான வெறி காரணம் இல்லை என்றேன். அவ்வளவுதான்.'' என்று மீரா சோர்வுடன் உரைத்தாள்.

''வெறியில்லையா? இதே பார்.'' என்று மிகவும் லூசாக அணிந்திருந்த பருத்தி நூல் சட்டையை கழற்றி எறிந்தான், சசிகாந்தன். அருகிலிருந்த ஒரு சுவிட்சைத் தட்டினான். அதிகப்படியாக எரிந்த விளக்குகளின் பிரகாசத்தில் முன்னும் பின்னும் திரும்பிக் காட்டினான். ''பார் நன்றாகப் பார், அந்த சேதுபதியின் சாதுத் தன்மையை!'' என்றான் எகத்தாளமாக.

தோளில், மார்பில், முதுகில், கரங்களில் சிவந்து கன்றியிருந்ததோடு அங்கங்கே லேசாக ரத்தம் கசிந்தும் காய்ந்தும் இருந்தது.

''உன்னை நெருங்கினால் கடைசி ஊருக்குத் தான் போக நேரும்! என்று மிரட்டி சாம்பிள் காட்டினார்கள்... மீரா!''

அவனது காயங்களைப் பார்த்த ஒரு கணத்தில் அதுவரை மனதைக் கட்டியிருந்த பந்தங்களான சொந்தங்கள் அத்தனையும் கழன்றுவிட அவனைத் தவிர வேறு எதுவும் மனதில் இல்லாது விலகிவிட உருவற்ற ஒரு சிறு கூவலுடன் பாய்ந்து சென்று அவனை அணைத்துக் கொண்டாள் மீரா.

ஏதோ பெரிய அபாயத்திலிருந்து அவனைக் காப்பவள் போல அவள் அவனைத் தழுவியிருந்த விதத்தில் அவன் முகத்தில் முறுவல் அரும்பியது.

''ரொம்ப வலிக்கிறதா? டாக்டரிடம் காட்டினீர்களா? இல்லாவிட்டால் வாருங்கள்...'' என்று அவள் பதறவும் லேசாகச் சிரித்து ''ஷ். இது வெறும் மிரட்டல். பெரிதாக ஒன்றும் இல்லை'' என்று தேற்றி, இரு கைகளாலும் அவள்

முகத்தை ஏந்தி, அவளது பட்டான நெற்றியில் உதடுகளை மென்மையாக ஒற்றி எடுத்தான் சசிகாந்தன்.

பதிலாக முறுவலிக்கத் தொடங்கியவளின் முகம் வெளுத்தது. ''இப்படி மிரட்டுகிறவர் நமக்கு எப்படி அனுமதி தருவார்?''

''மட்டி.'' என்று அவளைச் செல்லமாக உலுக்கினான் அவன் ''உனக்கு அனுமதி தரவோ மறுக்கவோ அவர் யார்? உன் வயதினால், உன் தகப்பனாருக்குக் கூட உன் திருமண முடிவில் தலையிட உரிமை கிடையாதே.''

உண்மைதான்! உண்மையேதான்!!

அப்பா, அம்மா, அண்ணன், தம்பிகள் தங்கைகள் எல்லோரும் அந்த சமயத்தில் மனதை விட்டு அகன்றுவிட, யாருடைய அனுமதிக்காகவும் அவள் ஏங்க வேண்டியதில்லை என்ற ஆறுதலுடன் அவன் மார்பில் சாய்ந்தாள் மீரா.

உடனே அவனது காயங்களை எண்ணி, ''வலிக்குமே'' என்று விலக முயன்றாள்.

ஆனால், அதற்கு அவன் இடம் தரவில்லை.

சில வினாடிகளோ - அன்றிச் சில நிமிடங்களோ, மீராவுக்கு உலகமே மறந்து போயிற்று.

அவனாகவே ஒருவாறு அவளை விடுவித்தபோது, அவள் செங்கொழுந்தாகியிருந்தாள்.

அவளை ஒரு சோபாவில் உட்காரவைத்து விட்டு ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்த போது அவனது கரங்களும் லேசாக நடுங்கிக் கொண்டுதான் இருந்தன.

ஒரு தரம் ஆழ்ந்து புகை இழுத்துவிட்ட பின் தானும் எதிரே கிடந்த சோபாவில் அமர்ந்தான். இடது கையால் தன் உடம்பைச் சுட்டிக்காட்டி, ''இந்த மரியாதைகள் நடந்தபோதும் சரி, பிறகும் சரி, நீதான் என் மனைவி என்ற எண்ணத்தில் இருந்து ஒருகணம் கூட நான் மாறவில்லை, மீரா. உனக்கும் அந்த உறுதி இருக்கிறதல்லவா?'' என்று கேட்டான்.

இவையெல்லாம் வெறும் வெளிப்புறக் காயங்கள். ஆறிவிடக் கூடியவை. இவைகளையே தாங்கிக் கொள்ள முடியாதபோது, ''வாழ்க்கை முழுவதும் வேதனைப்படுவேன்'' என்றானே, அந்த மாதிரி வேதனையை அவன் அனுபவிப்பதை அவளால் எப்படி சகிக்க முடியும்?

பெற்றவர்கள், உடன் பிறந்தவர்களுக்கு வரக் கூடிய துன்பங்கள் எல்லாம் அவனுடைய வேதனையின் முன்னே முக்கியத்துவம் இழந்து போயின.

''ஆமாம்'' என்று தலையைத் தூக்கிச் சொன்னபோது அவள் முகத்தில் பிடிவாதம் இருந்தது.

லேசாக முறுவலித்துவிட்டு சற்றுச் சிந்தனையில் ஆழ்ந்தான் சசிகாந்தன். பின்,

''சேதுபதியின் வீட்டிலிருந்து வெளியேறிவிடு, மீரா'' என்றான்.

மீரா இரண்டு நாட்கள் முன்னதாகவே இதை நினைத்தவள் ஆயிற்றே. எப்படித் தொடங்கி எப்படி முடிந்தது!

முகத்தில் லேசான அவமானக் கன்றலுடன், ''எங்கே போவது? அம்மா, அப்பா பற்றிச் சொன்னேனில்லையா?'' என்றாள்.

''உன் தங்கை?''

''ராதாவும் அவள் கணவரும் உதவுகிறவர்கள் தான். ஆனால், இன்று அவளுடைய மாமியாரும் மாமனாரும் திரும்பி வந்து விடுவார்கள். இங்கே மாமாவுக்கு எதிராக அவர்களுடைய மகன் செயல்படுவதை ஒப்ப மாட்டார்கள். அவரிடமே வேலை பார்த்துக் கொண்டு அவரை எதிர்ப்பது என்றால், ஒத்துக் கொள்ள முடியாதுதானே. கிருஷ்ணன் வேலையை விடப் போவது தெரிந்தால் அது வேறு என்ன ஆகுமோ? ராதையைக் கொத்திப் பிடுங்கி விடுவார்கள்'' என்று முகம் வாடினாள் மீரா.

''மிஸ்டர் கிருஷ்ணனுக்கு வேறு வேலைக்கு நாம் ஏற்பாடு செய்யலாம். ஆந்திரா போவாரில்லையா? அங்கே இதைவிடப் பெரிய வேலை பார்த்துக் கொடுக்கலாம்'' என்று அவன் கூறவும் மீராவுக்கு ஓர் ஆறுதல் உண்டாயிற்று. அவளுக்கு உதவ எண்ணிய ஒரே காரணத்துக்காகீ அவளுடைய தங்கையின் குடும்பம் துன்புறப் போவதில்லை.

நன்றியினால் விழி மலர அவனை நோக்கினாள்.

புரிந்து, தலையசைத்து விட்டு, ''கட்டாயம் செய்வோம். ஆனால், இப்போதைய பிரச்சினை? என் பெரிய்மமா வீட்டிலும் பெரியப்பாவை இதில் நம்பமுடியாது. தன் தங்கையின் குடும்பம் செல்வ நிலையில் தங்களைவிட மிகவும் உயர்ந்தது என்று பெரியம்மா ஒன்றும் எண்ணாவிட்டாலும் பெரியப்பாவுக்கு ஒருவிதத் தாழ்வு மனப்பான்மை உண்டு. கடனே என்று சகிப்பது தவிர வேறு எதுவும் வைத்துக் கொள்ளப் பிடிக்காது... அல்லது நீ இங்கேயே தங்கி விடுகிறாயா? என்னை வேண்டுமானால் சோபாவோடு கட்டிப் போட்டு விடு'' என்று கூறிக் கண் சிமிட்டி நகைத்தான் அவன்.

வெட்கச் சிரிப்புடன் தலையசைத்து மறுத்தாள் மீரா. ''நன்றாயிராது சும்மாவே என்னென்ன கொச்சைப் பேச்செல்லாம் கேட்க. நேருமோ இது வேறா? வேண்டவே வேண்டாம். நான் இங்கே மாமா வீட்டுக்கே போகிறேன். ஆறு ஆண்டு காலம் அங்கே இருந்துவிட்டு அவரிடம் நேரே சொல்ல வேண்டிய கடமையும் இருக்கிறதல்லவா? அத்தோடு வீட்டிலும், அலுவலகத்திலும் கூட என் பொறுப்புக்கெல்லாம் மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும். சும்மா கையை உதறிவிட்டு வந்துவிட முடியாதே.''

அவனுக்கு அதில் அவ்வளவாக விருப்பம் இல்லை. ஆனால், மாற்று யோசனையும் ஒன்றும் தோன்றாமல் தயங்கி நின்றான்.

''பரவாயில்லை சசி. நான் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று

விட்டால், அவரால் என்ன செய்ய முடியும். அதனால் அவரிடம் சொல்லிவிட்டுப் பிறகு தங்கும் இடம் பற்றி யோசிக்கலாம்'' என்று பிரச்சினையை அப்போதைக்குத் தீர்த்து வைத்தாள் மீரா.

வேறு வழியின்றி, ''ஓகே. ஆனால், அவரிடம் சொல்வதற்கு நானும் வருகிறேன். அவர் மாலையில்தானே திரும்பி வருவார். நாமும் அப்போது போனால் போதும் இல்லையா? இப்போது நீயும் என்னோடு பெரியம்மா வீட்டுக்கு வா'' என்று அழைத்தான் அவன்.

மீராவுக்கும் அவனைப் பிரிய மனம் இல்லைதான்.

வெளியே வந்து சூசையைத் திரும்பி செல்லுமாறு பணித்தாள்.

அவன் தயங்கி நிற்பதை அலட்சியம் செய்து, சசிகாந்தனுடன் ஸ்பென்சருக்குள் சென்றாள். அவள் அணிந்திருந்த வெள்ளை ரவிக்கைக்குப் பொருந்துமாறு வெள்ளைப் பூக்களிட்ட ஒரு பச்சை வண்ணச் சேலையை வாங்கி அணிந்து கொண்டு அவனோடு கிளம்பினாள்.

செல்லும் வழியில் சற்று விழி விலகி, மீராவின் தங்கை வீட்டுக்குச் சென்று அவளிடம் சமாசாரத்தைச் சொல்லி மகிழ வைத்துவிட்டு சசிகாந்தனுடைய பெரிய தாயார் வீட்டுக்குப் போனார்கள்.

வேண்டுமென்று தானோ என்னவோ, ஜட்ஜ் வீட்டில் இல்லை.

ஆனால், சரசுவதி அம்மாளுக்கு மிகவும் சந்தோஷம். உள்ளே சென்று ஒரு ஜோடி தங்க வளையல்களைக் கொணர்ந்து மீராவுக்கு அணிவித்தார்.

''இதெல்லாம் எதற்கு?'' என்று ஆட்சேபித்த தங்கை மகனிடம், ''இருக்கட்டுமடா. இது என் தந்தை - உன் தாத்தா எனக்குப் போட்டது, அதனால் உன் பெரியப்பாவும் தலையிட மாட்டார்'' என்று சமாதானம் சொன்னார்.

மாலையில் அவர்களோடு தானும் உடன் வருவதாகக் கூறினார்.

மூவருமாக வீட்டினுள் சென்றபோது முதலில் சேதுபதி ஒன்றுமே பேசவில்லை. சூசை மூலம் ஓரளவு அறிந்திருப்பார் இல்லையா? ஆனால், அவரது பார்வை அவள் அணிந்திருந்த வண்ணச் சேலையை வெறிப்பதைக் காணவும் மீராவின் தலை தாழ்ந்து போயிற்று.

ஏற்கெனவே வேலையாட்களின் திகைப்பிலே சற்றுக் குன்றிப் போயிருந்தாள். இப்போது சேலையை மாற்றாமல் வந்து விட்டேனே என்று தன்னையே நொந்து கொண்டாள்.

சரசுவதி அம்மாள் வேறு, ''பிள்ளைகள் இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் விரும்புகிறார்கள்'' என்று உடனே தொடங்கி விட்டார்.

சேதுபதி இடதுபுறம் மார்பை அழுத்தி விடுவதைக் கண்டு, மீரா பறந்தோடிச் சென்று அவரது மாத்திரையைக் கொண்டு வந்து நீட்டினாள். சசிகாந்தன் பல்லைக் கடித்ததை அவள் கவனிக்கவே இல்லை. மாத்திரையை ஒதுக்கிவிட்டு, ''அம்மா,

உங்களை நான் இதற்குமுன் பார்த்ததுகூட கிடையாது. திடுதிப்பென்று வந்து என்னென்னமோ சொன்னால் எப்படி? அத்தோடு என் மருமகள் ஊமையல்ல; கோழையும் இல்லை இன்னொருவர் மூலம் பேசுவதற்கு'' என்று கூறி சரசுவதி வாயை அடைத்தார் சேதுபதி.

தொடர்ந்து, ''என்னம்மா, இந்த நோயாளிக்கிழவன் தனியே கிடந்து தவித்துச் சாகட்டும் என்று என்னை ஒதுக்கிவிட்டுப் போய்விடப் போகிறாயோ?'' என்று தீனமானக் குரலில் கேட்டபோது மீராவுக்கு வாயில் பேச்சு வரவில்லை.

''மாமா...'' என்று தொடங்கியவளின் குரல் தழுதழுத்து நின்று போயிற்று.

ஒரு நெடிய மூச்சுடன், ''இந்த ஆயு ஆண்டுகாலமாக இருந்த வயோதிகன் உயிரோடு இருப்பதே உன் கண...'' என்றவர் மீராவின் உடல் சட்டென விறைத்து இறுகத் தொடங்குவதை ஓரக் கண்ணால் கண்டு, ''என் மகன் போனாலும் மகளாக நீ இருக்கிறாய் என்ற தைரியத்தினால்தானே, என்னை அனாதையாக்கிவிட்டு...'' என்று கூறியவர் மேலே பேச முடியாமல் நிறுத்தினார்.

பெரியவருக்காக எவ்வளவோ மனம் வேதனைப்பட்டபோதும், ''இல்லை மாமா, இனி இங்கேயே இருந்து விடுகிறேன்'' என்று கூற அவளுக்கு மனம் வரவில்லை...

வெறும் அவளது சந்தோஷம் மட்டும் என்றால் தந்தை, குடும்பம், தந்தைக்கும் மேலான இவருடைய வேதனை இவைகளுக்காகத் தியாகம் செய்ய அவள் தயங்கி இருக்க மாட்டாள்.

ஆனால், சசிகாந்தன் வருத்தப்படுவான் என்றால் அதற்கு முன்னே உலகத்தில் உள்ள அத்தனை உறவும் அவளுக்குத் துச்சமாகிப் போயிற்று.

மார்பின் குறுக்கே கைகட்டியபடி, ஏதோ நாடகம் பார்ப்பவன் போல முகத்தில் சிறிதும் இரக்கம் இன்றி அவன் நின்ற விதம் மீராவுக்குக் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால், அவனை ஆள் வைத்து அடித்தவரிடம் அவரு ப்படி இரக்கம் வரும்?

அந்தக் காயங்களும் வீக்கங்களும் நினைவு வர மீராவுக்கும் கூடச் சற்றுமுன் உண்டாகியிருந்த இரக்கம் மறையலாயிற்று.

தலைகுனிந்து அமர்ந்திருந்த சேதுபதி சில கண நேர அமைதிக்குப் பின் மெல்ல நிமிர்ந்தார். ''என் மனதை இந்த இழப்புக்குத் தயார் செய்து கொள்ளவேனும். சற்று அவகாசம் கொடு குழந்தாய். இந்தக் கிழவனை இங்கே தன்னந்தனியே தவிக்க விட்டு இப்போதே இங்கிருந்து போய்விடாதே, மகளே!'' என்று குரல் நடுங்கக் கெஞ்சுதலாகக் கேட்டு, கைக்குட்டையால் கண்ணைத் துடைத்துக் கொண்டார்.

பார்த்துக் கொண்டிருந்த இரு பெண்களுக்கும் மனம் பாகாய் உருகிவிட்டது.

''இல்லை மாமா நான் இப்போது உங்களை விட்டு எங்கும் போகவில்லை'' என்று சேதுபதிக்கு ஆறுதல் வழங்கினாள் மீரா.

சேதுபதியின் மன்றாடலுக்கு இரங்கி அங்கேயே தங்குவதாக மீரா முடிவு எடுத்தது சசிகாந்தனக்குப் பிடிக்கவில்லை என்பது நன்றாகவே தெரிந்தது.

''மீரா'' என்று சற்று உரத்து அழைத்து அவன் ஏதோ சொல்லத் தொடங்குமுன் கெஞ்சுதலாக அவனை நோக்கினாள் மீரா.

அதற்குள், ''எனக்கு உடம்பு ஒரு மாதிரி இருக்கிறதம்மா. என்னைக் கொஞ்சம் என் ரூம் வரை அழைத்துப் போகிறாயா தங்கம்?... அல்லது ராமு, லோகு யாரையாவது கூப்பிடுகிறாயா? நான் அவர்கள் துணையோடு போனால் நீ இவர்களோடு பேசிக் கொண்டு இருக்கலாம். ஊ...ம்'' என்று மெலிந்த குரலில் கூறி முனகினார் சேதுபதி.

''இல்லையில்லை. நானே வருகிறேன்'' என்று அவரது கையைப் பற்றி அழைத்துக் கொண்டு போனாள் மீரா.

கதவு அருகில் சென்றதும் ''இதோ வருகிறேன்'' என்று சைகை காட்டிவிட்டுச் சென்றாள்.

கட்டிலில் மெல்ல முனகியபடி ஏறிப் படுத்ததும், ''நீ வேண்டுமானால், உடனே போ, அம்மா. போய் வந்திருப்பவர்களுக்கு டிபன் காபி கொடு. நானே கூட இருந்து உபசாரம் செய்யாததற்கு மன்னிப்புக் கேட்டதாகச் சொல்லு. உடம்பு நன்றாயில்லை பார். என் பிரஷர் எல்லாம் எடுத்துச் சொல்லு. வந்தவர்கள் தப்பாக நினைத்துக் கொள்ளக் கூடாது பார்... ஒருவேளை அவன் இப்போது நல்லவனாக இருந்தால் வேறு நல்ல உறவு கூட வரக்கூடும்... வந்து, அவர்கள் போன பிறகு இங்கே வந்து எனக்குச் சற்று நேரம் துணையிருப்பாயா மகளே?...'' என்று வெகு பலவீனமான குரலில் அவர் கெஞ்சியபோது அவளுக்கு நெஞ்சில் ரத்தம் கசிந்தது.

எதனால் உடம்பு திடீரென்று சரியில்லாமல் போயிற்று என்று அறிந்திருந்தபடியால் குற்ற உணர்வில் குறுகிப் போனாள்.

பெரியவருடைய வசதிகளைக் கவனித்து விட்டு, ''இதோ ஐந்து நிமிடத்தில் அவர்களை அனுப்பிவிட்டு வந்துவிடுகிறேன், மாமா'' என்று பரிவுடன் கூறி ஹாலுக்குச் சென்றாள்.

''எப்படி இந்தப் பக்கம் வரவிட்டார்? நீ இங்கே வந்தால் அங்கே அவரது இதயம் நின்று போய்விடாதா'' என்று சசிகாந்தன் இளக்காரமாகக் கேட்டான்.

''என்ன சசி இது? மாமா பாவம்'' என்றாள் மீரா இரக்கத்துடன்.

''ஆமாமடா. பாவமாய்த்தான் இருக்கிறது'' என்றார் சரசுவதியும்.

''ஊகூம். என்னால் மிஸ்டர் சேதுபதியை நம்ப முடியவில்லை. எதற்கும் நீ

எங்களோடு வந்துவிடு மீரா. நான் தங்கியிருக்கும் ஒட்டலிலேயே பக்கத்தில் ஒரு ரூம் உனக்கு எடுத்து விடலாம். உன்னை இங்கே விட்டுப்போக எனக்கு மனம் இல்லை. வந்துவிடு'' என்று வற்புறுத்தினான் சசிகாந்தன்.

''அது நன்றாயிராது. அத்தோடு அவரைத் தனியே விட்டுவிட்டு வருவது...'' என்று முழுமையாக அவனிடம் மறுக்க முடியாமல், சேதுபதியைத் தனியே விட்டுச் செல்லவும் முடியாமல் தயங்கினாள் மீரா.

''மீரா, அவர் என்னை ஆள் வைத்து அடிக்கும் அளவு சென்றவர், நினைத்துப்பார்'' என்றான் சசிகாந்தன்.

அந்தச் சிறு காயங்களின் நினைவில் இப்போதும் மீராவுக்குக் கண்கள் கலங்கின. ஆனாலும், ''அது சும்மா ஒரு மிரட்டலுக்காகத்தானே, சசி. நீங்களே சொன்னீர்களே... அவருக்கு ஆத்திரம் வருவது இயற்கைதானே. அதை எப்படி எப்படியோ காட்ட முயன்றிருக்கிறார். பாவம். நாம் உறுதியோடு இருப்பது தெரிந்து விட்டால், தானே இறங்கி விடுவார். இப்போதுகூட அப்படி ஒரு குறிப்பு காட்டிப் பேசினார் தெரியுமா? எதற்கும் கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாம்'' என்று நயந்து உரைத்தாள்.

சசிகாந்தன் மனம் வருத்தப்பட்டு விடக் கூடாதே என்று ஏகக் கவலை வேறு.

கெஞ்சும் குரலில் அவள் பேசுவதைக் கேட்டதும் ஏற்கனவே இளகி இருந்த சரசுவதி அம்மாளின் மனம் ஒரேயடியாய் உருகிப் பாகாய் ஓடிற்று. ''அவள் சொல்வது சரிதான், சசிம்மா, பொறுத்தார் பூமி ஆள்வார். தெரியுமில்லையா?'' என்றார்.

''கட்டாயம்! பூமிக்குள் போன பிறகு அவர்களுடைய அந்த ஆறடி நிலத்தை ஆளவேறு யார் வர முடியும்? நிச்சயமாக பொறுத்தார் பூமி ஆள்வார்தான்'' என்றான் சசிகாந்தன் எரிச்சலும் கேலியுமாக.

மீராவின் முகம் வாடவும், ''அட ஒரேயடியாக அப்படிப் பேசாதேடா. எனக்கு என்னமோ விட்டுப் பிடிக்கலாம் என்றுதான் இருக்கிறது. இரண்டு நாள் கழித்துப் பிறகு தொடரலாம்'' என்றார் அவனுடைய பெரியன்னை.

இவர்கள் இருவரும் மனம் கலங்கிவிடக் கூடாது என்பதற்காக இவர்களிடம் 'வெறும் மிரட்டல்' என்று கூறியது தவறே என்று சசிகாந்தனுக்கு அப்போது தோன்றியது. அவனும் போர்க்கலை அறிந்தவனாக - அதுவும் நன்றாகக் கற்றுத் தேர்ந்தவனாக இருந்ததால் தானே இந்த மட்டில் தப்பினான். மற்றபடி குறைந்தது கை கால் முடமாகவேனும் போயிருக்குமே.

ஆனால், இப்போது அதைச் சொன்னால் தன் வார்த்தைக்கு பலம் தேட புளுகுவதுபோல இருக்கும். கூடவே இரு பெண்களின் உருக்கத்தைக் காண்கையில் கையைக் கட்டி வைத்தாற்போல உணர்ந்தான் சசிகாந்தன். ''என்னவோ, மீராவின் மனம் உறுதிப்பட வேணும் இந்தக் காயங்கள் உதவினவே'' அதுவே பெரிய விஷயம்தான்.

தான் எதற்காக அங்குகிறோம் என்று சசிகாந்தனுக்கே புரியவில்லைதான்.

தன்னிடம் செய்தது போல அடிதடி என்று மிரட்டி மீராவின் மனதை மாற்ற முடியாது. அந்த அளவுக்குச் சேதுபதி முட்டாள் அல்ல என்பது அவனுக்கு நன்றாகவே புரிந்தது.

ஆயினும் அச்சம் அப்படியே இருந்தது.

''உன் விருப்பம் மீரா. ஆனால், நான் மிஸ்டர் சேதுபதியிடம், ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வருகிறேன்'' என்று கிளம்பியவன் கூடவே தொடர்ந்த மீராவிடம் ''தனியாக'' என்று கூறி நிறுத்திவிட்டுச் சென்றான்.

ஆள் அரவம் கேட்டு முனகத் தொடங்கிய சேதுபதியை, ''நான்தான். மீரா வரவில்லை. அதனால் இந்த நாடகம் ஏதும் அவசியம் இல்லை'' என்று கூறி நிறுத்திவிட்டு, ''மீராவை இங்கே விட்டுவிட்டுப் போகிறேன். ஆனால், ஒன்று கவனம் இருக்கட்டும். அவளுக்கு ஏதாவது சிறு தீங்கு நேர்ந்தாலும் அப்புறம் உங்களைத் தொலைத்துக் கட்டி விடுவேன். ஜாக்கிரதை'' என்று கடுங்குரலில் எச்சரித்து விட்டு வெளியேறினான்.

சேதுபதி அவன் பேசியதைக் கண்டு கொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை.

மீராவிடமும் வெகு கவனத்துடன் இருக்குமாறு வலியுறுத்தி விட்டு மனமின்றியே அவளைப் பிரிந்து சென்றான். அதுவும் 'உன் பெரியப்பா கிளப்பிலிருந்து வருகிற நேரம் ஆயிற்று. சசிம்மா' என்று சரசுவதி உந்திய பிறகுதான் கிளம்பினான்.

அப்போதும் பலமுறை எச்சரிக்கை செய்த பிறகுதான்.

''அப்படி என்ன பயப்படுகிறீர்கள்?'' நேரடியாகக் கேட்டாள் மீரா.

''என்னவோ, எனக்குச் சேதுபதியிடம் நம்பிக்கை இல்லை'' என்று திரும்பவும் மனதை மறையாமல் சொன்னான் சசிகாந்தன். ''அவர் அவ்வளவு எளிதில் விட்டு விடுகிறவர் இல்லை...''

லேசாகச் சிரித்துவிட்டு, ''உங்களுக்கு அவரைப் பற்றி என்ன தெரியுமாம்?'' என்று கேட்டாள் மீரா.

''உன் அப்பாவை வேலையை விடச் செய்தது மிஸ்டர் கிருஷ்ணனின் மாற்று வேலையை கெடுத்தது, கடைசியாக என்னை அடித்தது... எல்லாவற்றையும் மறந்துவிட்டாய் போல் தெரிகிறது'' என்றான் அவன் ஒரு மாதிரிக் குரலில்.

''இல்...லை சசி.'' என்றாள் மீரா அழுத்தத்துடன். ''ஆனால், மாமா குணம் எனக்குத் தெரியும் இல்லையா? தோல்வி நிச்சயம் என்று தெரிந்தால் அதற்குமேல் அவர் பிடித்து இழுத்துக் கொண்டு நிற்க மாட்டார். எதிலும் முயற்சி செய்வாரே தவிர எங்கே நிறுத்த வேண்டும் என்பது அவருக்குத் தெரியும். நாங்கள் வாங்க வந்த தொழிற்சாலை விஷயத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். ஓரளவு நஷ்டத்தைத் தாங்கிக் கொண்டு முடியாது என்று தெரிந்ததும் விற்க முடிவு செய்துவிட்டார். இல்லையா? இப்போதும் அப்படித்தான். என் உறுதி புரிந்ததும் உள்ளூரப் பிடிக்காவிட்டாலும் ஒத்துக் கொள்ளத் தொடங்கிவிட்டார்.

வயதானவர் இல்லையா, அவர் மனதைச் சமாதானம் செய்து கொள்ளச் சற்று அவகாசம் கொடுப்போமே.''

ஆறு ஆண்டுகளாகப் பெரியவருடைய விவாத விளக்கங்களை ஒத்துக் கொண்டு அதன்படி நடந்தே பழகி இருந்த மீரா இப்போதும் அதையே செய்தாள். அது சசிகாந்தனுக்குப் பிடிக்கவில்லை என்று புரிந்ததால் அவள் அவனையும் சமாதானம் செய்ய வேண்டியிருந்தது.

அவனுக்கும் அது புரியாமல் இல்லை. ஏதோ திருமண விஷயத்திலாவது உறுதியோடு இருக்கிறாளே என்ற திருப்தியுடன் அவன் அவளை அங்கேயே விட்டு விட்டுத் திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது.

சசிகாந்தனும் அவனுடைய பெரியன்னையும் புறப்பட்டுச் சென்றபிறகு, மீரா மீண்டும் சேதுபதியின் அறைக்குள் சென்று பார்த்தாள்.

உறங்குவதுபோல அவரது கண்கள் மூடி இருந்தபோதும் புருவ மத்தியில் இருந்த லேசான சுளிப்பு அவர் தூங்கவில்லை என்பதை உணர்த்தியது.

யோசனையா அல்லது மனத்துக்குள் போராட்டமா?

எதிலும் குறுக்கிட விரும்பாமல் லைப்ரரிக்குச் சென்று பாரதியாரின் கவிதைத் தொகுப்பை எடுத்து வந்து பக்கத்தைப் புரட்டினாள். திருப்பிய பக்கத்தில் 'மனதில் உறுதி வேண்டும்' பாடல் இருந்தது.

'என் மனதில் இந்த உறுதி எப்படி வந்தது' என்று வியந்தவளுக்கு உடனேயே சசிகாந்தனின் உறுதியும் நினைவு வந்தது.

நாலுபேர் வந்து அடிக்கிறபோது வெறும் மிரட்டலுக்கு என்றா எண்ணத் தோன்றும்? உயிருக்குக்கூட அஞ்ச வேண்டிய நிலைதானே! அந்த நிலைமையிலும் கணம்கூட மாறாமல் இருந்திருக்கிறானே!

கையிலிருந்த புத்தகம் மறந்துவிட அவன் நினைவில் ஆழ்ந்தாள்.

''அவனைப் பற்றி நாலுபேர் நாலுவிதம் பேசுகிறார்கள். ஒரு துப்பறியும் நிறுவனத்தை ஏற்பாடு செய்து அவனைப் பற்றி ஆராயச் சொல்லலாம்'' என்றார் சேதுபதி திடீரென்று.

பூனாக்கதை நினைவு வர, இன்னொரு சிறுபிள்ளைத்தனமான முயற்சியா என்று உள்ளூரக் குறுநகை புரிந்தபடி, ''தேவையில்லை மாமா. மனத்துக்கு மனமே சாட்சி என்பார்கள். அவர் நல்லவர் என்று எனக்குத் தெரியும்'' என்றாள் மீரா அமைதியாக.

''இப்படி நினைத்துத்தான் ஆயிரம் பெண்கள் ஏமாறுகிறார்கள். உன்னோடு பெரிய சொத்து வரக்கூடும் என்று எதிர்பார்த்திருக்கலாம்'' என்றார் சேதுபதி விடாமல்.

''இங்கிருந்து எதுவும் வேண்டாம் என்று அவர் சொல்லியிருக்கிறார், மாமா'' என்றாள் அவள் சுருக்கமாக.

''என் அபிப்பிராயத்துக்கு ஒரு மதிப்பும் கிடையாதாக்கும்?'' என்றபோது

அவரது குரலில் அடக்கப்பட்ட ஆத்திரம் இருந்தது.

''மன்னித்துக் கொள்ளுங்கள், மாமா'' என்றாள் அவள் பணிவாகவே. ஆனால், ''என் வாழ்வு அவரோடுதான் என்று நான் முடிவு செய்து விட்டேன்'' என்றபோது அவள் குரலில் உறுதி இருந்தது.

''ரொம்பவும் அவசரப்படாதே. இந்த விஷயத்தில் முடிவு சொல்ல உன் பெற்றோருக்கும் கொஞ்சம் உரிமை உண்டில்லையா?''

நையாண்டியா? குரலில் இருந்ததோ அவர் முகத்தில் இருந்ததோ அவளால் ஒன்றும் கண்டுகொள்ள முடியவில்லை.

பெற்றவர்கள் என்ன சொல்லக்கூடும் என்று மீரா ஓரளவு எதிர்பார்த்தே இருந்தாள். ஆயினும் நடேசனின் சில வார்த்தைகள் அவளது நெஞ்சில் கூர்முள்ளாய்த் தைத்து வலிக்க வைத்தன.

என்ன சொன்னாலும் சரியென்று கல்லைப் போலத் தளராத பிடிவாதத்துடன் மீரா அசையாமல் அமர்ந்திருந்தாள். ஆனால், தற்கொலை செய்து கொண்டு உயிரை விட்டு விடுவேன் என்று தந்தை கூறவும், அப்படியே கலங்கிப போனாள்.

தந்தையின் சவத்தைத் தாண்டிக் கொண்டு அவனோடு வாழ்வைத் தொடங்க முடியுமா?

கலங்கி நின்றவளைத் தந்தையின் முகத்தில் பரவிய வெற்றிக்குறி சிந்திக்க வைத்தது.

நடேசனுக்கு ஆயிரம் விதமான ஆசைகள் - காரசாரமான சாப்பாட்டில் ஆசை, ரிலீசான முதல் நாள் புதுப்படத்தைப் பார்ப்பதில் ஆசை. சவடாலாகப் பேசுவதில் ஆசை, ஊர் சுற்றுவதில் ஆசை, முச்சந்தியில் நின்று அரட்டை அடிப்பதல் கூட ஆசைதான்.

இத்தனை ஆசைகளையும் விட்டுவிட்டு தற்கொலை செய்து விடுவாரா?

யோசித்த உடனே இன்னொன்றும் மனதில் பட்டது. முதலில் பேசிய ஏச்சு பேச்சுக்கு மீரா மசியவில்லை என்று ஆனதும், தாயும் தந்தையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு 'க்ளூ' கொடுத்த மாதிரி நடேசன் தற்கொலைப் பேச்சைத் தொடங்கியது போலத் தோன்றியது மீராவுக்கு.

உடனே, ''தற்கொலை செய்து கொண்டு செத்தாலும் சாவேனே தவிர, மற்ற பிள்ளைகளுக்கு ஒரு செருப்பாய் இருந்து செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய மாட்டேன் என்கிறீர்களா, அப்பா?'' என்று கேட்டுவிட்டாள்.

''அடி செருப்பால நாயே! கடமை! கடமை, பற்றி நீ என்னிடம் பேசுகிறாயா? தம்பி தங்கை, தாய் தகப்பனைப் பட்டினி போட்டுவிட்டு கண்ட பயலோடு கட்டிலுக்கு ஓடத் துடிக்கிற கழுதை, என்னைப் பார்த்துப் பல் மேலே நாக்குப் போட்டு கடமை உபதேசம் செய்கிறாயா? அந்த வாயிலேயே போடுகிறேன்'' என்று ஆங்காரத்துடன் கையை ஓங்கிக் கொண்டு ஓடி வந்தார்.

அடித்துவிடப் போகிறார் என்றேதான் மீரா நினைத்தாள்.

ஆனால், ''நில்லுங்கள்'' என்று கூறிய சேதுபதியின் ஒரு வார்த்தை அவரை அப்படியே 'பிரேக்' போட்டு நிறுத்தியது.

''நில்லுங்கள், நடேசன். எதற்கு இவ்வளவு கோபம்? மீரா என்ன உலகமகா பாதகத்தையா செய்யப் போகிறாள். அங்கங்கே நாட்டில் நடப்பதுதானே விதவா விவாகம் என்பது? காந்திகூட விதவைகள் மறு திருமணம் செய்யலாம் என்று சொல்கிறாரே. சொல்லப்போனால் இங்கே நான் மீராவை மருமகளாக ஏற்றுக் கொண்டேன்; என் மகன் அவளை மனைவியாக ஏற்றுக் கொண்டான்; மீராவும் என் மகனைத் தன் புருஷனாக ஏற்றுக் கொண்டாள் என்றாலும் நாலுபேர் அறியத் திருமணம் என்று ஒன்று நடக்கவில்லை தானே.''

சேதுபதி ஆதரிக்கிறாரா அடிக்கிறாரா என்றே மீராவுக்குப் புரியவில்லை. ஊரறியத் திருமணச் சடங்கு நடவாவிட்டாலும் உண்மையில் கல்யாணம் நடந்துவிட்டது என்கிறாரா? அல்லது வெறுமனே யதார்த்தமாகக் கூறுகிறாரா? அல்லது அவளை உள்ளூரச் சங்கடப்படுத்துகிறாரா?

எதுவானாலும் மேலே அவர் வாயிலிருந்தே வரட்டும் என்று பேசாமலே இருந்தாள் மீரா. எப்படியும் இந்த மாதிரிச் 'சுருக்'களுக்குப் பயந்து அவள் சசிகாந்தனை இழப்பதாக இல்லை.

ஒரு சின்ன இடைவெளி கொடுத்து, ''ஆக, ஊரில் நாட்டில் எல்லோருமா நிலகவதியாராக இருக்க முடியும்? மீரா, நீ உன் அறைக்குப் போ, அம்மா. நான் என்னவோ, ஒரு நல்ல காரியம் என்றால் பெற்றவர்கள் அபிப்பிராயத்தையும் தெரிந்து கொள்ளலாம் என்று பார்த்தால் அடிக்க வருகிறாரே. நீ போம்மா, நான் இவர்களோடு பேசி அனுப்பிவிட்டு வருகிறேன்'' என்று கனிவோடு அவளை அனுப்பி வைத்தார்.

மீராவும் எழுந்து உள்ளே சென்றாள்.

இந்த விவகாரத்தில் ஆத்திரமோ எதிர்ப்போ காட்டக்கூடிய தகுதி உடையவர் சேதுபதிதான். பேச்சின் ஊடே ஒரு குத்து குத்திய போதும், அவரே இணக்கம் காட்டும்போது பெற்றோரின் போக்கு மீராவுக்கு மிகுந்த வேதனையை அளித்தது!

பெற்ற மகனின் வாழ்வு பட்டுப் போய்விட வேண்டும் என்று ஒரு தாய் தந்தையரால் எப்படி எண்ண முடியும்? சும்மா வரும் பணத்துக்கு அவ்வளவு வலிமையா?

சற்றுப் பொறுத்து சேதுபதி வந்தார். ''என் மருமகள் மேல் கை வைக்க வருகிறாரே, இவர்! என்ன தைரியம்! இனிமேல் இவர்களுக்காக என்று ஒரு பைசா நான் செலவு செய்யப் போவது இல்லை. வேலையையும் விட்டு விட்டாரில்லையா? நன்றாக நடுத்தெருவில் நின்று அவதிப்படட்டும். அந்தப் பயல் கிருஷ்ணனையும் டிஸ்மிஸ் செய்ய வேண்டும். ஒன்றாகக் கஷ்டப்பட்டால் தான் நன்றாக புத்தி வரும்'' என்று உறுமினார்.

யாருக்கு?

இவர் மிரட்டுவது தகப்பனாரையா அன்றித் தன்னையா?

இல்லையில்லை, அவர்கள் துன்புற்றால் அது எனக்குத் துன்பமே, பழைய மாதிரியே உதவி செய்யுங்கள் என்று இவரிடம் எந்த முகத்தை வைத்துக் கொண்டு கேட்பது?

துணிந்து கேட்டாலும், 'சரிதான் செய்கிறேன்; பதிலாக நீ சசிகாந்தனை மறந்துவிடு' என்று நிபந்தனை போட்டால்?

சேதுபதி அப்படிக் கூறக் கூடியவர்தான் கூறுகிறவரும்தான். மவுனமாகக் காத்து நிற்பதைப் பார்த்தால் அதைக் கேட்க எண்ணியிருப்பவரும் கூடத்தான்.

அப்படி அவர் கேட்டு, இவள் மறுத்து இருக்கும் சுமுகமான நிலையைக் கெடுத்துக் கொள்வானேன்?

இதுவரையில் சேதுபதி மீராவின் திருமண விஷயம் பற்றி நேராக அவளிடம் மறுத்தோ தடுத்தோ எதுவும் பேசவில்லை. அதனால் கோபம், கொந்தளிப்பும் இல்லை.

இன்னமும் சில நாட்கள் இந்தப் பொறுப்புகளுக்கு மாற்று ஏற்பாடு செய்யும்வரை இப்படியே கழித்துவிட்டு நல்லபடியாகவே போய்விட்டால் என்ன?

மேலும்... சட்டென மீராவின் முகம் கடின முற்றது. மேலும் சசிகாந்தன் சொன்னதுபோல, தான் பெருக்கிக் கொண்ட குடும்பத்தைக் காப்பது பெற்றவர் கடமைதானே. எப்படியோ அந்தக் கடமையை அப்பா செய்யட்டும். செய்துதான் தீர வேண்டும். அவருடைய கஷ்டத்துக்காகச் சசிகாந்தனை வேதனைக்குள்ளாக்குவது அவளால் முடியாத காரியம்.

மேலும், சற்று நேரம் நின்று பார்த்து விட்டுப் போன சேதுபதியின் முகமும் வெகு கடின முற்றிருந்தது.

அடுத்த சில தினங்கள் ஒரு மாதிரியான அமைதியுடன், மீராவின் மனதுக்கு உகந்த மாதிரியே கழிந்தன.

சேதுபதியின் நிறுவனங்களில், டைரக்டர், எக்ஸ்க்யூட்டிவ், எம்.டி. என்று வகித்து வந்த பொறுப்புகளில் (பல வரிக்காகவும் பந்தாவுக்குமாகப் பெயரளவில் ஆனவை) இருந்து மீரா விலகினாள்.

வீட்டு நிர்வாகத்தில் ஒவ்வொரு பொறுப்பை ஒவ்வொருவருக்குக் கொடுத்து, திரும்பத் திரும்பச் செய்ய வைத்துப் பழக்கினாள். இவள் ஏவி அவர்கள் செய்வது என்ற நிலையை மாற்றி அவர்களாகவே அந்தந்த விதமாய் யோசித்துச் செய்ய வைத்தாள்.

'எங்களை விட்டுப் போறீங்களாம்மா? கலியாணமாம்மா? உங்களுக்குப் பொட்டு நல்லாருக்கும்மா' என்ற பேச்சுக்களைக் கன்னம் குழியக் கேட்டு மனம் குளிர்ந்தாள்.

நேரில் வந்து சேதுபதியின் மனதுக்கு வருத்தம் தர வேண்டாம் என்ற மீராவின் வேண்டுகோளுக்கு இணங்க சசிகாந்தன் ஒதுங்கியே நின்றான். டெலிபோனில் பொதுவான, சுருக்கமான பேச்சு தவிர.

ஐந்து நாள் இப்படிக் கழித்தவன் ஆறாம் நாள் நேரில் வந்து குதித்தான். கண் பூத்துப் போயிற்றாம்; உணவு தொண்டைக்குக் கீழ் இறங்க வில்லையாம்.

''ஒரு நல்ல வலுவான கரண்டியை எடுத்து, அதன் கரம்பினால் தொண்டையில் குத்தினால் தாராளமாய் இறங்கி விடும்'' என்று சாதுவாய் சொல்லிச் சிரித்தாள் மீரா.

''என் தொண்டையில் கரண்டிக் காம்பால் குத்துவதா? உன்னை...'' என்று செல்லமாய் மிரட்டி அவளது கன்னங்களைப் பற்றி விளையாட்டாய்க் கிள்ளினான் சசிகாந்தன்.

கலீர் என்று மீராவின் சிரிப்பொலி காற்றை நிறைத்தது.

பட்டென்று கார்க் கதவை வலுவாக மூடிய சத்தம் கேட்டுத் திரும்பினால், முகத்தை மறுபுறம் திருப்பியபடி சேதுபதி பங்களாவினுள் செல்வது தெரிந்தது.

யோசனையோடு பார்த்துவிட்டு, ''ஊகூம். இது சரியில்லை. பேசாமல் என்னோடு புறப்பட்டு வந்துவிடு, அங்கே ஓட்டலில் உனக்காக என்...னென்ன காத்திருக்கின்றன, தெரியுமா?'' என்று பாதி சிரிப்பும் பாதி சீரியசுமாகச் சொன்னான் சசிகாந்தன்.

''பாவம் அவருக்குக் கஷ்டமாயிருக்கும் இல்லையா? இன்னும் எத்தனை நாள் இவள் நம்மோடு இருப்பாளோ என்று இருக்கும் இல்லையா?'' என்று பரிந்தாள் அவள்.

''திருமணம் செய்து கொடுக்கும் தந்தை மாதிரி...?'' என்று கிண்டலாகக் கேட்டான் அவன்.

''அப்படியில்லைதான். ஆனால், ஆறு ஆண்டுகள் பெற்ற மகள் போலப் பாவித்து வந்திருக்கிறாரே, பிரிவு கொஞ்சம் கஷ்டமாகத்தானே இருக்கும்'' என்று மேலும் வக்காலத்து வாங்கினாள் மீரா.

சற்றுப் பேசாதிருந்துவிட்டு, ''நீ ஜாக்கிரதையாகவே இருப்பாய் இல்லையா, மீரா?'' என்று குரலில் கவலையுடனே கேட்டான் அவன்.

'என்ன பூச்சாண்டி காட்டுகிறீர்கள்?' என்று எரிச்சல் பட வாயெடுத்தவள் அடக்கிக் கொண்டாள். எல்லாம் அவளுக்காகத்தானே. அவள் மீது கொண்ட அக்கறையால்தானே அவனுக்கு இருண்டதெல்லாம் பேயாய்த் தோன்றுகிறது.

ஒரு புன்னகையோடு, ''இருபத்து நாலு மணி நேரமும் எச்சரிக்கையாகவே இருப்பேன் - அச்சமே வேண்டாம்'' என்றாள்.

அன்று இரவு உணவு அருந்துமாறு மீராவை வலிய வலிய அழைத்தார் சேதுபதி.

ஆனால், சசிகாந்தன் வாங்கி வந்திருந்த சிறுமலைப் பழங்களையும், ஆப்பிள்களையும் அவனையே நினைத்தபடி நேரம் காலம் பாராது சற்று அதிகமாகவே உண்டுவிட்ட மீரா உணவை மறுத்து விட்டாள்.

ஆயினும் சற்றுப் பொறுத்து ஒரு தம்ளரில் பாலைத் தானே எடுத்துவந்த சேதுபதி அதை அவள் அருந்து மட்டும் அங்கிருந்து அகலவில்லை.

இந்த ஆளைப் போய் சந்தேகப்படகிறாரே என்று எண்ணியபடியே, கையிலிருந்த புத்தகம் நழுவி விழக் கண்ணயர்ந்தாள் மீரா.

நல்ல தூக்கத்தில் - முதலில் கனவில் தலை காட்டிய சசிகாந்தன் கூட மறைந்து போய்விட ஆழ்ந்த உறக்கத்திலிருந்து அவளை யாரோ உலுக்கி எழுப்பினார்கள். என்ன முயன்றும் இமைகளைப் பிரிக்க முடியாது நித்திரையில் உடல் சோரத் திரும்பிப் படுத்து உறங்கலானாள்.

சட்டென்று முகத்தில் அடிக்கப்பட்ட குளிர்நீர் அவளை சற்றே விழிக்க வைத்தது.

எதிரே சேதுபதி நிற்பது மங்கலாகத் தெரிந்தது. பின்னே... சூசையா?

''எழுந்து என்னோடு வா'' என்று அழைத்தார் சேதுபதி.

''இல்லை மாமா, தூக்கமாய்...'' என்று அயர்வுடன் மீண்டும் படுக்க முயன்றவளைத் தடுத்துத் தோளைப் பற்றிக் குலுக்கினார் அவர். ''அப்புறமாய் நன்றாகவே தூங்கலாம். இப்போது என்னோடு வா'' என்றார் அதிகாரமாக.

அந்நதக் குரலுக்குப் பணிந்துதான் ஆக வேண்டும் இல்லையா?

மெல்லக் கட்டிலில் இருந்து இறங்கினால் நிற்க இயலாமல் கால்கள் தள்ளாடின.

''இதோ, என்னையும் சூசையையும் பிடித்துக் கொண்டு வா'' என கிழவர் அதே குரலில் உத்தரவிட்டார்.

கட்டளைக்குப் பணிந்து அவர்களோடு தடுமாறி நடக்கையில் மீரா யோசித்தாள். தனக்கு என்ன ஆயிற்று! ஏன் நடக்கக்கூட முடியவில்லை. நடக்கும்போது கூட ஏன் தூக்கம் வருகிறது? கணணைத் திறப்பது இவ்வளவு சிரமமாய் இருக்கிறதே...

இதெல்லாம் ஏன் என்று கண்டு கொள்ளும் அளவு சுறுசுறுப்பு மூளைக்கு வர மறுத்தது. அதை விடக் கண்களை மூடிக் கொண்டு தாங்கலாக இவர்கள் அழைத்துச் செல்லும் இடத்துக்குப் போய்விடலாம் என்று முடிவு செய்து தள்ளாடி நடந்தாள்.

வெகு தூரம் நடந்தபிறகு அவளை எங்கோ ஓர் இடத்தில் உட்கார வைத்தார்கள். மரத்தடி என்ன ஏது என்று யோசிக்குமுன் தூக்கம் கண்களைச் சுழற்ற, மரத்தடியில் சாய்ந்து துயிலத் தொடங்கினாள்.

எவ்வளவு நேரம் தூங்கினாளோ, மீண்டும் அவள் முகத்தில் தண்ணீர் விசிறி அடிக்கப்பட்டது. ''நன்றாக கண்ணிலேயே தண்ணீர் அடி அவள் விழிக்க வேண்டும். என்ன நடக்கிறது என்று அவளுக்குத் தெரிய வேண்டும்'' என்ற குரலும் மெல்லத் தெளிவாகக் கேட்டது.

''எங்கே இருக்கிறாய் என்று தெரிகிறதா? சொல் தெரிகிறதா? சொல்லு. சொல்லடி.''

சொல்லாமல் அவர் விட மாட்டார் என்பது புரியவும் பிரயாசையுடன் விழிகளைத் திறந்து பார்த்தாள் மீரா. வீட்டின் பின் புறமாய் வடமேற்கு மூலையில், கேசவமூர்த்தியின் உடல் புதைக்கப்பட்ட இடம்...

''ச...சமாதி'' என்றாள் மீரா. இன்னமும் வசத்துக்கு வராத நாக்கு குழற.

''சமாதிதான்'' என்று தலையை அழுத்தத்துடன் ஆட்டினார் சேதுபதி... ''இங்கே ஏன் வந்திருக்கிறோம் தெரியுமா?''

மீண்டும் கேள்வி. ஆனால், பதில் தெரியவில்லையே... ''தெ...தெரியாது'' என்றாள் மீரா. பேசாமல் படுத்துத் தூங்க விட்டால் எவ்வளவு நன்றாய் இருக்கும்...

''நான் சொல்லுகிறேன் கேள். இங்கே இன்னொரு ஆள் கேசவனோடு சமாதியாகப் போகிறார்.''

யாராக இருக்கும்? அவளுக்குத் தெரியாமல் யார் செத்தார்கள்? மரத்தில் நன்றாகச் சாய்ந்து கொண்டு ''யார்?'' என்று வினவினாள்.

''நீதான்'' என்று அறிவித்தார் சேதுபதி.

''நானா?'' நம்பமுடியவில்லை மீராவுக்கு. எதற்கும் சந்தேகத்துடன் தன்னையே கிள்ளிப் பார்த்தாள். வலித்தது. ''ஊகூம். நான் உயிரோடு இருக்கிறேனே'' என்றாள் தெளிவற்று.

''அதற்கென்ன உயிரோடு சமாதியாகிவிடு'' என்று அலட்சியமாய்க் கூறி, 'ஹாஹா' என்று உரக்கச் சிரித்தார் சேதுபதி.

''ஊகூம் நான் மாட்டேன்'' என்றாள் மீரா பிள்ளைபோல.

''மாட்டேன் என்றால் யார் விடுகிறார்கள்? வேறே எதற்காக இந்த நடுநிசியில் உன்னை இங்கே கூட்டி வந்திருக்கிறேன் என்று நினைத்தாய்?'' என்று மீண்டும் ராட்சசச் சிரிப்பு சிரித்தார் அவர்.

பரக்கப் பரக்க விழித்தாள் மீரா. ஏதோ ஒன்றும் சரியில்லை. என்னமோ பெரிய தப்பு நடக்கப் போகிறது என்கிற வரை அவளுக்குப் புரிந்தது. ஆனால், தூக்க மாத்திரையால் மந்த முற்றிருந்த மூளையும் செயல்பட மறுத்த கை கால்களைப் போலவே வேலை செய்யவில்லை.

ஒன்றும் புரிபடாமல் சேதுபதியை ஏறிட்டுப் பார்த்தாள் - அவர் முகம் ஏன் இவ்வளவு விகாரமாய் இருக்கிறது?

அவளது கண்கள் மீண்டும் சோருகையில் மறுபடியும் அவள் முகத்தில் தண்ணீர் அடித்து எழுப்பினார் சேதுபதி.

''நான் சொல்லுவதை நன்றாகக் கவனிடி. நாயே நீ உயிரோடு சமாதி ஆவதோடு விஷயம் முடிந்து விடும் என்று நினையாதே. அந்த ராஸ்கல் சசிகாந்தனையும் நான் பழி வாங்கியாக வேண்டாமா? என்ன தைரியம் இருந்தால் என் மகன் ஆசைப்பட்ட பெண் மேல் கண் வைப்பான்? உன்னை என் கேசவனோடு பெட்டியில் அடைத்து விட்டு, அந்தப் பயலோடு வீட்டு நகைகளை எல்லாம் எடுத்துக் கொண்டு நீ ஓடிப் போய்விட்டதாக ஊரெல்லாம் பரப்புவேன். அந்த நகைகளுக்காக அவன் உன்னையும் கொன்றுவிட்டான் என்று கூட புகார் செய்வேன்.''

''யாரும் நம்ப மாட்டார்கள்'' என்று முணுமுணுத்தாள் மீரா.

''ஏன் நம்ப மாட்டார்கள்? இதைப் பார்த்தாயா?'' என்று நீலநிற வெல்வெட் பெட்டியைத் திறந்தார் சேதுபதி.

பங்களாவின் உள்சுவர் ஒன்றில் உள்ளடங்கினாற்போல் அமைந்திருந்த இரும்புப் பெட்டியில் இந்த நகைப் பெட்டியை மீரா பார்த்ததுண்டு. அதன் உள்ளிருந்த நகைகளின் விபரம் அவளுக்கு நினைவு வர மறுத்தது.

அவர் பெட்டியைத் திறந்து காட்டவும் உள்ளிருந்த வைர, மரகத, ரத்தினங்கள் பளிச்சிட்டன. ''பார், இதையும் உன்னோடு சேர்த்து புதைக்கப்போகிறேன். பிறகு இந்தப் பெட்டியை எடுத்துக் கொண்டு நீ சசிகாந்தனோடு ஓடிப் போனதாகப் போலீசில் புகார் கொடுப்பேன். அவன் மதியம் வந்து ஏற்பாடு செய்து விட்டு இரவில் மீண்டும் வந்து அழைத்துப் போனதாகச் சொல்லுவேன்.''

''ஏதோ சத்தம் கேட்டு எட்டிப் பார்த்த சூசை நீ இந்தப் பெட்டியோடு அவன் காரில் ஏறியதைப் பார்த்ததாகச் சாட்சி சொல்லுவான். ஓடி வந்து என்னை எழுப்ப முயன்றால் முடியவில்லை என்று சொல்லுவான். வயிறு சரியில்லாததாலே இரவு சாப்பிடாத தன்னைத் தவிர எல்லோரும் மயங்கிக் கிடந்ததாகச் சொல்லுவான். இரவு நீ உணவை மறுத்தது பலருக்குத் தெரியும். உணவில் மயக்க மருந்தைக் கலந்த மற்றவர்களுக்குக் கொடுத்துவிட்டு நீ நகைப் பெட்டியைக் கிளப்பிக் கொண்டு போயிருக்கலாம்'' என்பேன்.

''ஆனால்... ஆ...''

''வீட்டில் எல்லோருமே இப்போது மயக்கத்தில் தான் இருப்பார்கள். என் கைங்கர்யம். நீ உணவு வேண்டாம் என்றதால் உனக்கு மட்டும் தூக்க மாத்திரை தரும்படி ஆயிற்று. ''அப்புறம், அந்த மன்மதக் குரங்கின் விதி பற்றிச் சொல்லி முடிக்கவில்லையே. என் புகாரின் மேல் அவனை விசாரிப்பார்கள். நீ தான் பூமிக்குள் கிடப்பாயே. உன்னையும் காட்ட முடியாது. நகையையும் காட்ட முடியாது. நகைக்காக அவன் உன்னை தீர்த்து விட்டானோ என்று ஒரு கொடி காட்டி விடுவேன். அவ்வளவுதான், போலீஸ் அவனைப் பேயாய்ப் பற்றிக் கொள்ளும். பிறகு என்ன தூக்குக்குத் தப்பினாலும் இந்த வில்லங்கத்திலிருந்து மீண்டு வருமுன் அவன் உண்டு இல்லை என்று ஆகிவிடுவான்.

''என் அன்பான மருமகளே, இதையெல்லாம் நான் உனக்கு ஏன் சொல்லுகிறேன் தெரியுமா? பெட்டியிலிருந்து வெளியே வரமுடியாமல் என் மகன் அருகில் கிடந்து நீ அணு அணுவாய் உயிரை விடும்போது அதைச் சும்மா விடக்கூடாது. கடைசி வினாடி வரை உனக்கும் அந்தத் தறுதலைக்கும் நேர்ந்த கதி பற்றி எண்ணி எண்ணிக் கதறிக் கதறித் துடித்துத் துடித்து, நீ சாக வேண்டும். அதற்காகத்தான்'' என்று முடித்தார் சேதுபதி.

என்ன பயங்கரம்...! ஆனால், ''ஆனால், சூசை அப்படியெல்லாம் பொ...பொய் சொல்ல மா... மாட்டான்'' என்றாள் மீரா சற்று நம்பிக்கையுடன்.

உரக்க சிரித்தார் சேதுபதி. ''ஹா... ஹா... ஹா...'' என்று பேயச் சிரிப்பு.

தூக்க மாத்திரையின் சக்தியால் மயங்கியிருந்த மீராவின் அறிவுக்குக் கூட சசிகாந்தன் கூறிய அந்த நெறியை அவரிடம் அப்போது கண்டுகொள்ள முடிந்தது. 'வெறி' என்பது தவிர அதற்கு வேறு மாற்று வார்த்தையே கிடையாது அவ்வளவு காலமாக நாசூக்கான ஒரு முகமூடியின் பின்னே மறைத்து வைக்கப்பட்டிருந்த அந்த வெறி, அன்று திரை கழன்று விழுந்துவிட, அப்பட்டமாய்த் தன் பயங்கரமான கோரைப் பற்களைக் காட்டி அவளை அச்சுறுத்தியது.

சுடுகாட்டில் கொடும் புலியிடம் மாட்டிக் கொண்ட சிறுவனைப் போல நடுங்கிப் போனாள் மீரா.

மீராவின் அஞ்சிய பார்வை சேதுபதிக்கு ஆனந்தமாக இருந்ததோ என்னமோ நன்றாகவே சிரித்து முடித்தார். ''என்ன சொன்னாய்? சூசை பொய் சாட்சி சொல்ல மாட்டானா? கட்டாயம் சொல்லுவான். நான் என்னென்ன சொல்லச் சொல்லுகிறேனோ அதையெல்லாம் அப்படியே சொல்லுவான்'' என்றார் எக்காளத்துடன்.

''ஆ... ஆனால் கூட ஒரு... கொ...ம், ஒருவர்க்காக... ஒருவரைச் சாகடிக்க அவன் உடந்தையாய் இருக்க மாட்டான்...'' கஷ்டப்பட்டுக் கோர்வையாக உரைத்தாள் அவள்.

அவர் மீண்டும் சிரித்தார். ''கொலை என்று சொல்லக்கூட குழந்தைக்கு வாய் வரவில்லையாக்கும். பரவாயில்லை. நான் சொல்லுகிறேன். ஒரு கொலைக்கு உடந்தையாக இருக்க சூசை சற்றும் தயங்க மாட்டான். ஏனென்றால், அவன் ஏற்கனவே ஒரு கொலை செய்த கொலைக்காரன்'' என்று அறிவித்தார்.

சூசை சட்டென மிரண்டு, ''அய்யா, அய்யா, அது நான் வேணுமின்னு செய்தது இல்லீங்களே, அய்யா அதை யார் கிட்டயும் சொல்ல மாட்டேன்னீங்களே.

அதுக்காகத்தானே உங்கிட்டே நாய் மாதிரி விழுந்து கிடக்கிறேன்'' என்று பதட்டத்துடன் மொழிந்தான்.

''இவளிடம் சொல்வதற்கு என்னடா? சற்று நேரத்தில் சாகப் போகிறவள்'' என்றார் அவர் அலட்சியமாக.

நான் சாகப் போகிறேனா? ''மாட்டேன்'' என்றாள் மீரா தெளிவாக.

சூசை மேலும் அதிர்ந்து, ''அய்யா, அந்த சசிகாந்தையா தொந்திரவு தாங்காம அம்மா விருப்பமாத்தான் சின்னய்யாகிட்ட போறாங்கன்னீங்களே. இப்ப மாட்டேன்னு சொல்லுராங்களேய்யா...'' என்றான் கலக்கத்துடன்.

''அவள் விருப்பத்தைப் பற்றி என்னடா, கழுதை? அவள் கேசவனோடு ஒரே பெட்டிக்குள் அடைப்பட்டுத்தான் ஆக வேண்டும். அது என் விருப்பம். நான் சொல்லுகிறபடி செய்யாவிட்டால் உன்னைப் பிடித்துக் கொடுத்து விடுவேன்'' என்று மிரட்டினார் சேதுபதி.

அரண்டு போய், ''உங்க உத்திரவு அய்யா...'' என்று சுற்றிலும் மண்ணை விலக்கத் தொடங்கினான் சூசை.

ஊகூம் இனி இங்கே இருப்பது தப்பாகிப் போகும. சசியைப் பாராமல் சாவதாவது? முடியாது. பெருமுயற்சி செய்து எழுந்த மீரா இரண்டு எட்டு எடுத்து வைக்குமுன் கால் தடுமாறிக் கீழே விழுந்தாள்.

சேதுபதி கெக்கலி கொட்டிச் சிரித்தார். ''எங்கேடி போய் விடுவாய்? முழுசாக இரண்டு மாத்திரை! மாமன் பாசமாய்ப் பால் கொணர்ந்து கொடுத்தார் என்று நினைத்தாயோ, சிறுக்கி துக்கிரிக் கழுதை! உன் மேல் ஆசைப்பட்ட பாவம்; ஆயிரம் ஆண்டு வாழ வேண்டிய என் ஆசை மகன் அற்பாயுளில் போனான். நீயானால், இன்னொருத்தனிடம் இளித்துக் கொண்டு நிற்கிறாயா? அந்தப் பிச்சைக்காரப் பயல் இந்தக் கன்னத்தில் தானே கிள்ளினான்? இந்தக் கன்னத்தில் தானே கிள்ளினான்?''

ஒவ்வொரு கேள்விக்கும் சுளீர் சுளீர் என்று மீராவின் கன்னத்தில் பேயறையாய் அறைந்தார். அவரது கச்சல் உடம்புக்குள் அவ்வளவு பலம் எங்கிருந்த வந்ததோ? மீராவின் காதுகள் அடைத்துக் கன்னங்கள் தீயாய் எரிந்தன. கண்களில் வலி மிகுதியால் கண்ணீர் பெருகியது.

எதிர்க்கவோ அடியைத் தடுக்கவோ தோன்றாமல் அவன் நின்ற நிலை தாளாமலோ என்னவோ ''வேண்டாங்கய்யா பாவம்'' என்றான் சூசை. என்ன இருந்தாலும் எசமானியாய் நடத்திப் பழகியவன் ஆயிற்றே.

''என்னடா பாவம்? என்னால் முடியும் என்றால் உயிரோடு தோலை உரித்து உப்பைத் தடவிச் சுண்ணாம்புக் காள்வாயில் வைத்து சுட்டிருப்பேன். இன்னொருத்தரோடு இழைகிறாளா? ஆனால், நீ என்னடா இந்த நாய்க்கு வக்காலத்து உன்னிடமும் ஏதாவது...''

''அய்யோ, இல்லைங்கய்யா!'' என்று அலறி விட்டான் சூசை. ''யா...யாருக்காச்சும் கேட்டு விடுமோன்னுதான்..?'' என்றான் குரலில்

அச்சத்துடன்.

''எவனுக்கடா கேட்கும்? வீட்டில் உள்ளவர்கள் அத்தனை பேரும் இரவு முழுவதம் மட்டையாய்த் தூங்குவார்கள். அக்கம்பக்கம் என்று வீடும் கிடையாது. எவன் கேட்டு விடுவான்...? என்னடா திறந்தாயா?''

குப்பென்று ஒரு நெடி மீராவின் நாசியைத் தூக்கிற்று. வயிற்றைச் சுருட்டிக் குமட்டிக் கொண்டு வந்தது.

சூசையும் முகம் திருப்பினான்.

ஆனால், சேதுபதி எதையும் உணரவில்லை போலும்.

''திறந்தாய் என்றால் வாடா வந்து இவளைத் தூக்கி உள்ளே போட்டு மூடு... வா. இவள் வெளியே சுற்றிய காலம் போதும். அங்கே என் மகன் காத்திருக்கிறான்... இதை முன்னமே செய்திருக்க வேண்டும்... என் கண்ணப்பன்...'' என்று கடைசியாகத் தனக்குத்தானே முணுமுணுத்தார்.

இவ்வளவு நேரம் திகிலுடன் நின்றிருந்த மீரா, சூசை அருகில் வந்து கையைப் பற்றித் தூக்கியதும் அனிச்சை செயலாய் ஆபத்தை உணர்ந்து முரண்டத் தொடங்கினாள்.

சூசை தன் முழுப் பலத்தையும் காட்டினால் எப்படியோ?

அவனது கைகளுள் 'இது ஒரு கொலை' என்கிற பாதிப்பில் லேசாக நடுங்கிக் கொண்டு இருந்தன. மீராவின் திமிறலைச் சமாளிக்க மாட்டாமல் திணறினான்.

''அட... என்னடா, பூச்சிப் பிடிக்கிறாய்?'' என்று ஆத்திரத்துடன், சேதுபதியும் அருகில் வந்து ஒருபுறமாய் அவளைப் பற்றி இழுத்து வந்தார்.

சவப்பெட்டியின் அருகே வந்ததும் உள்ளே இருந்த எலும்புக் கூட்டைக் கண்டதும் பீதி வசப்பட்டு மேலும் முரண்டினாள் மீரா.

''தூக்கி உள்ளே போடு'' என்று சேதுபதி கட்டளையிட இருவருமாக மீராவைத் தூக்கினர்.

மூழ்குகிறவனின் கடைசி பலம் என்று சொல்வார்கள். மரணபயம் தரும் சக்தி அது.

ஏற்கனவே சேதுபதி கன்னங்களில் கொடுத்த அறைகளால் ஓரளவு விழிப்புற்றிருந்த மீரா. தன் இயல்புக்கு இரு மடங்கு பலத்துடன் திமிறி. இருவரையும் உதறித் தள்ளிவிட்டு ஒரு மானின் வேகத்துடன் அங்கிருந்து விலகி, ஓடத் தொடங்கினாள்.

அவளது திமிறலில் தடுமாறி பெட்டியின்மீது கிழவர் விழுகையில் அடிபட்டுவிடாமல் ஆதாரத்திற்காக அவர் கை ஊன்றிய இடம் அவருடைய பிள்ளையின் மண்டை ஓடு!

தொடு உணர்ச்சியால் திடுக்குற்றுப் பார்த்தவர், ''என் மகனே!'' என்று பயங்கரமாகக் கதறினார். அவரது கைகால்கள் ஒருதரம் பயங்கரமாக வெட்டின.

ஓடுகிற பெண்ணைத் துரத்தவா, அன்றி விழுந்த முதலாளியைத் தூக்கவா என்று சற்றுத் திகைத்து, முதலாளியை சூசை தூக்கிபோது, அவர் தொய்ந்திருந்தார்.

வெறும் எலும்புக்கூடாக மகனைப் பார்த்ததும், மண்டை ஓட்டையே பற்றி விட்டதுமான அதிர்ச்சி, பெருமளவுமருந்துகளில் வாழ்ந்திருந்த சேதுபதியின் உயிரைக் குடித்திருந்தது.

தன்னை யாரும் துரத்தவே இல்லை என்பதைக்கூட அறியாமல் கண் மண் தெரியாமல், 'ச்சீ ச்சீ' என்று மூச்சிரைக்க, இருமுறை விழுந்து எழுந்து ஓடிய மீரா யார் மீதோ மோதிக் கொண்டாள்.

இறுகப் பற்றிய கரங்களில் இருந்து விடுபட வலைப்பட்ட புழுவாய்த் துடித்தவள். ''ஷ். நான் தான் மீரா'' என்ற சொல்லில் அடங்கி அவன் மார்பில் புதைந்தாள்.

சசிகாந்தனைப் பொறுத்த வரையில், அவனால் சேதுபதியை ஒரு பெரிய மனிதராய் ஒப்புக் கொள்ள முடியவில்லை.

மீராவைப் போல, அவனுடைய பெரியன்னையைப் போல் அவரை முழுமையாக நம்ப அவனால் இயலவில்லை.

ஆனால், அவர்மீது என்னவென்று குற்றம் சாட்டுவது? அதுவும் அவர் என்ன செய்யக்கூடும் என்று அவனுக்கே புரியாதபோது? கூடவே அவரும் செல்வாக்குள்ளவர் அந்தப் பகுதியில் வாழ்பவரும் கூட.

எனவே, போலீசுக்குப் போகும் எண்ணத்தைக் கைவிட்டான்.

ஆயினும் அவன் மனம் குறுகுறுத்தது. என்னவோ நடக்கப் போகிறது. அது என்ன?

மீராவை அடித்து சித்திரவதை செய்யக் கூடுமோ என்று சிந்தித்துப் பார்த்தான். ஆனால், வீடு நிறைய வேலையாட்களை வைத்துக் கொண்டு - அதுவும் அவளே எஜமானியாக அமர்த்தியவர்களையும்கூட வைத்துக் கொண்டு அது சாத்தியம் இல்லை என்ற முடிவுக்கு வந்தான்.

ஓர் உயிர்க் கொலையை அவன் எதிர்பார்க்கவில்லை. அதுவும் அவன் அவரிடம் நேரடியாக அப்படி எச்சரித்துவிட்ட பிறகு? ஆனால், எச்சரிக்கும்போதும் கூட அந்த எல்லை வரை அவர் துணியக்கூடும் என்று அவன் கற்பனையில் கூட காணவில்லை.

பின்னே?

சேதுபதி அவ்வளவு எளிதாக மீராவின் விருப்பத்துக்கு விட்டுக் கொடுத்ததை அவனால் கொஞ்சமும் நம்ப முடியவில்லை.

எனவே ஒரு பெரிய துப்பறியும் நிறுவனத்தின் மூலம் அவரது பங்களா, தோட்டம் எல்லாம் கண்காணிக்க ஏற்பாடு செய்தான்.

ஊருக்கு வெளியே தனியாகக் கட்டியிருந்த அந்த வீட்டையும் பெரிய

வெளிப்பரப்பையும் பிறர் அறியாமல் கண் காணிப்பது எளிது இல்லைதான். ஆயினும் ஆடு மேய்க்க சுள்ளி பொறுக்க மரத்தின் மேல் இலை பறிக்க என்று வேடமிட்டு, துப்பறியும் நிறுவனத்தினர் பெரும் வேலை செய்தார்கள்.

ஆனால் உள்ளே?

நாகேந்திரனுக்கு அங்கே பழக்கப்பட்டிருந்த ஒரு பெண்ணைப் பிடித்தார்கள். அவள் மூலம் அவ்வப்போது விவரம் அறிய முடிந்தது. ஆனால், அறிந்த வரையில் சந்தேகம் கொள்ள ஒன்றுமே இல்லாமல் இருந்தது.

கடைசியாக அன்று காப்போர் இருவரும் கேட்டில் சாய்ந்தபடியே உறங்கியது முதல் துப்பைத் தந்தது. அருகில் சென்று பேசி உலுக்கிப் பார்த்ததில் அவர்கள் மயக்க மருந்து, கொடுக்கப்பட்டிருக்கலாம் என்று அறிய முடிந்தது.

உள்ளிருந்த பெண் செல்வியிடமிருந்து தகவல் இல்லாமல் போகவும், சசிகாந்தன் பயந்து போனான்.

துப்பறியும் நிறுவனத்தினர், சட்டத்தை மீறி உள்ளே புகுந்ததால் நிறுவனத்தின் லைசன்ஸ் போய்விடும் என்று மறுக்கவே அவன் தனியனாகத் துணிந்து கேட் ஏறிக் குதித்து உள்ளே சென்றான்.

மீரா குதிகால் பிடரியில பட ஓடி வந்த விதம் சரியான நேரத்தில் வந்தோம் என்ற நிம்மதியைத் தந்தது.

ஆனால், மீராவைத் தொடர்ந்து யாரும் வராதது வியப்பை அளித்தது. சுற்றிலும் ஒரு கண் வைத்தபடியே மீராவை ஆறுதல் படுத்தி விசாரித்தான்.

மீராவுக்கு அவனது அருகாமை தைரியத்தைத் தந்தபோதும் அங்கிருந்து வெளியேறிவிடத் துடித்தாள். ஒரு கொடூரமான சாவின் வாயில் வரை சென்று திரும்பியவள் அல்லவா?

ஆனால் அந்தச் சமயம் மீராவை அழைத்துச் செல்வது பிரச்சினைகளை உருவாக்கக் கூடும் என்று சசிகாந்தன் எண்ணினாள். சேதுபதி எந்த அளவுக்கும் இற[illegible]கூடியவர்; ஏதாவது நகைகளை ஒளித்து விட்டு இவர்கள் திருடிச் சென்றதாகக் கூடச் சொல்லக் கூடுமே.

மீரா சொன்ன விவரமும் அவனது எண்ணத்தை உறுதிப்படுத்தியது. சேதுபதியை நேரே பார்த்துப் பேச வேண்டிய அவசியத்தை உணர்ந்தான். மீராவையும் அழைத்துக் கொண்டு சமாதி இருந்த இடத்துக்குச் சென்றான்.

அவன் கையைப் பிடித்துக் கொண்ட அந்தத் தைரியத்தில் உடன் சென்றாள் மீரா.

சசிகாந்தனைத் தாக்குவார்களோ என்று ஒரு கணம் அஞ்சினாள். ஆனால், உடல் பலத்தால் இவனால் அந்த இருவரையும் வெல்ல முடியும் என்ற ஆறுதலும் இருந்தது.

ஆனால், அங்கே அந்த இருவரில் ஒருவர்தான் இருப்பது தெரிந்ததும் இவர்கள் இருவரும் அதிர்ச்சி அடைந்தார்கள்.

இந்த மரணம் இப்போது வெளிப்படுவது சிக்கலை உண்டாக்கும் என்பதைச் சசிகாந்தன் உணர்ந்தான். மீராவின் பெயர் அடிபடும்... கணத்தில் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான்.

ஏற்கனவே சேதுபதியிடம் பயந்து வாழ்ந்தவன் சூசை. கண்ணெதிரே அவர் திடுமென இறந்த விதத்தில் மிரண்டு போனான். நடந்த சம்பவங்களின் தாக்குதல் வேறு. இப்போது சசிகாந்தன் அதட்டிப் பேசவும் அரண்டு போனான்.

''பெரியவர் இறந்த போது நீ மட்டும் தானே கூட இருந்திருக்கிறாய். எப்படி இறந்தாரோ, அது உன் பொறுப்புதான். நீ தான் மாட்டிக் கொள்ளப் போகிறாய்?'' என்று சசிகாந்தன் கூறவும் பீதியுடன் நடுநடுங்கினான்.

பிறகு சூசைக்கு இரங்குவதுபோல, ''ஆனால், உன்னைப் பார்த்தாலும் பரிதாபமாகத்தான் இருக்கிறது. ஆனால், போலீஸ், பாவம் பார்க்காதே'' எனவும் சசிகாந்தனின் காலடியிலே விழுந்து விட்டான் சூசை.

அவனை எழுப்பி, ''இதோ பார் சூசை உன்னையும் ஒரே வழியில்தான் காப்பாற்ற முடியும். இது போலீஸ் வரை போனால் துருவித் துருவி உன் பழைய கொலைவரை கிளறி எடுத்து விடுவார்கள். இதற்கு இல்லை என்றாலும், அதற்குத் தண்டனை நிச்சயம்'' என்று கூறி நிறுத்தினான் சசிகாந்தன்.

''அதை நான் வேணுமின்னு செய்யலீங்க. சும்மா கோவத்திலே ஒரு தட்டு தட்டினேன். அவ்வளவுதான்'' என்று அழுதான் சூசை.

''மீரா கூட அப்படித்தான் சொன்னாள். இப்போது நாங்கள் இருவரும் உன்னை நம்பத்தான் செய்கிறோம். ஆனால், போலீஸ் நம்பாதே. அதனால் ஒரு காரியம் செய்யலாம். பெரியவர் சாவு போலீஸ் வரை போக வேண்டாம். இதுபற்றி நீ எதுவும் பேசாதே. பழைய விஷயம் போல இதையும் மனதில் வைத்துப் பூட்டிவிடு.''

''ஆனாக்கா... அய்யா...?'' என்று சேதுபதியின் உடலைக் காட்டினான் சூசை.

''இரு சொல்கிறேன்... காலையில் இந்த இடம் சுத்தம் செய்ய யாராவது வருவார்கள் இல்லையா?'' என்று கேட்டான் சசிகாந்தன்.

சூசை, மீரா இருவருமே தலையாட்டினர்.

''வள்ளிக்கிழவி வருவாள்'' என்றான் சூசை.

''சரி அந்த வள்ளிக்கிழவியே இவர் இறந்து கிடப்பதைக் கண்டுபிடிக்கட்டும். நீங்கள் இருவரும் கப்சிப்பென்று அவரவர் இடத்திற்குச் சென்று விடுங்கள். முதலில் பெட்டியை மூடி, பழைய மாதிரியே மணலைப் பரப்பி மூடிவிடு. ஏதாவது சந்தேகம் வந்தால் உன்னைத்தான் முதலில் பிடிப்பார்கள். நீதானே மீராவை அந்தப் பெட்டிக்குள்ளே போட்டுக் கொல்லப்பார்த்தாய்?''

''அய்யோ, நான் இல்லைங்க. அய்யா மிரட்டினதாலேதான்...'' என்று அவசரமாய்க் காரணம் சொன்னான் சூசை.

''ஆனால், அதை ஒப்புக் கொள்ள அவர் இருக்க மாட்டார் பார், அதனால்

நீயோ மீராவோ இங்கே வரவே இல்லை என்று ஆக்கிவிட்டால், அவராக இரவில் மகன் சமாதியைப் பார்க்க வந்துவிட்டு, திடுமென வந்த ஹார்ட் அட்டாக்கில் இறந்திருக்கிறார் என்று ஆகிவிடும். மீரா, நீ இந்த நகைப் பெட்டியை ஸேஃபில் பழைய மாதிரி வைத்துவிடு. அது வெளியே வந்ததாக தெரிய வேண்டாம்'' என்றான் சசிகாந்தன்.

சசிகாந்தனின் கதையைச் சூசை கெட்டியாகப் பற்றிக் கொண்டான். அவனுக்கு உயிர் அளிக்கும் கதை அல்லவா?

துப்பறியும் நிறுவனத் தலைவரும் சசிகாந்தன் கூறியபோது,, அவன் கையாண்ட விதமே சரி என்றார்.

மூன்றாம் நாள் காரியத்தன்று வக்கீல் உயிலைப் படித்தார்.

''எனக்கு எதுவும் வேண்டாம். அப்படி அவர் எனக்கு எழுதி வைத்திருந்தால் கூட தர்மத்துக்கு மாற்றிவிடுங்கள்'' என்று மீரா ஒதுங்க முயன்றும் வக்கீல் விடவில்லை.

''உன்னைக்கூட வைத்துக் கொண்டுதான் உயிலைப் படிக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொன்னாரம்மா'' என்று இவளையும் உட்காரவைத்து விட்டார்.

நடேசன் நாக்கில் நீர் ஊறக் காத்திருந்தார்.

சேதுபதியின் நகைகள், சொத்துக்களின் விவரத்தை வாசித்து முடித்த வக்கீல் ஒவ்வொன்றாக இது இந்தக் கோயிலுக்கு, இது இந்த தர்மத்துக்கு என்றே சொல்லி வந்தார்.

கடைசியாக அந்த வீட்டையும், பாங்கில் டெப்பாசிட் செய்த ஒரு தொகையையும் குறிப்பிட்டு, ''இந்த டெப்பாசிட் பணத்தின் மூலம் வரும் வட்டியில் இந்த வீட்டு நிர்வாகம் செய்து மீரா இங்கே வசதியாக வாழலாம். ஆனால் பணத்தை எடுக்கவோ, வீட்டை விற்கவோ அவளுக்கு உரிமை கிடையாது. அவள் யாரையாவது திருமணம் செய்து கொண்டால் உடனே வீட்டை விட்டு வெளியேறி விடவேண்டும். மாற்றிக்கட்ட ஒரு சேலைகூட எடுத்துச் செல்லக்கூடாது. அது மட்டும் அல்ல. மீராவின் ஒழுக்கம் குறித்து அவர் நியமித்திருக்கும் டிரஸ்டிகளுக்கு நம்பிக்கை இருக்கும் வரைதான் இந்த வசதியும். அவளுடைய ஒழுக்கம் பற்றி டிரஸ்டிகளுக்கு ஒரு சந்தேகம் வந்தால் போதும் கட்டிய துணியோடு அவள் வெளியேறிவிட வேண்டியதுதான் என்று உயிலில் எழுதப்பட்டிருந்தது.

என்ன கேவலமான புத்தி இவருக்கு என்று அருவருப்புடன் முகம் கன்ற நினைத்தாள் மீரா. கூடவே சசிகாந்தன் கூறிய வெறியும் அப்பட்டமாகத் தெரிவதை உணர்ந்தாள்.

அவளுடைய தந்தைக்கு, மகளுடைய ஒழுக்கத்தைக் கேள்விக் குறியாக்கி அவலப்படுத்தி இருப்பது பற்றி ஒன்றும் தோன்றவில்லை போலும்.

''நன்றாகப் பார்த்துச் சொல்லுங்கள், வக்கீல் சார். எனக்கு ஓர் ஐந்து லட்சம் ரொக்கமாக எழுதியிருப்பதாகச் சொன்னாரே'' என்று திரும்பத் திரும்பக் கேட்டுத்

தன்னை மிகவும் கேவலப்படுத்திக் கொண்டார்.

ஒன்று தோன்ற, ''இது எப்போது எழுதியது என்று வக்கீலிடம் விசாரித்தாள் மீரா. ஒரு வேளை சசிகாந்தன் விவகாரம் பற்றி ஆத்திரத்தில் எழுதியிருப்பாரோ என்று நினைத்தாள் அவள்.

ஆனால், ''இது ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு எழுதியதம்மா'' என்று அந்த அற்ப செய்தியிலும் மண்ணைப் போட்டார் வக்கீல். ''ஆறு மாதத்துக்கு ஒரு தரம் படித்துக் காட்டச் சொல்லுவார். புதிய சொத்து ஏதும் சேர்ப்பார். மற்றபடி அப்படியே இருக்கட்டும் என்பார். சுமார் இருபது நாட்களுக்கு முன்தான் கடைசியாக படித்துக் காட்டினேன்.''

இருபது நாட்களுக்கு முன்!

சரியாக ஏழு நாட்களுக்கு முன் வாரிசாக நியமித்ததாகச் சொன்னதும் முப்பதுகோடி என்று கோடி காட்டியதும்... சேச்சே... என்ன பொய்! சசிகாந்தனிடமிருந்து அவளைப் பிரிக்கச் சொத்து ஆசை காட்டிப் பார்த்திருக்கிறார். பாசம் என்று மீரா எண்ணியது எவ்வளவு பைத்தியக்காரத்தனம்!

இந்த வஞ்சத்தை உள்ளே வைத்து வளர்த்தபடியே அவர் பரிவு பாசம் போலப் பேசி பழகியபோது அவள் கொஞ்சமும் கண்டு கொள்ளவில்லை!

எண்ணிப் பார்க்கையில் மிகவும் அவமானாக இருந்தது அவளுக்கு.

''இங்கே வாழ எனக்கு விருப்பம் இல்லை. மிஸ்டர் ராமன். ஆனால், இந்த வேலையாட்கள்?'' என்று கேட்டாள்.

''இந்த வீட்டுப் பராமரிப்புக்கு ஆள் வேண்டும். டிரஸ்டிலிருந்து இவர்களுக்குப் பணம் வரும்'' என்று பதில் சொன்னார் வக்கீல் ராமன்.

''ஓ.கே. இனி நான் போகலாம் அல்லவா?'' என்று எழுந்தாள் மீரா.

''மீராக்கண்ணு, எங்கள் கதி?'' என்று அழத் தொடங்கினார் நடேசன்.

காது கேளாதவள் போல மீரா சசிகாந்தனிடம் சென்று ''போகலாமா?'' என்று கேட்டுக் கிளம்பினாள்.

தன் கைப்பையைக் கூட அவள் எடுத்துக் கொள்ளவில்லை. சேதுபதியின் உயிலைப் படித்த பிறகு, அவரது பணத்தில் வாங்கிய எதையும் தீண்டக்கூட அவளுக்கு மனம் வரவில்லை. தன்னுடைய ஆறு ஆண்டின் உழைப்பின் ஊதியமாகக் கூட எதையும் கொண்டுசெல்ல அவளுக்கு விருப்பம் இல்லை.

அவ்வளவு கொதிப்பும் அருவருப்பும் இருந்தபோதும் அந்த மாளிகையின் காம்பவுண்டைத் தாண்டியதுமே அந்த வீட்டு நினைவுகளும் பட்டுத் தெறித்த விலங்காய் மனதிலிருந்து கழன்றுவிடுவதை மீரா உணர்ந்தாள்.

ஆனால், ரத்த சம்பந்தம் உடையவர்களை அப்படி விட்டுவிட அவளால் முடியவில்லை.

தந்தைக்குத் தண்டனை தேவைதான் என்றாலும் சபடம் அறியாத தம்பி தங்கைகளை எண்ணுகையில் அவள் மனம் மிகவும் வேதனைப்பட்டது.

சற்று நேரம் பேசாமல் காரை ஓட்டினான் சசிகாந்தன். பிறகு, ''மீரா, உன் தகப்பனாருக்கு ஒரு வேலைக்குச் சொல்லியிருக்கேன். சம்பளம் ஆயிரத்து இருநூறுதான். ஆனால், 'ஓவர்டைம்' செய்து வருமானத்தை வெகுவாகப் பெருக்கிக் கொள்ளலாம். உழைப்பில் உண்மை இருந்தால் வேலை உயர்வில் தாராளமாய் இருப்பார்கள். வேகமாக உயர்ந்துவிடலாம். அவருக்கு வயது ஐம்பதுகூட ஆகவில்லை என்று நீ சொன்ன ஞாபகம், உழைக்கக் கூடிய வயதுதான். அவர் தன் பொறுப்பை உணர்ந்து செயல்பட்டால் மற்ற பிள்ளைகளைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை'' என்றான்.

அவளது வேதனை உணர்ந்து என்னவெல்லாம் செய்கிறான்!

விழிகளில் நீர் மல்க, ''இந்தக் கடனை எல்லாம் உங்களுக்கு எத்தனை பிறவி எடுத்து செலுத்தப் போகிறேனோ தெரியவில்லை சசி'' என்று நாத்தழுதழுக்க உரைத்தாள் மீரா.

ஸ்டியரிங் வீலி'ல் இருந்து ஒரு கையை எடுத்து, அவளது கரத்தைப் பற்றி ஒருதரம் அழுத்திவிட்டு, ''வேறு பிறவிக்கெல்லாம் போகிறாயே. நான் இந்தப் பிறவியிலேயே வட்டியும் முதலுமாய் உன்னிடம் வசூல் பண்ணிவிட அல்வவா உத்தேசித்திருக்கிறேன். எப்...ப்...படி... எல்லாம் தெரியுமா?'' என்று ஓரக் கண்ணால் அவளைப் பார்த்துக் குறும்பாய் கண் சிமிட்டி கேட்டு நகைத்தான் சசிகாந்தன்.

மனம் லேசாகிவிட அவளும் சிரித்தாள்.

சசிகாந்தனுடைய' பெரியன்னை வீட்டில் அவர்களுக்கு ஆரவாரமான வரவேற்பு இருந்தது.

அவ்வவவு பெரிய மனிதர்களுக்கு இக்கட்டில் கைகொடுக்கும் வாய்ப்பாக எண்ணி, மீராவைத் தன் வீட்டில் தங்க வைக்கப் பெருமிதத்துடன் இசைந்திருந்தார் ஜட்ஜ்.

அவருடைய மக்களும் வந்து விட்டிருக்க வீடு கோலாகலப்பட்டது.

மீரா சசிகாந்தனின் திருமணம் அமரிக்கையாக நல்லபடியாக நடந்தேறியது.

தன் தந்தையின் பேச்சில் அலட்டித்தனம் மறைந்திருப்பதைக் கண்டு மீரா ஆனந்தப்பட்டாள். கூடவே இது நீலைக்க வேண்டும் என்றும் இறைவனிடம் வேண்டிக் கொண்டாள்.

மாமனாரான சிதம்பரத்தின் பெருந்தன்மையும் அன்பையும் கண்டு அவரிடம் பெருமதிப்பு கொண்டாள்.

ராதையும் கிருஷ்ணனும் மிகுந்த மகிழ்ச்சியோடு திருமணத்தில் கலந்து கொண்டார்கள். அவர்களது குழந்தையின் பொக்கை வாய்ச் சிரிப்பில் எல்லோருமே மகிழ்ந்தார்கள்.

கார்த்திக் புத்தக நிலையம்
(KARTHIC BOOK SHOPPE)
50, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை - 600 004.
போன் : 4958186

சுற்றிலும் பார்க்கப் பார்க்க எல்லாவகையிலும் மீராவின் மனம் நிறைந்திருந்தது.

இரவின் தனிமையில் மீராவைத் தன் கை அணைப்பில் நிறுத்தி, சுட்டுவிரலால் அவளது உதட்டின் அளவை அளந்தபடி, ''பிறகு ஒரு நாள் அந்த 'ஓ' பற்றிக் கேட்கச் சொன்னேனே, நினைவு இருக்கிறதா?'' என்று சசிகாந்தன் கேட்டான்.

''என்ன?'' என்றாள் அவள் ஆனந்த மயக்கத்துடன்.

''ஓ'' என்று நீ வியப்புறும்போது உதடுகள் குவிந்து, கீழ் உதடு லேசாகத் திண்மையற்று முத்தமிட அழைப்பது போல இருந்தது. அன்று வெகு சிரமப்பட்டு என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டேன்'' என்றான் அவன்.

''ஓ'' என்று ஆச்சரிப்பட்டாள் அவள்.

அதை அவன் அழைப்பாக, ஏற்று அவளைச் சிவக்க வைத்தான்.

—— முற்றும் ——